
கல்கி

KALKI 29.8.1965 35காசு





உங்கள் அழகுக்கு புதுப் பொலிவை அளியுங்கள்!

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகித்தால் முகம் சோபையுடன் வழவழப்பாகத் தோற்றமளிக்கும்

உங்கள் முகத்திற்கு வசீகரிக்கும் பொலிவை அளியுங்கள். நல்ல அழகியாகத் தோற்றமளிக்க விரும்பும் எந்தப் பெண்மணியும் முதலில் செய்ய வேண்டியது அதுதான். எண்ணெய்ப் பசையில்லாத செளம்யமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகித்தால் உங்கள் சருமத்திற்கு மிருதுத் தன்மையும் பாதுகாப்பும் கிடைக்கும். அது சருமத்திலுள்ள பெரிய துவாரங்களை மூடி முகத்தில் 'எண்ணெய் வடியும் தோற்றம்' உண்டாகாமல் தடுக்கிறது... முகத்தில் கருப்புப் புள்ளிகள் உண்டாவதிலிருந்து பாதுகாப்பளிக்கிறது. பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தனியாக உபயோகித்தால் உங்கள் வதனம் இயற்கைப் பொலிவுடன் விளங்கும். இந்தக் க்ரீமைத் தடவி அதன்மீது பவுடர் போட்டுக்கொண்டால் பவுடர் ஒரேசீராகப் படிந்து மணிக்கணக்கில் கலையாமல் இருக்கும்.



பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகித்து உங்கள் அழகுக்கு மெருகூட்டுங்கள்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப்பட்டது)

JWT-P-3217

கல்கி



பிறருக்கு நல்லது செய்ய வேண்டும் என்று எவன் விரும்புகிறானோ, அவன் அந் தக்கணமே தனக்கு நல்லதைப் பெற்று விடுகிறான்.


—கன்பூஷியஸ்

பொருளடக்கம்

விசுவாவசு ஆவணி 13 — ஆகஸ்டு 29

3 — விவேகம் பெறுவார்களா?
5 — தருமத்துக்கு ஒரு திட்டம்
10 — இசை உலகம் வாழ்த்தும்....
18 — சேவைக்கு ஒரு சகோதரி
25 — சாதல் இல்லையேல் காதல்
34 — அவள் எங்கே?
38 — கந்தன் கருணை
43 — பல்சுவைப் பக்கம்
48 — சௌந்தர்ய மண்டலம்
52 — சுவையான சர்ச்சைகள்
55 — காலச் சக்கரம்
60 — அன்னை இட்ட தீ!
65 — வடாம் இட்ட வைபவம்
70 — ஜீவகீதம்
80 — காண்டாமிருகமும் காதலும்...

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



நான் சுதந்திர பொருளாதாரத் திட்டத்தை நம்புகிறவன்
பொருள் உற்பத்தி
பொருளாதார நிலை
நாங்கள் சோஷலிஸ்ட்டுகள்
"நாங்கள் இந்தக் கப்பலை மூழ்கிப் போக விட மாட்டோம்!"
மேத்தா
திட்டம்
PK



மலர் 25 ● இதழ் 5

தமிழ்த்திரு நாடுதன்னைப்
பெற்ற
தாயென்று கும்பிடடி —
பாப்பா

— பாரதியார்

விவேகம் பெறுவார்களா ?

மத்திய சர்க்காரின் உள்துறை மந்திரி ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தர் அவர்கள் தமது தொகுதியில் கீழ்க்கண்டவாறு பேசியதாகப் பிரசுரமாகியுள்ளது :

''இன்று நான்காவது ஐந்தாவது திட்டத்தைத் தயாரிப்பதில் நாடு ஈடுபட்டிருக்கிறது; அதற்கான செலவைப் பற்றிச் சிந்தனை செய்யப்படுகிறது. ஆனால் நான்காவது திட்டத்துக்கான தொகையை நிர்ணயிப்பதற்குமுன் இதுவரையில் அமுலான மூன்று திட்டங்களின் விளைவு என்ன என்பதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். நடைமுறையில் இந்தத் திட்டங்களில் நாம் காண்பது என்னவெனில், பணம் செலவழிக்கப்படுகிறது; ஆனால் அந்தச் செலவிலிருந்து வரவு எதுவும் கிடைப்பதில்லை. எவ்வித உபயோகமுமில்லாமலே செலவு செய்யப்படுகிறது.

''ஒரு திட்டத்துக்காகச் செலவிடப்படும் தொகையை அந்தத் திட்ட காலத்திலேயே திரும்பப் பெறுவதற்கு உரிய முறையில் திட்டங்களை உருவாக்க வேண்டும். அந்நிய நாடுகளிலிருந்து ஏராளமான தொகை கடன் வாங்கி நாம் திட்டங்களை நிறைவேற்றுகிறோம். இவ்வாறு ஏராளமாகச் செலவழித்தும், அதற்கேற்ப உற்பத்தி பெருகவில்லை. பொதுவாக, திட்டத்தில் எந்த ஓர் இனத்துக்காகவும் வழங்கப்படும் தொகை முழுவதும் அதற்கெனவே செலவிடப்படுவதில்லை; அதில் பெரும் பகுதி வேறு விதத்தில் விழுங்கப்பட்டு விடுகிறது.

''இதற்கு முக்கியமான காரணங்கள் இந்தக் காலத்தின் நிலையும், தொழில் சமூகத்தின் நடவடிக்கை — வேலைமுறை இவையும், அதிகாரத்திலுள்ளவர்களின் நடத்தையுமே யாகும். இந்த நிலை நீடித்தால் நமக்கு என்ன முடிவுதான் நேரும் என்பதையும், நாம் எத்தகைய நிலைமையுடன் மோத நேரும் என்பதையும் சொல்லி இயலாது.

''அமெரிக்காவிலிருந்து நமக்குக் கோதுமை வராவிடில் நம் மக்களில் லட்சக்கணக்கானவர்கள் மாண்டு போவார்கள். இந்நிலையில் நாம் சுதந்திரம் பெற்றிருப்பதன் பிரயோசனம்தான் என்ன?

''திட்டத்தின் எந்த ஓர் அம்சத்திலேனும் 25 சதவிகிதம் கட்டடச் செலவுக்கு ஒதுக்கப்பட்டால் 20 சதவிகிதம் துஷ்பிரயோகமாகிறது. ஐந்து சதவிகிதமே முறைப்படி செலவாகிறது. திட்டப் பணிகளுக்காக லட்சக்கணக்கான டன்கள் சிமெண்ட் செலவாவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இதில் 50 சதவிகிதம் கள்ள மார்க்கெட்டுக்குப் போகிறது. அதிகாரத்திலுள்ளவர்களின் வழியாகவேதான் இவ்வாறு கள்ள மார்க்கெட்டுக்குப் போகிறது.''

சர்க்காரின் வேலை முறைகளில் நேரடி விஷய ஞானமும், அநுபவமும் இருப்பதோடு அநுதாப உணர்ச்சியும் கொண்ட ஒருவரே இவ்வாறு கூறுகிறார்: இனியும் நான்காம் திட்டத்தைப் பிரம்மாண்டமாக அமைப்பது பற்றி எண்ணுவது அறிவுடைமையாகாது.

நான்காவது திட்டத்துக்கு 24 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடலாமா, 21 ஆயிரம் கோடி செலவிடலாமா, அல்லது 15 ஆயிரம் கோடி தான் செலவிடலாமா என்றெல்லாம் விவாதிப்பதைவிடத் திட்டத்தையே அடியோடு கிடப்பில் போட வேண்டும் என்பதுதான் நந்தா அவர்களின் பேச்சு தரும் பாடம்.

நாட்டின் பொருளாதார நிலையை மட்டும் வைத்தே நிலைமையை ஆராய்ந்தாலும் திட்டத்தை வெட்ட வேண்டுமெனில் அதைவிட அபாயமான தேசப் பாதுகாப்புப் பிரச்னையும் இப்போது சேர்ந்துள்ளது. சுதந்திர தினத்தன்று பிரசுரமான பிரதமரின் உரையின்படி, பாகிஸ்தான் தற்போது அசல் யுத்த முஸ்தீபுடனே படையெடுக்க உத்தேசித்திருப்பின், நாடு மிகவும் நெருக்கடியான நிலைக்கு வந்துள்ளது. இந்தச் சமயத்தில் புதிய ஐந்தாண்டுத் திட்டத்தை வகுப்பது, மொழிப் பிரச்னையில் புது ஏற்பாட்டை அமுல் செய்வது இவையெல்லாம் அறிவுக்குப் பொருந்தாத காரியங்கள். வெளிநாட்டினரின் உதவி கொண்டு சமாளிக்க வேண்டிய பாதுகாப்புப் பிரச்னை தீவிர நிலை அடைந்திருக்கும்போது, உள்நாட்டுப் பிரச்னைகளில் புதுச் சிக்கல்களை உண்டாக்கித் திட்டங்களுக்காக மக்களின்மீது புது வரியைத் திணிப்பதும், சுதேசிப் பித்துக்காகத் தென்னாட்டின் மீது ஹிந்தியைத் திணிப்பதும் அனர்த்தத்தின் எல்லையாகும்.

தற்போது சர்க்கார் முழுமூச்சுடன் ஈடுபட வேண்டிய ஒரே காரியம், நடைமுறைக்குப் பொருந்தாத அந்நியக் கொள்கையைக் கைவிட்டு, சமயத்துக்குகந்த புதிய நடவடிக்கைகளைத் தைரியமாக மேற்கொள்ளுவதுதான். அமெரிக்க ஜனாதிபதி ஜான்ஸன் அவர்களுக்கு உபத்திரவம் தரும் கூட்டத்தோடு சேர்ந்து நாம் கோஷம் போடுவதற்கும், வியட்நாமில் அவர் என்ன செய்ய வேண்டுமென்று உபதேசிப்பதற்கும் இதுவல்ல சமயம். அந்நியக் கொள்கையில் முன்பே செய்திருக்க வேண்டியவற்றை நாம் இப்போதேனும் செய்ய வேண்டும். முன்பு செய்யத் தவறியதற்காக இருமடங்கு வேகத்தோடு இப்போது செய்ய வேண்டும். மற்ற எல்லா விஷயங்களையும் ஒதுக்கி வைத்து விட்டு, மேல் நாட்டு வல்லரசுகளுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு, உறுதியான ராணுவ உடன்பாடு பெறுவதொன்றே இப்போது சர்க்காரின் லட்சியமாக இருக்க வேண்டும். யோசனையின்றி ருஷியாவின் 'சாசுவத சிநேக'ப் பேச்சை அப்படியே நம்பி ருஷிய உதவியை நாடுவதும், அதன் மூலம் நாம் மேல்நாடுகளின் உறவை விட்டுவிட நினைப்பதாக ஓர் அபிப்பிராயத்தை உண்டாக்குவதும் மகத்தான தவறாகும். இந்தக் கொள்கையை நீடிப்பது, நம்மால் இயக்கத் தெரியாத ஒரு கப்பலில் ஏறிக் கடலைக் கடக்க நினைக்கும் மூட சாகஸமேயாகும். திட்டத்துக்கு 'விடுமுறை' அளிக்க வேண்டும் என்பதற்கு இதுவரையில் கூறிவந்த காரணங்களையெல்லாம் விட முக்கியமானது நாட்டின் இன்றையப் பாதுகாப்பு நிலையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி.

சிறைப்படுத்த வேண்டிய அவசியமில்லாதவர்களைச் சிறை வைப்பதற்குத்தான் இதுவரை 'நெருக்கடி காலச் சட்டம்' பிரயோசனமாயிருக்கிறது. இவர்களில் பலர் வெளியே இருந்தால் தேசத்துக்கு உபயோகமான பணி புரிய முடியும். உண்மையாக நெருக்கடி காலத்தில் என்ன செய்ய வேண்டுமோ அதை இப்போதேனும் சர்க்கார் செய்து காட்ட வேண்டும். ஆட்சியாளர்கள் தாங்கள் செய்த தவறுகளை மனமார ஒப்புக் கொண்டு, தயக்கமில்லாமல் — வறட்டு ஜம்பமில்லாமல் கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். தள்ளிப் போடக் கூடிய எல்லாப் பிரச்னைகளையும் தள்ளிப் போட வேண்டும். வெளி உதவியைப் பெருமளவில் எதிர்பார்க்கும் டம்பாச்சாரித் திட்டங்களையெல்லாம் நிறுத்திவைக்க வேண்டும். சுய முன்னேற்றத்துக்காகவும், கட்சி முன்னேற்றத்துக்காகவும் செய்கிற தந்திரங்களையெல்லாம் கைவிட வேண்டும். பிரச்னையின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு அதைச் சமாளிப்பதற்கு விழிப்புடன் பாடுபட வேண்டும். மற்ற எல்லா விவகாரங்களையும் இரண்டாம் பட்சமாகக் கருதி, இது ஒன்றில் விவேகமாக என்ன செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்ய வேண்டும். நெருக்கடி நிலைமையில் சர்க்காரை எதிர்க்கக்கூடாது என்ற 'நியாயத்தை' எதிர்க்கட்சியினருக்குச் சுட்டிக்காட்டி, பாதுகாப்புக்குச் சம்பந்தமில்லாத இனங்களிலெல்லாம்கூட ஆட்சியாளரின் திட்டங்களையே அமுல் செய்வதற்குப் பதில், 'இது உண்மையாகவே நெருக்கடி நிலைமை; எனவே, பாதுகாப்புக்குச் சம்பந்தப்படாத எந்த விவகாரத்தையும் இப்போது நாம் வற்புறுத்தக் கூடாது' என்ற விவேகத்தைக் காங்கிரஸார் பெற வேண்டும்.

இந்தியா-பாகிஸ்தான் எதிர்காலம்

காஷ்மீரத்துப் படையெடுப்பு பற்றி அயூப் கான் அவர்களுக்கு எதுவும் தெரியாது என்பதை இந்தியா நம்புவதற்கில்லை. எனினும், பாகிஸ்தான் நமது ஆத்திரத்தைத் தூண்டி விடுகிற முறையில் நடந்து கொண்டு நட்புக்கான முயற்சிகளுக்குக் குந்தகமான நடவடிக்கைகள் எடுப்பதைக் கண்டு நாம் பழைய கட்ச் — உடன்பாடிக்கையை ஏற்க மறுக்கக் கூடாது. இப்போதில்லாவிடினும் உரியகாலம் வரும்போது கட்ச் — உடன்படிக்கையை அமுல் செய்ய வேண்டும். அவ்வப்போது ஏற்படும் கோபத்துக்கும், தவறான நடவடிக்கைகளுக்கும், ஆத்திரத்தைத் தூண்டிவிடும் செயல்களுக்கும் அப்பாற்பட்டது இந்தியா — பாகிஸ்தான் இவற்றின் எதிர்காலம். இரு நாடுகளில் எதுவும் நாசமாகாமலிருக்க வேண்டுமென்பதை நோக்கமாகக் கொண்டே நாம் முன்னேற வேண்டும்.

தருமத்துக்கு ஒரு திட்டம்

ராஜாஜி

இம்மாதம் 20ந் தேதி கோசாரியனுகிய கண்ணனின் ஜன்ம தினம் கொண்டாடப்பட்டது. முப்பதாம் தேதி விநாயக சதுர்த்தி கொண்டாடி விக்நேசுவரனைப் பணியப் போகிறோம். கண்ணனும் கணேசனுமே நம் தருமத்தைக் காத்து வரும் தெய்வங்கள். இது நமது தேசத்தின் நீண்டகால நம்பிக்கை.

பிரபஞ்சத்தில் எல்லாமே ஒரு வட்டமாகத்தான் சஞ்சரிக்கின்றன. எனவே, முன்பு விட்ட இடத்தை மீண்டும் தொட்டுத்தானுக வேண்டும். பௌதிகத்துக்கு மட்டுமின்றி ஆன்மீகத்துக்கும் இதுவே பொருந்தும். தருமம் சீர்குலைந்து போகும் காலத்துக்குப் பின்பு மீண்டும் அது தலைதூக்கிப் பழைய நிலையைப் பெறும் காலம் வந்துதானுக வேண்டும். நம்முடைய அன்புக்குரிய புனித தேசத்தில் பதினைந்து ஆண்டுகளாகப் பண வெறி தலைவிரித்தாடி விட்டது. இப்போது ஒரு தார்மிகப் புரட்சி ஏற்படுவதே பிரகிருதி நியதி என எதிர்பார்க்கலாம். மக்கள் யாவரும் இந்தத் தார்மிகப் புரட்சிக்காக உழைக்க வேண்டும் என்று ஸ்ரீ ராஜ்மோஹன் காந்தி விரும்புகிறுர். அதற்கு இப்போது மக்களின் இதயம் தயாராக இருக்கிறது என்றும் நம்புகிறுர்.

நிகழ்காலத் தீமைகளை யெல்லாம் பார்க்கும் போது நான் அடிக்கடி, 'ஆண் பெண் அடங்கலும் மக்கள் யாவரும் தாங்கள் நல்லவர்களாகவே இருக்க வேண்டும், நேர்மையாகவே நடக்க வேண்டும் என்று உறுதி கொண்டால் நாட்டில் அந்த க்ஷணத்திலிருந்தே மகிழ்ச்சி பொங்குமே' என்று எண்ணுவதுண்டு. இந்தியா இவ்வாறு நடந்து காட்டினுல் அது உலகுக்கே எத்தகைய அற்புத வழிகாட்டியாக அமையும்! பழைய தார்மிக விதிகளை அநுசரிப்பதாலும், நேர்மையாக வாழ்வதாலும் நாட்டில் வறுமையும், துன்பமும் அதிகமாகி விடும் எனச் சிலர் எண்ணுவது தவறு. தரும வாழ்வு வாழ்ந்தாலே தேசத்தின் பரம மங்களமான காலத்தைக் காண்போம். தருமத்தின் மூலம் நாம் மகிழ்ச்சியைக் கண்டால், மற்ற நாடுகளும் நம்மைப் பின்பற்றும்; நம்மோடு நட்புக் கொள்வதை ஒரு கௌரவமாகக் கருதும்; இப்போதுபோல் நம்மிடமிருந்து விலகுவதற்கு அவை எண்ண மாட்டா.

நல்லவர்களாகவும், நேர்மையாகவும் இருப்பதனுல் நமக்கு ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளையும் தாங்கிக் கொள்கிற உறுதி தருமப்புரட்சிக்கு அத்தியாவசியம். இவ்வுலகில் எவ்வழியிலாவது துன்பம் அண்டாத வாழ்வே கிடையாது. தருமத்தை விட்டு வாழ்ந்தாலும் துன்பம் அடையத்தான் செய்கிறோம். எப்படியும் ஏதோ ஒரு துன்பத்தைத் தாங்கித்தான் வாழ்ந்தாக வேண்டும். இவற்றில் தரும வாழ்வுக்காகத் துன்பத்தைத் தாங்கிக்கொள்வதில் துன்பத்துடனேயே ஒரு பெருமையும், திருப்தியும் சேர்ந்திருக்கின்றன. எனவே மற்றத் துன்பங்களை விட இதற்காகத் துன்பப்பட மக்கள் தயாராக வேண்டும்.

நான்காவது திட்டத்தை நான்கு கால்களாலும் ஊன்றி நிலைநிறுத்த யத்தனம் செய்து வருகிற பொருளாதார நிபுணர்கள் அடுத்த இந்தியத் தலைமுறையினரின் சந்தோஷ வாழ்வுக்காக 'அற்புதம்' சாதிக்க முடியுமென நம்புகிறுர்கள். நானே அந்த வழியில் இன்பம் ஒருநாளும் கிட்டாது என்கிறேன். வரிகளையும், கட்டுப்பாடுகளையும் பெருக்குவதால் நிச்சயமாக நாட்டுக்கு மகிழ்ச்சி கிட்டாது என்று அடித்துக் கூறுகிறேன். எல்லா சமயங்களும் கூறுகிற எளிய தரும நெறி ஒன்றே மகிழ்ச்சிக்கு வழி. இதை மக்கள் பின்பற்றுவதற்கு இன்னமும் காலம் தாழ்ந்துவிடவில்லை. ஒருவருக்கொருவர் நல்லவர்களாக நடந்து கொள்ள வேண்டும், உண்மையாக ஒழுக வேண்டும் என்று சங்கற்பம் செய்து கொண்டு மக்கள் தங்கள் ஆற்றலுக்கேற்ப உழைத்தால் பொருளாதாரம் தானுகவே சீராகும். பொருளாதாரத்தைப் பற்றி இன்றுபோல் கவலைப்பட வேண்டிய தேவையிராது. இதைச் செய்வது அசாத்தியமல்ல. ஆனுல் இதற்காக ஓரளவு தியாகம் செய்ய வேண்டியிருக்கும். இன்றும் சர்க்காரின் வரிகளுக்காகவும் கண்ட்ரோல்களுக்காகவும் எவ்வளவோ தியாகம் செய்துதான் வருகிறோம். எனவே சரியான லட்சியத்துக்காகத் தியாகம் செய்யத் தயங்கலாகாது.

தவற்றைத் திருத்திக்கொள்ள ஒருபோதும் காலம் தாழ்ந்துவிடவில்லை. சென்றுபோனதையெல்லாம் மறந்து, இன்றிலிருந்து நாம் அதருமத்தைக் கைவிட்டு, நல்ல மனிதர்களாக வாழ முடியும். இதுவே மகிழ்ச்சிக்கு நேர் வழி. நிச்சயமான வழி.

பொருளாதார சுபிட்சமும் மற்ற எல்லா முன்னேற்றங்களும் ஓர் இலட்சியத்தைக் குறித்த சாதனங்கள்தாம். மகிழ்ச்சி என்பதே அந்த இலட்சியம். நல்லவர்களாக இருப்பதன் மூலம் அந்த இலட்சியத்தை இன்றே பெறலாம். பொருளாதாரத் திட்டத்தைப் பரீட்சை பார்த்துவிட்ட நம் சமூகத்தின் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் இந்தத் 'தரும திட்டத்தை' ஒப்புக்கொண்டு பின்பற்றுவார்களா? உயர் வட்டாரத்தினர் இவ்வாறு தீர்மானம் செய்து விட்டார்களாயின் தேசத்தின் தார்மிக மறுமலர்ச்சி எளிதில் கைகூடிவிடும். மேல் வர்க்கத்தினரின் போக்கையே பொதுமக்களும் அநுசரிப்பது பொது வழக்கு.

'நன்னெறி என்ற ஆயுதத்தை மீண்டும் தரிக்க வேண்டும்' என்ற இலட்சியத்துடனேயே 'மாரல் ரீ-ஆர்மமென்ட்' இயக்கம் நடத்தப்படுகிறது. இயக்கத் தலைவர்களான ஃப்ராங்க் புக்மனும், பீடர் ஹவார்ட்டும், ராஜ்மோகன் காந்தியும் நான் கூறும் தார்மிகப் புரட்சியையே விரும்புகிறார்கள். ஆனுல் இந்த இயக்கம் நன்கு வளர்ந்து, நம் மக்களை ஏராளமாகக் கவர வேண்டு

மாயின், அது சமயச் சார்புடையதாக இருந்தால்தான் முடியும். சமயத்தினுடைய அழைப்பாக, என்றும் அழியாத அச்சுதனின் அழைப்பாக, எங்கும் வியாபித்துள்ள அனந்தனின் அழைப்பாக, எப்போதும் ரட்சிக்கின்ற கோவிந்தனின் அழைப்பாக, ஆண்டவனின் அழைப்பாக இருந்தாலன்றி எந்த இயக்கமும் இந்திய மக்களை நன்னெறியில் ஈடுபடுத்த இயலாது. சுயநல சபலங்கள் மறுபுறம் இழுக்கும்போதும் தருமத்தைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டுமாயின், அதற்கு ஆண்டவனும், சமயமும் அத்தியாவசியம்.

'எல்லா சமயங்களும் உண்மையானவை, நல்லவை. ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் எந்த மத சம்பிரதாயத்தில் வளர்க்கப்பட்டிருக்கிறார்களோ, அதுவே சிறந்த சாதனம். யாரும் மதம் மாற வேண்டிய அவசியமில்லை' என்று காந்தியடிகள் தமது பூரண சக்தியுடன் உலகுக்கு ஓதினார். எனவே மாரல் ரீ-ஆர்மமெண்ட் இயக்கம் தான் விரும்பும் பலனைப் பெற வேண்டுமாயின் இந்தியாவிலுள்ள ஹிந்துக்களையும், முஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களையும் அவரவர்களின் சமய வாயிலாக அணுக வேண்டும். 'இந்த இயக்கம் ஒரு புதிய மதமல்ல; அரசியலில் ஈடுபடுவதற்கு இது ஒரு தடையல்ல' என்று நம் மக்கள் நம்புமாறு அதற்கு ஓர் 'இந்திய' வடிவம் தரவேண்டும். இயக்கத்தின் இன்றைய நடைமுறையே கிறிஸ்துவ நாடுகளிலுள்ள மக்களை ஈர்க்கப் போதுமானது. ஆனால் இந்தியாவில் தருமத்தை நிலைப்படுத்த வேண்டுமாயின், ஜவாஹர்லால் அவர்கள் நினைத்தது போல், 'மதச்சார்பில்லாத' முறையில் அதைச் சாதிக்க முடியாது. 'கடவுள்' என்ற பொதுப் பெயரை மட்டும் சொன்னாலும் போதாது. நன்னெறியை ஆயுதமாகக் கூறி அதை அணிந்துகொள்ளச் சொல்வது நம் மக்களுக்கு ராணுவ மொழியாகவே தோன்றும். மக்களுக்கு நன்னெறியைத் தரவேண்டுமாயின், தருமம், சத்தியம், ஈசுவரன், கருமம், பக்தி இவற்றுடன் சேர்த்தே தர முடியும். ஆலயங்கள், அருமறைகள், ராமாயணம், மகாபாரதம், பாகவதம், கிரந்த ஸாஹேப், கொரான் இவையன்றி இந்தியாவில் உள்ள ஹிந்துக்களையும், சீக்கியர்களையும், முஸ்லிம்களையும் நன்னெறியில் ஈடுபடுத்த இயலாது. மக்கள் பணத்தாசையை விடுத்து உண்மையான தேவைக்குகந்த சத்தியமான பாதையைத் தொடர வேண்டுமாயின் சமய உணர்வைப் புகட்டினாலே முடியும்.

இது மகிழ்ச்சிக்கு ஒரு திட்டம். ஆனால் இதுவே உற்பத்திப் பெருக்கத்துக்கும் ஒரு நல்ல திட்டமாக அமையும்.

என்ன சேதி?

துஷ்பிரயோகம்!

சமீப காலம் வரையில் இந்திய சர்க்காருக்குச் சட்ட விஷயங்களில் ஆலோசனை கூறிப் பிரதம சர்க்கார் தரப்பு வக்கீலாயிருந்த ஸ்ரீ எம். ஸி. ஸெடல்வாட் அவர்கள், நெருக்கடி காலச் சட்டத்தை அரசாங்கம் துஷ்பிரயோகிப்பது குறித்து வெளிப்படையாகவும் வலுவாகவும் கண்டனம் செய்துள்ளார். அவர் வார்த்தைக்குச் சர்க்காரின் மீது சிறிதேனும் சக்தி இருக்குமென நம்பலாம். 'கட்சி நலனுக்காக அரசாங்கம் நெருக்கடி கால நிலைமையைத் துஷ்பிரயோகம் செய்கிறது' என்பதை விடப் பெரிய குற்றச்சாட்டு எதுவும் கிடையாது. அவ்விதம் குற்றம் கூறுவதற்கு ஸெடல்வாட் அவர்களை விட அரசியல் நீதியிலும், தரும நீதியிலும், சட்ட நீதியிலும் அதிகத் தகுதி வாய்ந்த ஒருவர் இருக்க முடியாது.

ஸெடல்வாட் அவர்கள் கூறியதற்கும் மேலாகப் பல விதங்களில் காங்கிரஸ் அரசாங்கம் அதிகாரத்தைச் சுயநலனுக்குப் பயன் செய்து கொள்வதை எதிர்க் கட்சியினர் அறிவர். 'விரைவிலே ஏக-கட்சி ஏகாதிபத்தியம் வந்து விடும்' என்று ஸ்ரீ ஸெடல்வாட் சுட்டிக் காட்டுகிறார். அது வந்தே விட்டது. சட்ட விரோதமாக நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்துவதால் மட்டுமின்றி, நாட்டின் பொருளாதாரம் முழுவதையும் சர்க்கார் தன் கையில் அடக்கிக் கொண்டிருப்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சுப்பராமன் நீடூழி வாழ்க!

மதுரை தேசபக்தர் திரு ந. ம. ரா. சுப்பராமன் அவர்களின் அறுபதாண்டு நிறைந்த மணி விழா சென்ற வாரம் மதுரையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. சுதந்திரப் போராட்டங்களில் கலந்துகொண்டால் கஷ்டமும் சிறைவாசமும்தான் உண்டு என்றிருந்த நாட்களில் மிக வசதியான குடும்பத்தைச் சேர்ந்த திரு சுப்பராமன் அவர்கள் தேச விடுதலைப் போரில் பங்கெடுத்துக் கொண்டார். காந்தி மகானிடம் தெய்வ பக்திக்குச் சமமான பக்தி கொண்டவர். காந்தி மகான் வகுத்த நூல் நூற்றல், கதராடை அணிதல், எளிய வாழ்க்கை நடத்தல் ஆகிய நெறிகளைப் பின்பற்றிச் சென்ற பல்லாண்டுகளாக வாழ்ந்து வருபவர். அவர் எல்லாம் வல்ல இறைவன் அருளால் பல்லாண்டு வாழ்க!



ந. ம. ரா. சுப்பராமன்

மூங்கிலின் மீது பருத்தி விளைவிக்க முடியுமா உங்களால்?



மூங்கிலின் மீது பருத்தி விளைவிக்க எங்களால் முடியுமென்று கூறிக்கொள்ளவில்லை நாங்கள். என்றாலும் அதற்கு அடுத்தபடியான ஒன்றை நிறைவேற்றுகிறோம். மூங்கிலையே பருத்தி போன்றதொரு பஞ்சாக மாற்றுகிறோம்.

கிராஸிம் ஸ்டேபிள் ஃபைபர் என்று நாங்கள் வழங்குகிறோமே அது இயற்கைப் பஞ்சு போலவே இருக்கும். பருத்தியோடு அதனைக் கலந்து நெசவு செய்வதனால் கிடைக்கும் துணி, மாறாத புதுமெருகோடு என்றும் பொலிவுடன் சோபிக்கும். கிராஸிம் செயற்கைப் பஞ்சுடன் பருத்தி இணைந்த துணிகள் உயரிய பண்புகள் கொண்டவை, மேனிக்கு இணக்கமானவை, அணியக் கச்சிதமானவை, நீடித்துழைப்பதோடு, சலவைக்கும் எளிதானவை. அதே சமயம் விலையும் மிகக் குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே, துணி வாங்கும்போது குறிப்பிட்டுக் கேளுங்கள்:

கிராஸிம் ஸ்டேபிள் ஃபைபர் இணைந்தது.

க்வாலியர் ரேயான் ஸில்க் மானுபாக். (வீவிங்) கம்., லிட்., நாக்தா (ம.பி)

தொழில்நுட்ப விவரங்களுக்கு தயவுசெய்து எழுதுக:
டெக்ஸ்டைல் ரிஸர்ச் டிபார்ட்மெண்ட், குவாலியர் ரேயான், இண்டஸ்ட்ரி ஹவுஸ்,
159, சர்ச்கேட் ரிக்ளமேஷன், பம்பாய்-1.

ராஜாஜியின் கருத்துக்கள்

நான் எதிர்பார்த்தது போலவே, கருத்தடையை ஆட்சேபித்து நான் எழுதியதைப் பலர் எதிர்த்திருக்கிறார்கள். ஆட்சேபம் எதுவாயினும் என் கருத்து இதுவே. நாகரிகமும், பண்பும், தன்னடக்கத்தில்தான் பிறக்கின்றன. தீய விளைவுகளை உண்டாக்குபவை என நாம் கருதுகிற காரியங்களை நாமே செய்யாதிருக்க வேண்டுமேயன்றி, அந்தக் காரியங்களில் ஈடுபட்டுவிட்டு, அவற்றின் தீய விளைவைத் தடுக்க வேறு உபாயங்களைக் கண்டுபிடிப்பது நாகரிகமல்ல. தன்னடக்கத்தால் பெறும் பலனை, மற்றத் தடுப்புச் சாதனங்களால் பெற முடியாது. அந்தச் சாதனங்களால் நாம் விரும்பும் பலன் மட்டுமின்றி விரும்பாத வேறு விளைவுகளும் உண்டாவது நிச்சயம்.

பாரம்பரியமாகப் பல பௌதிக உந்தல்களையும், உணர்ச்சிகளையும், நாம் பெற்றிருக்கிறோம். பழைய காலத்தில் மானுட சமுதாயம் அழிந்துவிடாமல் தொடர்ந்து வாழ்வதற்கு இந்த உணர்ச்சிகளும் அவசியமாக இருந்தன. ஆனால் அந்தக் காலத்தில் இவற்றுக்கு ஆதாரமாக அமைந்த காரணங்கள் இன்று இல்லை. எனவே அந்த உந்தல்களையும், உணர்ச்சிகளையும் இன்று அடக்கத்தான் வேண்டும். அவ்வாறு அடக்குவதும் சாத்தியமே. பால் உந்தலுக்கு மட்டுமின்றி, கோபம், பழி வாங்கும் பான்மை முதலிய பல தீவிர உணர்ச்சிகளுக்கும் இது பொருந்தும்.

* * *

சர்க்காரும், காங்கிரஸ் கட்சியும் பல இனங்களில் பணம்திரட்டும்போது கையாளும் பலாத்கார முறைகளைப் பற்றி எனக்குப் பரிதாபமான கடிதங்கள் வருகின்றன. அவற்றை வைத்துக் கொண்டு நான் என்ன செய்ய முடியும்? சர்வ வியாபகமான சர்க்காரும், அதன் அதிகாரிகளும் வர்த்தக சமூகத்தில் சிறியவர், பெரியவர் அனைவரிடமும் அப்பட்டமாகவும் கூச்சமின்றியும், கொடுங்கோன்மை செய்யத் தொடங்கி விட்டனர்.

தமிழ் நாட்டு அரசாங்கத்தின் கடன் திட்டத்துக்குப் பணம் திரட்டவும் இந்த நிர்ப்பந்த முறைகள் கையாளப்படுவதாக முறையீடுகள் வந்திருக்கின்றன. பூரணமாகச் சர்க்கார் சர்வாதீனத்தின் கீழ் பொருளாதாரம் வந்துவிட்டபின் நம் நாட்டில் சுயேச்சையான நன்கொடை, மனப்பூர்வமான கடனுதவி இவற்றுக்கு இடமேயில்லை. வழிப்பறிக் கொள்ளைக்காரன் 'தயவுசெய்து பொருளைக் கொடுங்கள்' என்று கேட்பது போன்றதுதான் சர்க்காரின் கடன் 'கோரிக்கை'களும். 'வேலொடு நின்றான் இடு என்றது போலும்' என்று திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறினார்.

* * *

உத்தரமேரூர் சாஸனங்களிலிருந்து, பண்டைய காலத்தில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தல் முறை பற்றி அறிகிறோம். அக்காலத்தில் அபேட்சகர்களுக்குக் கல்வி, சொத்து வயது ஆகியவற்றில் தகுதி நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. நிருவாக அதிகாரிகள் கிராமத்தில் வீடு வீடாகச் சென்று வாக்குச் சீட்டு சேகரித்திருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட குழு நிருவாக யந்திரம் ஆகியன ஊழலாட்சி நடத்தவும், வாக்காளர் மீது தமது செல்வாக்கைப் பிரயோகிக்கவும் இயலாதபடி பல கட்டுப்பாடுகள் இருந்தன. அந்நாட்களில் பிரத்தியேக வாழ்வுக்கும் பொது வாழ்வுக்கும் ஒரே அளவுகோல் இருந்திருக்கிறது. புராதன பாரதத்தின் கிராமப்புறங்களில் இவ்வாறு ஜனநாயகத்துக்கு அஸ்திவாரம் அமைத்திருக்கிறார்கள்.

இப்போது தொண்ணூறு வயதடைந்துள்ள சாஸன நிபுணர் ஸ்ரீ கே. வி. சுப்பிரமணிய அய்யரவர்கள் இவ்வுண்மைகளை ஆராய்ந்து அறிந்திருப்பதாக அவரது புதல்வர் ஸ்ரீ கே. எஸ். வைத்தியநாதன் எனக்குத் தெரிவிக்கிறார். 'உங்களுடைய கருத்துக்கள் பல முன்பு நடைமுறையில் இருந்ததாக அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது' என்கிறார்.

* * *

பிரிட்டனிடமிருந்தோ, ருஷியாவிடமிருந்தோ நாம் ஸப்மெரீன் (நீர்மூழ்கிக் கப்பல்) வாங்குவது எதற்காக? நம்முடைய தேசப் பாதுகாப்பில் ஸப்மெரீனுக்கு என்ன அவசியம்? 'எங்களிடமும் ஸப்மெரீன் இருக்கிறது; எங்கள் ராணுவத்திலும் அதை இயக்கத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்' என்று உலகுக்குத் தெரிவிப்பதற்காகவா? நமது நிதி வசதியும், கடன்களும் உள்ள நிலையில் ராணுவத்தின் தேவை அறிந்தே அல்லவா உபகரணங்கள் வாங்க வேண்டும்? இவ்விஷயத்தில் நமது சர்க்கார் பகுத்தறிவுக்குப் பொருந்தாத முறையில் செல்கிறது என்றே அஞ்சுகிறேன். முன் காலத்தில் வெறும் பெருமைக்காகவே ஜமீந்தார்கள் தங்கள் வீட்டில் பியானோ வாங்கி வைத்திருப்பார்கள். ஆனால் அதை வாசிக்க யாரும் இருக்க மாட்டார்கள். இச்சமயத்தில் அது தான் நினைவுக்கு வருகிறது.

ருஷியா இந்திய ரூபாயில் கிரயத்தைப் பெற்றுக் கொள்ளும். அந்நியச் செலாவணி வேண்டாம் என்பதற்காகவே அதனிடம் ஸப்மெரீன் வாங்க உத்தேசமாயிருக்கலாம். இதை எண்ணுகையில் பழைய நினைவுகள் வருகின்றன. 1896ல் நான் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது என்னுடைய விடுதி சகா ஒருவர் மூர் மார்க்கட்டிலிருந்து நிறைய இரண்டாம் கைமாறின சரக்குகள் வாங்கி வருவார். 'என்ன உபயோகத்துக்காக வாங்கினீர்கள்?' என்று கேட்டால், 'மலிவாக இருந்தது என்பதற்காகவே வாங்கினேன்' என்பார். அது அவருடைய சொந்த விவகாரம். அதோடு அவர் என்னைக் காட்டிலும் பெரியவர். எனவே நான் அவரோடு வாதிப்பதற்கில்லை. ஆனால் ஸப்மெரீன் வியாபார விஷயம் அப்படியல்ல. அது பாதுகாப்பு மந்திரியின் விவகாரம் மட்டும் அல்ல; என்னுடைய — இந்தியப் பிரஜைகள் எல்லோருடைய — விவகாரமாகும். மேலும் நான் ஸ்ரீ சவான் அவர்களையும், ஸ்ரீ லால் பகதூர் அவர்களையும் விட வயதிலும் பெரியவன்!

இசை உலகம் வாழ்த்தும் லயக்கலைஞர்

அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ அய்யங்கார் :

ஸ்ரீ பாலக்காடு மணி அய்யர் அவர்களுக்கு 'விளையும் பயிர் முளையிலே' என்ற பழமொழி மிகவும் பொருத்தமானது. மிருது அங்கம் என்ற காரணப் பெயரை அவர் தம் வாத்தியத்தில் நிரூபித்துக் கொண்டிருக்கிறார். அத்துடன், கர்நாடக ஸங்கீதத்தில் பரம ஞானஸ்தர்.

அநேக வருஷங்களாக எனது பல கச்சேரிகளுக்கும் வாசித்து வருகிறார். அவர் வாசிப்பில் ஆச்சரியம் என்னவென்றால், ஒவ்வொரு கச்சேரியும் ஒரு தனிப்பட்ட சிறப்பு, மெருகு, விறுவிறுப்பு, போஷாக்கு முதலிய வகைகளைப் பெற்றிருக்கும். ஆனால் அன்று போல் இன்றும் மாறாதது அவருடைய விநயம்.




அவருடைய ஸத்யமான வித்தை அவருக்கு அந்த விநயத்தைக் கொடுத்திருக்கிறது.

கச்சேரி முடிந்ததும், ''மணி அய்யர்வாள்! இன்று வாசிப்பு அமோகம்'' என்று நான் அவரிடம் சொன்னவுடன், ''எல்லாம் பெரியவாள் ஆசீர்வாதம். என் வாசிப்புக்குத் தங்களின் ஸத்யமான சங்கீதம்தான் காரணம்'' என்று பரம விநயத்துடனும், தம் பிரத்தியேகமான சிரிப்புடனும் பதில் சொல்லுவார்.

ஸ்ரீ பாலக்காடு மணி அய்யர் அவர்கள் பூர்வ ஜென்மாவில் செய்த புண்ணியத்தின் பலன் இன்று அகில இந்தியா போற்றிவரும் மிருதங்க வித்வானாக விளங்கி வருகிறார். இந்தச் சிகரமான ஸ்தானத்தை அடைய அவர் கையாண்டு வரும் பெரும் உழைப்பும், ஸாதகமும் போற்றத் தக்கது. ஸங்கீத உலகத்தில் இதர வித்வான்களுக்கும் அவர் ஒரு வழிகாட்டி. அவருடைய புகழ் நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கும் பரவியிருக்கிறது.

அவருக்கு ஆரோக்கியமும், ஆயுள்ஐச்வரியமும் பரிபூரணமாக இருந்து அவருடைய கீர்த்தி அகில உலகமும் பரவி அவருக்கும் நமது தேசத்துக்கும் கர்நாடக சங்கீதத்துக்கும் பெருமை தேடித்தர வேண்டுமென்று ஸ்ரீ ஸத்குரு தியாகப் பிரும்மத்தை மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன்.



மணியைப் பற்றிச் செம்பை :

மிருதங்கம் சிரஞ்சீவி மணியைப் பற்றிச் சொல்ல ஒரு நாக்குப் போதாது, ஒரு வாய் போதாது; ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷன்தான் அவன்

[பாலக்காடு ஸ்ரீ மணி அவர்கள் எடின்பரோ கலைவிழாவில் பங்கு பற்றச் செல்வதை யொட்டி இவ்விதழ் மேலட்டையில் அவர் படத்தை வெளியிட்டு மகிழ்வதுடன், இசையுலகப் பிரமுகர்கள் பலரது புகழ் மாலைகளையும், நல் வாழ்த்துக்களையும் திரட்டித் தருகிறோம்.]







பெருமைகளைச் சொல்ல முடியும். மிருதங்கம் மணியை எனக்கு ஏழு வயதிலிருந்து நன்ருகத் தெரியும். இப்பொழுது அவனுக்குச் சுமார் ஐம்பத்து மூன்று வயசிருக்கும் என்று நினைக்கிறேன். 1927ல் சென்னையில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் மணி எனக்கு வாசிக்கத் தொடங்கினுன். அதன் பிறகு என் கச்சேரிகளுக்கெல்லாம் அநேகமாக மிருதங்கம் மணிதான். அந்த நாளிலே ''ம'ணுவின் பேச்சை எடுத்தால் எனக்குக் கெட்ட கோபம் வரும்' என்று என்னிடம் கூறியவர்கள் உண்டு. 'மனுவை (மணி) மறந்துடணும்னு கூட்டுவே நீர் பணுவை (பணம்) மறந்துட வேண்டியதுதான் ஓய்!' என்று நான் பதிலளிப்பேன்.



1934ல் தக்ஷிணுமூர்த்திபிள்ளை கஞ்சிராவும், மணி மிருதங்கமும், சௌடையா பிடிலுமாக எனது சங்கீதக் கச்சேரிகள் நடக்கும். ரசிகர்கள் தக்ஷிணுமூர்த்திபிள்ளை-மணி இருவரும் லயத்தில் ஒருவரையொருவர் மிஞ்சியவர்களாகச் சக்கைப்போடு போட்டதை வெகுவாக ரசிப்பார்கள். எனக்குத் தெரிந்த வரைக்கும் இம்மாதிரி சின்ன வயதிலேயே மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்து அபார வெற்றிகண்டவர்கள் யாருமில்லை. யாருடைய கச்சேரியாக இருந்தாலும் அவரவர்களுக்குத் தகுந்த மாதிரி வாசித்து வருவது மணியினுடைய தனிச் சிறப்பு. எத்தனையோ பேர் எனக்கு மிருதங்கம் வாசித்திருந்த போதிலும் எனக்கு மணியின் வாசிப்பில் அலாதி ஈடுபாடு. எத்தனை தட்டிக் கொட்டினுல் என்ன? அவனது ஒரு 'சாப்பு'க்கு எதுதான் ஈடாகும்? சுருக்கமாகச் சொல்கிறேன் : உண்மை இதுதான்: பாட்டுக்கு எம். எஸ்.



மிருதங்கத்துக்கு மணி; இரண்டும் பகவானுக்கு அர்ப்பணம்.

மகாராஜபுரத்தின் வாழ்த்து:

சுமார் முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்பு இருக்கும்; மயிலாப்பூரில் வன்னியர் தெருவில் எனது கச்சேரி. அன்று கச்சேரிக்குச் செல்லும்போதுதான் எனக்குப் பக்க வாத்தியம் வாசிப்பது யாரென்று தெரிந்தது. காரியதரிசி என்னிடம், 'மிருதங்கம் ஒரு குட்டி வாசிக்கிறது!'' என்றார். ''குட்டியா?'' என்று வியந்தேன். பிறகுதான் அந்தக் 'குட்டி' வித்வான் வந்தார். வந்தவுடனே, ''எந்தா பாகவதரே! எத்தரை சுருதி?'' என்று கேட்டார் 'குட்டி' வித்வான். வித்துவான் பொடியனாக இருந்ததால் ''அதை உள்ளே போய்க் கேட்டுச் சேர்த்துக் கொள்'' என்று அலட்சியமாகச் சொல்லி அனுப்பி விட்டேன். அன்று கச்சேரியில் அந்தக் குட்டி வித்துவான் வாசிக்க வாசிக்க என் உள்ளத்தில் அவன் உயர்ந்து கொண்டே போனான். நான் பைரவி வர்ணம் பாடினபோது அந்த இளம் பையன் நன்றாக அனுபவப்பட்ட வித்துவான் மாதிரி 'அறுதி' வைத்தது என்னை அயரச் செய்தது. மிச்ரம், கண்டம் இவற்றிலே பரீட்சை பார்ப்பதற்காகக் கீர்த்தனைகள் பாடினேன். பாடப்பாட அவனது கைச் சொல் ஒவ்வொன்றும் என்னை மெய்ம்மறக்கச் செய்தது. எனது பாட்டை நிறுத்திவிட்டு அவனை வாசிக்கச் சொல்லிக் கேட்க வேண்டும் என்ற ஆசை எனக்குப் பிறந்து விட்டதென்றால் அவன் வாசிப்பு எப்படி இருந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அன்று ஐந்தரை மணிநேரக் கச்சேரியில் 'பிய்ச்சு'த் தள்ளி விட்டான்.

'இடக்குத் தாளத்துக்கு வாசிப்பாரா?' என்று யோசனை பண்ணுவதற்கு முன்பே முந்திரிக் கொட்டைமாதிரி அதை வாசித்துப் பிறத்தியாரை அயர வைக்கிற அசகாய சூரர் அவர் என்பது புரிந்தது.

மிருதங்க வாசிப்பில் நந்திகேசுவரர் அவதாரம் என்று போற்றக் கூடிய பாலக்காடு மணி அய்யரை முதன் முதலில் சந்தித்த போது ஏற்பட்ட அனுபவம்தான் இது. போன ஜன்மத்தில் அவர் செய்த சாதகங்களும், சாதனைகளும் இப்பிறப்பிலும் அவர் உடலோடு சேர்ந்து பிறந்திருக்கின்றனவோ என்றே எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

தியாகப் பிரும்மத்துக்கு யார் சங்கீதம் சொல்லிக் கொடுத்தாரோ அந்தப் பகவான் தான் இவருக்கும் வாத்திய வித்தையை அருளியிருக்கிறார். இவர் உடலோடு பிறந்த கலையாகவே இவரது வாசிப்புத் திகழ்கிறது.

மிருதங்க வித்துவான் பாலக்காடு மணி அய்யர் அவர்களது எடின்பரோ விஜயம் வெற்றிதான்; சந்தேகமே இல்லை.

கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை:

பாலக்காடு ஸ்ரீ மணி ஐயருடைய தந்தையார் பிரும்மஸ்ரீ சேஷபாகவதர் ஒரு சிறந்த சங்கீத வித்துவான். அவர்களுடைய நாதோபாசனையின் தவப் பயனாகவே ஸ்ரீ மணி அய்யர் புதல்வராய்ப் பிறந்தார்.


ஸ்ரீ மணி அய்யரும், நானும் அவருடைய பதினைந்தாவது வயதில் திருவனந்தபுரத்தில் ஒரு தனிகர் வீட்டுக் கலியாணத்தில் ஸ்ரீ மகாராஜபுரம் விசுவநாதய்யர் அவர்களுடைய கச்சேரிக்குப் பக்கவாத்தியம் வாசிக்க நேர்ந்தது. கச்சேரி ஆரம்பிக்குமுன் அவருடைய தோற்றத்தைக் கண்ட ரஸிகர்கள் எல்லாரும் அவர் சாதாரணமாகவே வாசிப்பார் என்று எண்ணினார்கள். ஆனால் அவர் கச்சேரியில் வாசித்துக் கேட்ட பிறகு அவருக்கு வாய்த்திருக்கும் சரஸ்வதியின் அனுக்கிரகத்தையும் அவரது பூர்வ புண்ணிய விசேஷத்தையும் நினைத்து வியப்பு அடைந்தார்கள். அன்றைய தினம் முதல் ஸ்ரீ மணி அய்யர் கீர்த்தியில் பெரியவரானார். அவருக்கு முதல் குருவாக இருந்த ஸ்ரீ சாத்தபுரம் சுப்பய்யருடைய அனுக்கிரஹமே இந்த மேன்மைக்குக் காரணம். ஸ்ரீ மணி அய்யருக்கும் தம் குருநாதரிடத்தில் இடையறாத பக்தி இருந்து கொண்டேயிருக்கிறது.

ஸ்ரீ மணி அய்யர் அவர்கள் சிறுவயதிலிருந்தே நாள்தோறும் கச்சேரி செய்து கொண்டிருந்தார் என்றாலும் ஒவ்வொரு நாளும் தம்முடைய மிருதங்க வாசிப்புக்கு வேண்டிய விஷயங்களைச் சேகரித்துக் கொண்டே இருந்தார். அதன் காரணமாகத் தஞ்சையில் உள்ள பிரபல மிருதங்க வித்துவானான ஸ்ரீ வைத்தியநாதய்யரிடத்தில் தொடர்பு கொண்டு அவரிடமும் அநேக விஷயங்களைச் சேகரித்தார். புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்திபிள்ளையுடைய தொடர்பும் நிரம்ப இருந்து கொண்டிருந்தது. ஸ்ரீ தட்சிணாமூர்த்திபிள்ளையே ஸ்ரீ மணி அய்யருடைய மேதையைப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார். ஸ்ரீ மணி அய்யர் காஞ்சீபுரம் சங்கீத மேதை ஸ்ரீ நாயனாப் பிள்ளையுடைய கச்சேரி முதல் மற்ற எல்லாப் பெரிய வித்துவான்களுக்கும் வாசித்திருக்கிறார்; வாசித்துக் கொண்டுமிருக்கிறார். ஸ்ரீ மணியை மிருதங்க சிரேஷ்டராக உலகம் போற்றவேண்டுமென்று ஆசைப்பட்டு, அதற்கு வேண்டிய முயற்சிகளெல்லாம் செய்து உதவியவர் சங்கீத கலாநிதி ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர். ஸ்ரீ மணியுடைய ஜோதியைக் கண்டு மனம் பூரிப்பு அடைவதில் அவர் தந்தையாருக்கு ஈடு ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்கள். ஸ்ரீ மணியுடைய வாசிப்பில் பாட்டைப்போல, அப்பாட்டின் நிழல்போலத் தொடர்ந்து வரும் அவருடைய ஒட்டுதல் வாசிப்பு ஒரு தனிச் சிறப்பு. ஸ்ரீ மணி மிருதங்கத்துக்கு ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று வித்துவான்களுக்குத் தெரிந்தாலே வித்துவான்கள் அடையும் சந்தோஷத்துக்கும் பெருமைக்கும் அளவே கிடையாது. காரணம் அன்று அவர் தம் கச்சேரியைச் சிறப்பிக்கச் செய்து விடுவார் என்ற நம்பிக்கைதான்.

ஸ்ரீ மணியுடைய வாசிப்பைவிட குணங்கள் உயர்ந்தவை. மற்றவர்கள் பேசுவதைத் தான் கேட்பது வழக்கமே தவிர, தாம் பேசுவதை மற்றவர்கள் கேட்க வேண்டுமென்று ஆசைப்படுவதே இல்லை. அவருடன் நான் அடிக்கடி நீண்ட தூரப் பிரயாணங்கள் செய்துகொண்டிருந்த போதுகூட அவரிடத்திலிருந்து பல்வேறு சங்கீத வித்துவான்களைப் பற்றிய

அவரது அபிப்பிராயத்தைப் பேச்சுவாக்கில் தெரிந்து கொள்ள வேண்டுமென்று முயன்றிருக்கின்றேன். ஆனால் அம் முயற்சியில் எனக்கு வெற்றி கிட்டியதில்லை.

ஸ்ரீ மணி தம் குடும்பத்தினர்களிடத்திலும், பந்துக்களிடத்திலும், நண்பர்களிடத்திலும் உண்மையான பாசம் உள்ளவர். அதனால் ஏற்படும் பொருள் செலவுகளைத் தாராளமாகச் செய்யக் கூடியவர். சுறுசுறுப்பாகவும், நாகரிகமாகவும் வாழ்வு நடத்துவதில் பிரியமும் அக்கறையும் உடையவர். தமக்கு நியாயமாகத் தோன்றும் விஷயங்களை வெளியிட்டுப் போராடுவதில் நல்ல தைரியமுடையவர். அவர் இந்தியாவில் அதுவும் தென்னாட்டில் பிறந்த பெருமையினால் நாமும் மிகுந்த சிறப்படைகின்றோம். அவருடைய உயர்ந்த வாசிப்பை நம் நாட்டினர் மட்டுமில்லாமல் மேல் நாட்டினரும் கேட்டு மகிழ வாய்ப்புக் கிடைத்திருப்பதைப் பற்றி நான் அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறேன்.



"உன் கல்யாணத்துக்கு உன் வீட்டுக்கு வந்ததுக்கு நீ எனக்கு விஸிட்டிங் பீஸ் கொடுக்கவேணும். எவ்வளவு சார்ஜ் பண்ணட்டும், பத்தா, இருபதா?"

"இருபது ரூபாய்தான் பில் பண்ணேன்! அது சரி, என் கன்ஸல்டிங் பீஸ் ஐம்பது ரூபாயை எடு!"

செம்மங்குடி சொல்கிறார் :

திருவனந்தபுரம் ஆஸ்தான வித்துவான் மிருதங்கம் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் அவர்கள் தெய்வீகமான அருளைப் பெற்ற மேதைகளில் ஒருவராவார். வாலிபப் பருவத்திலேயே நிறைந்த வித்வத்தையும், பிராபல்யத்தையும் அடைந்த பாக்கியத்தைப் பெற்றவர். மிகவும் பிரபலமாக விளங்கும் எல்லாப் பெரிய வித்துவான்களின் கச்சேரிகளுக்கும் பக்கவாத்தியமாக மிருதங்கம் அபரிமிதமாக வாசித்துத் தன்னிகரில்லாப் பெருமையுடன் விளங்கும் வித்வத்ரத்னமாவார்.

ஸ்ரீ மணி ஐயர் சிறு பிராயத்தில் கச்சேரி செய்ய மேடைகளில் தோன்றிய காலத்தை ஏதோ சாதாரணமான முறையில் மதிப்பிட முடியாது. லயவாத்திய நிபுணர்களான கும்பகோணம் அழகநம்பிபிள்ளை, புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்திபிள்ளை, தஞ்சாவூர் வைத்தியநாதய்யர், மன்னார்குடி கொன்னக்கோல் பக்கிரியாபிள்ளை முதலானவர்கள் மிகவும் புகழுடன் சிம்மங்கள் என்று விளங்கிய காலம் அது. அந்தக் காலத்தில் மேற்சொன்ன வித்துவான்கள் முன்னிலையிலும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திபிள்ளை அவர்கள் கஞ்சிராவுடனும், ஸ்ரீ பக்கிரியாபிள்ளை அவர்கள் கொன்னக்கோலுடனும் ஸ்ரீ காஞ்சிபுரம் நாயினாப்பிள்ளை அவர்களது கச்சேரியிலும் மிருதங்கம் வாசித்து அவர்களையே பிரமிக்கச் செய்து அம்மஹா வித்வான்களின் பெருமதிப்பையும் பெற்று, நம் பாரத தேசமே மிகவும் பெருமைப்படுவதற்குக் காரணபுருஷராக விளங்கும் மேதையாவார்.

ஸ்ரீ மணி ஐயர் பழைய சம்பிரதாய முறையோடு உசிதமான புது முறையில் அநேகம் சொல்லுகளையும், மோஹராக்களையும், தீர்மானங்களையும், அநேகம் பொடிச் சொற்கள், சிறியது பெரியதாகச் சமயோசிதமாகச் சேர்த்து வாசிக்கும்போது நம்மை மெய்ம்மறக்கவே செய்து விடுகிறார்.

ஸ்ரீ மணி ஐயர் நல்ல பாட்டு ஞானம் உள்ளவரானதால் தனி ஆவர்த்தனம் வாசிப்பதைக் காட்டிலும் பாட்டுடன் கீர்த்தனங்களுக்கு வாசிப்பதில் அவருக்கு அதிகமான திருப்தி. இதை அவரே சொல்வார். தனி ஆவர்த்தனமும் குறுகிய கால அளவில் மிகவும் அழகாகவும், நிரம்ப விஷயங்களை அடைத்தும் வாசிப்பார். திஸ்ரம், மிச்ரம், கண்டம், ஸங்கீர்ணம் இவைகளை சதுச்ரம் போல் பரம ஸரளமாக அநாயாசமாக ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுவது தெரியாமலும் தெரியும்படியாயும் வாசித்துப் பண்டித பாமரர் எல்லோருக்கும் புத்திக்கும் மனத்துக்கும் பரமானந்தத்தைக் கொடுத்துத் திக்குமுக்காடச் செய்து விடுவார்.

அதிலும் பெரிய தீர்மானங்கள் மோஹராக்களை வாசிக்கும் பொழுது தாளம் போடுபவர் சற்று இழுத்தோ, ஓடவோ செய்தாலும் அதையும் அநாயாசமாகச் சமாளித்துத் தாளம் போடுபவரையும் அநுசரித்துக் கொண்டு வாசித்து முடிக்கும் அற்புதத்தை மணி ஐயரிடம்தான் காணலாம். ஒரோரு சந்தர்ப்பங்களில் பாடகர் மறந்து போகக் கூடிய சங்கதிகளைக் கூட அவருக்கு நினைவு படுத்திவிடும் அவர் வாசிப்பு.

ஸ்ரீ மணி ஐயர் பரம விவேகி. நமது கர்னாடக சங்கீதத்தின் பழைய புனிதத் தன்மை குறைவடையக் கூடாதென்ற கவலை உள்ளவர்.

அவரது மேல்நாட்டு விஜயம் வெற்றிபெற வாழ்த்தி வழியனுப்புவோமாக.

சௌடய்யா சொல்கிறார்:

மணி ஐயரின் வித்வத் திறனைப் பற்றி எடை போடவோ, மிகைப்படுத்திச் சொல்லவோ எவராலும் முடியாது. கர்னாடக சங்கீதத்துக்கு அவர் கௌரிசங்கர சிகரம் போன்றவர். அவர் ஒன்பது வயதுச் சிறுவனாக இருந்த காலம் முதல் அவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் ஒரு பிறவி மேதை. மிருதங்கம் வாசிக்கும் முறையின் மகோன்னதமான நுட்பங்களையெல்லாம் பூரணமாக அப்யஸித்து அடைந்த வித்வான் மணி

அய்யர் ஒருவரே. அவர் பங்கு கொள்ளும் ஒவ்வொரு கச்சேரியும் ஒரு தனி சோபையும் அழகும் நிச்சயமாகப் பெற்றுப் பரிமளிக்கும் என்பது அநுபவப் பிரசித்தம். இவையனைத்துக்கும் மணி அய்யருடைய வித்வத்தும் அவருடைய அற்புதமான வாசிப்பும் காரணம். கர்னாடக சங்கீதத்தில் லய சம்பந்தமான விஷயங்களில் இதர வித்துவான்களுக்கெல்லாம் மணி அய்யர் ஒரு வழிகாட்டி.

எடின்பரோ இசையரங்கில் அவருக்குக் கிடைக்கவிருக்கும் புகழ், அவரைப் பொறுத்த மட்டில் மிகச் சாமானியமானது என்றே சொல்வேன். அவர் பெற்றுள்ள கலைச் செல்வ உயர்வினால், அவர் எங்கு சென்றாலும் ஒரே ஒரு மணி அய்யர்தான் உண்டு என்ற தனிப் புகழைத் தமக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். அவர் ஒரு தனி 'மணி'யாகவே பிரகாசிக்கிறார்.

மானிடர்கள் அளிக்கக் கூடிய எல்லாப் புகழும் கௌரவமும் இசையுலகில் தனிப் பிறவியாம் மணி அய்யருக்குக் குறைவின்றிக் கிடைக்கட்டும் என்று வாழ்த்துகிறேன்.

மணியைப் பற்றி பாப்பா :

எத்தனையோ வித்வான்கள் தங்கள் தொழிலைப் பணத்துக்காகவே செய்து வருவதைக் காண்கிறோம். தொழிலை அதன் மேன்மைக்காகவே செய்து வரும் சிலருள் ஒருவர் ஸ்ரீ மணி. இந்த அதிசய புருஷர் பண்பட்ட பழைமையான பந்தாக்களைப் பேணுவதில் அக்கறை கொண்டவர். நல்ல இதயம் படைத்தவர்.

பாடுவோராகட்டும், வயலின் வாசிப்போராகட்டும். அவரவர்களுக்கு ஏற்ப அனுசரணையாகத் தாமும் வாசிப்பார். இளம் வித்வான்களிடம் தமது திறமையைக் காட்டி அவர்களைத் திணற அடிக்க மாட்டார். பெரிய வித்துவான்களென்றால் அவர்களுக்குத் தக்கபடி வாசிப்பார். அதே போல் ஓட்டத்துக்கு ஓட்டம், நிதானத்துக்கு நிதானம் என்று ஒத்துப் போவார்.

தோல் வாத்தியங்களில் தேர்ச்சி பெற்றவர், லய ஞானமிருந்தவர் என்பது மட்டுமல்ல, அவர் பெருமை. அபாரமான சங்கீத ஞானமுள்ளவர். அதனால் பலருக்கும் ஒரு சங்கீத டைரக்டர் போல அவர் உதவ முடிந்திருக்கிறது. குரல் மட்டுமிருந்தால் சங்கீத உலகிலும் ஜொலிக்கக் கூடியவர். இதே காரணத்தால் பாடகர் இன்ன விதமாகப் பாடப் போகிறார் என்பதை ஓரிரு விநாடிகள் முன்னமேயே அவரால் உணர்ந்து அதற்கேற்ப வாசிக்க முடிகிறது.

இன்னும் என்னசொல்ல? பாலக்காடு மணியைச் சேர்த்துக் கொண்டு கச்சேரி செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தவர்கள் பாக்கியசாலிகள்!

மதுரை மணியின் அபிப்பிராயம் :

பழங்காலத்திய வித்வான்களாகட்டும், தற்காலத்து வித்வான்களாகட்டும் அனைவராலும் ஒருமித்துப் போற்றிப் பாராட்டப் படுபவர் பாலக்காடு ஸ்ரீ மணி.

மிருதங்கம் வாசிப்பதில் மகத்தான சாதனைகளையெல்லாம் புரிந்துள்ள அவரைப் பண்டித பாமர மக்களும் வியந்து கொண்டாடுவதில் அதிசயமில்லை. யாரும் ஆட்சேபிக்க இயலாதபடி ஸ்தோத்திரம் செய்வதற்குத் தகுந்த பாத்திரம், ராமாயணத்தில் வரும் ஸ்ரீ ராமர் மாதிரி.

பாலக்காடு மணி அய்யர் அவர்கள் தம் வாத்தியத்தில் சரியான சுருதி சேர்த்து வாசிப்பது அவருக்குக் கைவந்த கலை. வித்துவான் பாடிக் கொண்டிருக்கும்போது சில நிமிஷங்கள் தம் வாசிப்புக்கு ஒரு 'பிரேக்' கொடுப்பார்; அதைத் தொடர்ந்து ஒரு மகத்தான 'சொல்'லைக் கொடுப்பதற்குத்தான். அதைக் கண்டு அத்தனை பேருமே மூக்கின் மேல் விரல் வைத்து அதிசயிக்கும்படியாக இருக்கும். எப்படி வாசித்தால் பரிமளிக்கும் என்று புரிந்து கொண்டு செயல் ஆற்றக் கூடிய வல்லுநர். மிருதங்கத்திலே அவருக்குப் பேசற அளவுக்கு யாருக்கும் பேசறதில்லை. மிருதங்க வாத்தியத்தின் பல்வேறு தேர்ச்சிகளில் முதிர்ச்சியடைந்துள்ள பல வித்துவான்களின் சொல் வடிவங்களெல்லாம் இவரிடம் ஒருமித்துக் குடி கொண்டுள்ளதைக் காணலாம். அவருக்கு இணை சொல்ல வேணுமானால் அவரையேதான் சொல்ல வேண்டும். பாலக்காடு மணி அய்யர் அவர்கள் தமது மேனாட்டுத் திக்விஜயத்தில் நம் மிருதங்க வாத்தியத்தின் சிறப்பை உலகுக்கு உணர்த்தி வெற்றியுடன் திரும்ப எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

ஆலத்தூர் ஸ்ரீனிவாஸ அய்யர் :

மிருதங்க வித்வான் பாலக்காடு ஸ்ரீமான் மணி அய்யர் அவர்களை நாங்கள் இளைஞர்களாயிருந்தகாலந்தொட்டே எங்களுக்குத் தெரியும்.

அவரது வாசிப்பின் கன நயமும், கௌரவமான அழகுடன் கூடிய சொற்கட்டுகளும், காலப்ரமாணமும் தானாகவே அமைந்ததொரு தனிச் சிறப்பு. பாட்டுக்கும், பிடிலுக்கும் வாசிக்கும்பொழுதும் சரி, தனி ஆவர்த்தனம் வாசிக்கும்பொழுதும் சரி, ரசிகர்கள் ஒவ்வொன்றையும் நன்கு ரசிக்கும்படியாக வாசிப்பார். சதுச்ரம், திச்ரம், மிஸ்ரம், கண்டம், ஸங்கீர்ணம் முதலிய நடைகளில் வித்வான்கள் பாடும் கீர்த்தனைகள், ஸ்வரங்கள், பல்லவிகள், திருப்புகழ், தில்லானா முதலானவைகளுக்கும், சவுக்க, மத்ய, துரித கால ப்ரமாணங்களுக்கும் அனுயாசமாக வாசித்து, வித்வான்களையும், ரசிகப் பெருமக்களையும் ஆனந்தத்தில் திளைக்கச் செய்யும் ஆற்றல் உடையவர்.

மிருதங்க வாத்ய நுட்பங்களை நன்கு உணர்ந்து அறிந்துள்ளவர். ஒவ்வொரு கச்சேரி அன்றும் காலையிலேயே வாத்யங்களை அந்தந்த வித்வான்களின் சுருதிக்குச் சரி பார்த்து வைத்துவிட்டுத்தான் மற்ற காரியங்களைக் கவனிப்பார். எல்லா வித்வான்களாலும் போற்றிப் புகழப் பெற்றவர். தமது கலையில் ஆர்வமும், கௌரவமும் நிறைந்துள்ள மிருதங்க வாத்ய மேதை ஸ்ரீ மணி அய்யர் அவர்கள் நீடூழி வாழ எல்லாம் வல்ல சர்வேச்வரனைப் பிரார்த்திக்கிறேன்.

மிருதங்கத்துக்கு ஒரு மணி

முசிறி ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர்



போட்டி மனப்பான்மையினால் பொறாமை வளரும் என்பார்கள். ஆனால் அதற்குப் பதில் சங்கீதக் கலை வளர்ந்தது. ரஸிகர்களுக்கு அபூர்வ விருந்துகள் கிடைத்தன. நான வாத்தியத்தின் இணையற்ற சொல்அழகுகளையெல்லாம் தங்கள் வாத்தியத்தில் கொணர்ந்து சங்கீத ரஸிகர்களை மெய்ம்மறக்கச் செய்துவிட்டார்கள். மிருதங்க லய வித்துவான் பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் அவர்களும், மிருதங்கம், கஞ்சிரா வாத்தியங்களில் சிறந்த தக்ஷிணாமூர்த்தி பிள்ளை அவர்களும். மணி அய்யர் அவர்கள் மிருதங்கமும், தக்ஷிணாமூர்த்தி பிள்ளை கஞ்சிராவும் இணைந்து வாசித்துக் கேட்க வேணும் என்று சங்கீத ரஸிகர்களுக்கு ஓர் ஆசையைத் தூண்டிவிட்டார்கள் அவர்கள்.

ஸ்ரீ மணி அய்யர் அவர்கள் திருவில்வாமலையில் ஸ்ரீ சேஷபாகவதர் அவர்களின் புதல்வராகப் பிறந்தார். இளமையில் சாத்தபுரம் சுப்பையர் அவர்களிடம் ஸ்ரீ மணி மிருதங்கம் வாசிக்கக் கற்றார். ஆரம்பத்தில் ஸ்ரீ மணி அய்யர் அவர்கள் தம் தகப்பனார் சேஷ பாகவதர் அவர்களின் கதைகளுக்கு வாசித்து வந்தார். இளமையிலேயே நன்கு தேர்ச்சியடைந்துள்ள ஸ்ரீ பாலக்காடு மணி அய்யரின் வாசிப்பைக் கண்டு மகிழ்ந்த செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்கள் தம் கச்சேரிகளுக்கு மணி அய்யரின் மிருதங்கத்தையே விரும்பி வைத்துக் கொண்டார்.

ஸ்ரீ மணி அய்யர் அவர்கள் கலைகளின் பிறப்பிடமான தஞ்சைக்கு வரும்போதெல்லாம் தஞ்சாவூர் ஸ்ரீ வைத்தியநாதய்யர் அவர்களிடம் மிருதங்க, லய வின்யாசங்களையும் நுட்பங்களையும் மிருதுவாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பேற்பட்டது. இதனால் அவரது வாசிப்பு மேலும் மெருகேறியது.

ஒரே பாட்டைத்தான் பலர் பாடுகிறார்கள். ஆனால் ஒவ்வொருவர் பாடும் போதும் ஒவ்வொரு விதமாக ஒலிக்கிறது. சிலரது பாட்டை ரசிக்க முடிகிறது; சிலரது பாட்டை ரசிக்க முடிகிறதில்லை. அதைப் போலத்தான் மிருதங்க வாத்தியத்தில் ஸ்ரீ பாலக்காடு மணி அய்யர் வாசிக்கிறாரென்றால் பிறரது வாசிப்பிலிருந்து தனிப்பட்டு, தமக்கென்று ஓர் அபூர்வ வழியைப் பின்பற்றி எல்லோருக்கும் முதன்மையாகத் திகழ்கிறார். எப்படி ஒரு ராகத்தை எடுத்து நீண்ட நேரம் ஆலாபனை செய்யலாமோ, அவ்வாறே ஒரு தாளத்தையும் எடுத்துக் கொண்டு நீண்ட நேரம் கல்பனையாக விந்யாஸம் செய்து வாசிக்கலாம். மணி அய்யர் தனி ஆவர்த்தம் என்றால் ரஸிகர்களுக்குக் கொண்டாட்டம் தான். 'ஆஹாகாரம்' செய்து கரகோஷம் செய்து அநுபவிக்கத் தொடங்கி விடுவார்கள்.



மணி அய்யர் மிருதங்கம் என்றாலே அந்தக் கச்சேரிக்குத் தனி மதிப்புத்தான். பாட்டுக்கு வாசிக்கும் போதும், கற்பனை ஸ்வரம், நிரவல் முதலியவற்றுக்கு வாசிக்கும் போதும் பாடகருக்கு மிகவும் உதவியாகவும் பாட்டைப் பிரகாசிக்கும்படியாகவும், வாசிக்கும் திறமை மணி அய்யருக்கே உரித்தானது. முன்பெல்லாம் மிருதங்க ஆவர்த்தம் ஆரம்பிக்கிறது என்றால் சபையோரில் பலர் எழுந்து வெளியே சென்று சற்றுக் காலார உலவி வரச் சமயம் என்று கருதுவது உண்டு. ஆனால் மணி அய்யர் தனி ஆவர்த்தம் வாசிக்கிறார் என்றால் வெளியே நிற்பவர்கள்கூட உள்ளே வந்து உட்கார்ந்து அமைதியாகக் கேட்பது வழக்கமாகி விட்டது.

பைரவி வர்ணம், பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் முதலியவற்றுக்கு ஸ்ரீ மணி அய்யர் மிருதங்கம் வாசிக்கும்போது ஏற்படும் உணர்ச்சி நிகரற்றது. பாட்டுக்களின் சங்கதிகளை அநுசரித்து மிருதங்கத்தில் சொற்களை வாசிக்கும் முறை அவருக்கே பிரத்தியேகமானது. மீட்டுச் சாப்பு சுத்தமாய்ச் சேர்த்து அவர் வாசிக்கும் போது அந்த நாதமே தனி. சொற்கள் எல்லாம் தெளிவாகவும், கனநயத்துடனும் விழும். கணக்கு வழக்கு செய்தால் நிச்சயத்துடன் இடத்தில் வந்து நிற்கும்.


ஒரு கச்சேரியில் மூன்று தனி ஆவர்த்தம் விட்டால் மூன்றும் ஒரேமாதிரியாக இராமல் வெவ்வேறு வகையாகவும், கவர்ச்சியாகவும் இருக்கும். மேலும் கடம், கஞ்சிரா முதலான வாத்தியக்காரர்களையும் உற்சாகப்படுத்தித் தம்முடன் அழைத்துச் செல்லும் அவரது பண்பு போற்றுதற்குரியது.

துல்லியமான சுருதி ஞானம் படைத்தவர் ஸ்ரீ பாலக்காடு மணி அய்யர் அவர்கள். அவருக்கு 1956ம் ஆண்டில் ஜனாதிபதி விருது வழங்கிக் கௌரவப்படுத்தினார். தாம் சங்கீத உலகில் புகுந்தது முதல் மிருதங்கத்தில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் அவரது திறமையான வாசிப்பை மேல்நாட்டாரும் கேட்டு ரஸிக்கப் போகிறார்கள். அவரோடு அவரது புதல்வர் இன்ஜினியர் ராஜாமணியும் செல்கிறார். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? தந்தையைப் போலவே தனயனும் மிருதங்க வாத்தியத்தில் நன்குதேர்ச்சியடைந்துள்ளார்.

சங்கீத உலகில் இன்று முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் வித்துவான் பாலக்காடு ஸ்ரீ கே. வி. நாராயணசாமி; அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார் அவர்களின் சிஷ்யர் இவர். பாலக்காடு ஸ்ரீ மணி அய்யரின் வாத்திய இசையழகை ஸ்ரீ நாராயணசாமியின் இன்னிசையுடன் சேர்த்து மேல்நாட்டினர் கேட்கப் போகிறார்கள்.

'சங்கீதக் குடும்பம்' என்றால் லால்குடி ஜயராமனுக்குப் பொருந்தும். அவர்கள் குடும்பமே பிடில் வாத்தியத்தில் பிரசித்தி பெற்றது. தமது இனிமையான வாசிப்பினால் இவரும் மேல்நாட்டு ரசிகர்களைக் கவருவார் என்று எதிர்பார்க்கலாம்.

மிருதங்க மேதை மணி அய்யர் அவர்களும் மற்றும் இள வித்துவான்களான ஸ்ரீ ராஜாமணியும், ஸ்ரீ கே. வி. நாராயணசாமியும், லால்குடி ஜயராமனும் எடின்பரோ கலைவிழாவில் கர்நாடக சங்கீதத்தின் உயர்வை, குறிப்பாக மிருதங்க வாத்தியத்தின் தனிச் சிறப்பை நிலைநாட்டி விட்டு வருவார்கள், ஐயமில்லை.



எடின்பரோ கலை விழாவில் கலந்துகொள்ளவிருக்கும் கலைஞர்கள்.

சில நாட்களுக்குப் பிறகு விசாலாட்சி மீண்டும் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். அவனும் குழந்தையாக இருக்கும் போதே இறந்துவிட்டான். ''அதனால் தான் பெரிய சகோதரிகளாகிய எங்கள் மூவருக்கும் கடைசி இரு சகோதரிகளாகிய சொர்ணம், நித்யாவுக்குமிடையில் பெரிய வயது வித்தியாசம் இருக்கிறது'' என்று விளக்கினார் ஸிஸ்டர்.

இரு பையன்களும் அதிக நாட்கள் உயிர் தரித்து இல்லாததால் சிறுமி சுப்புலக்ஷ்மிக்குத் தனக்குத் தம்பிகள் இருந்ததாகவே தோன்றவில்லை. அவர்களின் மறைவினால் ஏற்பட்ட துன்பமும் சீக்கிரம் மறைந்து விட்டது. மிகவும் சந்தோஷமாகவே வளர்ந்தாள். பள்ளிக்கூடம் போவதில் ரொம்பவும் ஆசை இருந்தது. ஐந்து வயது ஆகும்போது அந்தச் சிறு பள்ளிக்கூடத்தில் கற்கக் கூடியதெல்லாம் கற்றுவிட்டாள். அந்தக் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளி அவர்கள் வீட்டுக்கு அருகில் இருந்தது. அடுத்தபடி அங்கு போவதுதான் நியாயமென்று தோன்றியது. அவள் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட விருந்ததைக் கேட்டு நண்பர்கள் மிகவும் அதிர்ச்சியடைந்தார்கள். இதற்குக் காரணம் சுப்புலக்ஷ்மி பெண்ணாய்ப் பிறந்தவள் என்பது மட்டுமல்ல; அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் ஒரு கிறிஸ்தவ நாடார். சம்பிரதாயத்தில் ஊறிய மனிதர்கள் மதிப்புக்குரிய பிராமணக் குடும்பத்துப் பெண் ஒருத்தி அத்தகைய இடத்துக்குப் போவது தவறு என்று அந்நாளில் கருதியதில் வியப்பில்லை.

தலைமை ஆசிரியரின் மனைவியும் பெண்ணும் மிகவும் நல்லவர்கள், அன்பானவர்கள், ஒழுக்கம் மிக்கவர்கள் என்பது சீக்கிரமே புலனாயிற்று. குட்டி சுப்புலக்ஷ்மிக்கு அவர்களிடம் மிகவும் பற்று ஏற்பட்டு விட்டது. ஆனால் தலைமை ஆசிரியரிடம் அவ்வளவாக ஈடுபாடு உண்டாகவில்லை.

சேவைக்கு ஒரு சகோதரி




மோனிகா ஃபெல்டன் - அருத்தமா

ஸிஸ்டர் நினைவுபடுத்திக் கொண்டு கூறினார். ''அவர் மிகவும் குரூரமான, நாகரிகமற்ற முரடனான ஒரு மனிதர். குழந்தைகளை அடிப்பதில்தான் அவருக்கு சந்தோஷம். தினமும் காலையில் வந்தவர்களைக் கணக்கிடுவார். பிறகு எந்தக் குழந்தை தம் அருகில் இருந்ததோ அதை அடிக்க ஆரம்பிப்பார். பாவம், அந்தக் குழந்தை யாராயிருந்தாலும் சரி. பள்ளிக்கு வராத குழந்தைகள் எத்தனை பேரோ அத்தனை அடிகள் வாங்கவேண்டும்! இதே ரீதியில் நாள் முழுதும்

செல்லும். நாங்கள் வீடு வந்து சேர்வதற்குள் அநேகமாக வகுப்பில் எல்லோருமே அடி வாங்கியிருப்போம்.''

இத்தனை அடிபட்டும் கூட அச்சிறு பெண் பள்ளிக்கூடத்துக்கு ஆனந்தமாய்ப் போய், சந்தோஷமாகப் படித்தாள். சீக்கிரமே நன்றாகப் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டாள். கணக்கிலோ ஒன்றுகூடத் தப்பு வராது. இனி பள்ளிக்கூடத்தில் கல்வி பயில வேண்டியது அதிகம் இருக்கவில்லை. ஆனால், அந்நேரத்தில் அவள் தன்னையறியாமலே வீட்டில் நிறையக் கற்றுக்கொண்டிருந்தாள். ஒவ்வொரு மாலையும் குழந்தைகள் உறங்கப் போகு முன் அவர்களுடைய தாயாரும் சித்தியும் மகாபாரதம், ராமாயணத்திலிருந்து கதைகள் சொல்லுவார்கள். அவை மிகவும் சுவாரசியமாக இருக்கும். தேவர்களும், தேவிகளும், அரசர்களும், அரசிகளும், சாதாரண எளிமையான மக்களும் நல்ல தேவதைகளும், துர்த் தேவதைகளும் மனிதர்களைப் போல் நற்குணங்களுடன் நடந்துகொண்ட மிருகங்களும் கொடிய



மிருகங்களைப் போல் சுபாவம் கொண்ட மனிதர்களும்... இவைகளை யெல்லாம் பற்றி எவ்வளவு கேட்டாலும் சுப்பு லக்ஷ்மிக்குத் திகட்டாது.

இந்தக் கதைகள் எல்லாவற்றிலும் படிப்பினை இருந்தது. அது முதலில் சொல்லும்போது விளங்காவிட்டாலும், பின்னால் அக்கதைகள் பொருள் செறிந்தவை என்பது புலனாயிற்று. அச்சிறு பெண் கேள்விக்கு மேல் கேள்வி கேட்பாள். அவளுடைய அறிவை வளர்ப்பதற்காக அவளுடைய தாயாரும், சித்தியும் பொறுமையாகப் பதிலளிப்பார்கள்.

சுப்பிரமணிய அய்யரும் தமக்குச் சௌகரியம் நேர்ந்த போதெல்லாம் குழந்தைகளுடன் இருப்பார். அடிக்கடி அவர்களை அடையாற்றங்கரை வரையில் அழைத்துச் செல்வார். இப்பொழுதெல்லாம் மழைக்காலத்தைத் தவிர அந்த ஆற்றில் அதிகமாகத் தண்ணீரைக் காண முடியாது. அங்குமிங்கும் கற்களுக்கும் மணற் திட்டுக்களுக்கும் புல்வெளிக்கும் இடையே ஆழமில்லாத வாய்க்கால் போல் ஓரளவு நீரோட்டம் இருக்கும். சைதாப்பேட்டை 'மார்மலாங்' பாலத்துக்குக் கீழேயும் அதன் இருமருங்கிலும் இப்போது சலவைத் தொழிலாளர்களின் சொர்க்கமாக ஆறு மாறிவிட்டது. மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து வரும் பஸ்கள் அந்தப் பாலத்தின் அருகே சற்று நிற்க நேர்ந்தால் உலகம் முழுவதிலுமிருந்தும் வரும் பிரயாணிகள் நம்ப முடியாததோர் ஆச்சரியத்துடன் அங்கு ஆயிரமாயிரம் வேட்டிகளும், புடவைகளும், சட்டைகளும், ரவிக்கைகளும், துண்டுகளும், விரிப்புக்களும் கற்களின் மீது அறையப்படுவதும், புல் தரையின் மீது உலர்த்தப்பட்டிருப்பதுமான காட்சியைக் கண் கொட்டாது பார்க்கிறார்கள்.

சுப்புலக்ஷ்மி சிறுமியாக இருந்தபோது அந்த ஆறு ஆழமாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் நகரத்திலிருந்து பல மக்கள் வண்டி வைத்துக் கொண்டு அங்குவந்து அரசினர் ஏற்பாடு செய்து வைத்திருந்த உல்லாசப் படகுகளில் ஏறிச் சுற்றி வருவார்கள். சுப்பிரமணிய ஐயரும் விசாலாட்சியும் தங்கள் பெண்களையும் உல்லாசப் பயணத்துக்கு அழைத்துச் செல்வார்கள். ஆங்காங்கு இருக்கும் முக்கியமான இடங்களைக் காட்டுவார்கள். பொதுவாக அவர்கள் வாழும் உலகத்தைப் பற்றிப் பலவும் கற்றுத் தந்தார்கள்.

அவர்கள் மீண்டும் வீடு திரும்பும் போது பாட்டியும், சித்தியும் சாப்பாடு தயாராக வைத்திருப்பார்கள். அவர்கள் சமையல் மிகவும் ருசிகரமாகவும், ஆரோக்கியமானதாகவும் இருக்கும். விவசாயக் கல்லூரித் தோட்டத்திலிருந்து எத்தனையோ வகைக் காய்கறிகளும், பழங்களும் கிடைத்தன. தரமான பால் கிடைத்ததால் தயிருக்கும் வெண்ணெய்க்கும் நெய்க்கும் குறை வில்லை. அரிசியும் பருப்பும் இதர தானியங்களும் நிறையக் கிடைத்தன. சுப்புலக்ஷ்மி சுவையான உணவை ரசித்துச் சாப்பிடுவாள்.

சமையலறையில் ஒரு தனிப்பட்ட இடத்தில் கருத்த விக்கிரகம் ஒன்றைச் சுற்றிப் பல கடவுள்களின் வண்ண வண்ணப் படங்கள் மாட்டப் பட்டிருந்தன. இந்த இடத்தில் தன் தாயார் பூஜை செய்வதையும் பிரார்த்தனை செய்வதையும், புஷ்பங்களால் அர்ச்சிப்பதையும் பார்ப்பதற்குச் சுப்புலக்ஷ்மிக்கு அதிக விருப்பமாக இருந்தது. தன் தாயார் கற்றுக் கொடுத்த சம்ஸ்கிருத தோத்திரங்களின் அர்த்தத்தை அறிவதற்கு அவள் மிகவும் கஷ்டப்பட்டாள். சில மந்திரங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவற்றின் ஒலி அழகு காரணமாய்க் கேட்பதற்கு ரம்மியமாகவும் மனனம் செய்வதற்கு எளிதாகவும் இருந்தது.

அவள் தாயார் கூறினாள்: "உனக்கு இப்பொழுது எல்லாம் புரியாவிட்டாலும் பரவாயில்லை. அர்த்தம் பிறகு தெரியும். இப்போது கற்றுக் கொண்டால் வயதான பிறகு மனனம் செய்யச் சௌகரியமாக இருக்கும்."

சிறு பிராயத்திலேயே சுப்புலக்ஷ்மிக்கு அவள் தாயார், உலகில் ஆயிரக் கணக்கான கடவுள்களை மனிதர்கள் தொழுதாலும் உண்மையில் இருப்பது ஒரே கடவுள்தான் என்று விளக்கினாள். கடவுளுக்கு இத்தனை வேறுபட்ட பெயர்களும் உருவங்களும் தொழுவதற்காக ஏற்பட்டிருப்பதன் காரணம், அத்தனை விதமான கடவுள்கள் இருப்பதனால் அல்ல. அத்தனை விதமான மனிதர்கள் இருப்பதனால்தான். அத்தனை பேருக்கும் கடவுளை ஒரே பெயரினால் அழைப்பதில் திருப்தி ஏற்படுவதில்லை. அவரவர்களும் பலவித வார்த்தைகளில் உணர்ச்சிகளை வெளிப்படுத்திப் பார்க்கிறார்கள். அவ்வளவையும் ஒரே வார்த்தையில் சொல்லிவிடுவது கடினமா யிருக்கிறது. இறைவனைப் பற்றிய வெவ்வேறு கருத்துக்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒருமிக்கப் பார்க்கும்போதும் மிகச் சிறிதளவேதான் ஆண்டவனுடைய பெருமையைப் பற்றி உணர முடியும். ஏனென்றால் ஆண்டவனுடைய அருமை பெரியவர்களுடைய அறிவுக்கெல்லாம் கூட அப்பாற்பட்டது. நம்மால் இயன்ற

நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!



புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!

குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!

சார்மிஸ்

உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

CHTP. G. M

நாளொரு மேனியாக...,

எழிலோங்கச் செய்வது

ரெக்ஸோனா



கொஞ்சி உறவாடி நாளொரு மேனியாக உமது
எழிலுக்குப் பொலிவை ஊட்டி வளர்ப்பது ரெக்ஸோனா.
இதில் வியப்பென்ன? சரும எழிலுக்கான தைலங்களின்
கலவையான 'கேடில்' இருக்கிறது ரெக்ஸோனாவிலே.
தவிரவும், கமகமவென்று மணம் கமழ்வதால்,
மனமோங்கி மலரும் உங்கள் பொலிவு.

கேடில் அடங்கிய ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு உகந்தது.

RX. 24-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

அளவு புரிந்து கொள்ளப் பார்க்கவேண்டுமே யல்லாது, முழுமையும் புரிந்து கொள்ள முடியாது.

தாயாரும், சித்தியும் கற்றுத் தந்தவைகளில் சிலவற்றுக்கு மிக எளிதாக அர்த்தம் விளங்கும். தனக்கொன்றும் நினைவில்லாவிட்டாலும், இதற்கு முன் இவ்வுலகில் பல முறை பிறந்திருக்கிறோமென்பதும், இனியும் இப்பொழுது குடியிருக்கும் உடலை நீத்துச் சென்ற பிறகு மீண்டும் பிறவி எடுப்போம் என்பதும் சுலபமாகப் புரியக் கூடியனவாக இருந்தன. பாவச் செயல் செய்தவர்கள் அதற்குரிய தண்டனை பெறுவார்கள் என்றும், அல்லது அவர்கள் குற்றங்கள் சற்றுக் குறைவாக இருந்தால் ஏதோ ஒரு கஷ்டத்தை அனுபவிக்க நேரும் என்றும் அறிய முடிந்தன.

அவர்களுடைய இல்லம் மகிழ்ச்சி நிரம்பியதாக இருந்தது. சுப்புலக்ஷ்மிக்கு விரும்பியதெல்லாம் கிடைத்தது. அவள் ஓயாமல் ஒழியாமல், கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தாலும் பெற்றோர்களோ, சித்தியோ பதில் அளிக்க மறுத்ததில்லை.

இருப்பினும் ஒரே ஒரு கேள்வி இருந்தது. ....கேட்க முடியாதது: வயது ஆக, ஆக அது மனத்துக்குள் அடிக்கடி தோன்றிக் கொண்டேயிருந்தது. ஆயினும் வாய் விட்டுக் கேட்க முயலும் போதெல்லாம் ஏதோ ஒன்று கடுத்தது. வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

அந்தக் கேள்வி சித்தியைப் பற்றித்தான். சித்தி, பாட்டியைப் போல் வயதானவள் அல்ல. யாரும் அவளை அழகு என்று குறிப்பிடாவிட்டாலும் மிக மிகக் கருணை வாய்ந்தவையும், சந்தோஷம் நிரம்பினவையுமான கண்களையுடைய சித்தி பார்க்க மிக நன்றாக இருந்தாள். இருந்தாலும் அவள் உடுக்கும் முறையில் ஏதோ ஒரு புதுமை இருந்தது. சுப்புலக்ஷ்மியின் தாயார் அழகழகான பளிச்சென்ற நிறங்களில் பட்டுப் புடவைகளும், நன்றாகத் தைக்கப்பட்ட ரவிக்கைகளும் அணிந்தாள். அவள் தன் அடர்த்தியான கேசத்தைப் பளபளவென்று சீவி அழகாக, பெரிதாக முடிந்திருந்தாள். அவர்கள் வீட்டுக்கு வரும் பெண்களெல்லாம் இதேபோல் தான் அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள். சித்திமட்டும்தான் மாறுபட்ட உருவத்துடன் இருந்தாள். அவள் எப்பொழுதும் வெள்ளைப் புடவையே உடுத்தினள். ரவிக்கை அணிவதில்லை. புடவையின் மேலாடை தலைக்கு மேலாகச் செலுத்தப்பட்டுக் காதுகளின்



"கழுதைப் பால் சத்துள்ள ஆகாரம்னு செய்தி வந்ததோ இல்லையோ, பாருமேன் கழுதைக்குப் பிடித்தது அனர்த்தம்!"

பின்னல் இறுக்கப்பட்டிருந்தது. தலையில் மயிர் இல்லை என்று தோன்றியது.

பாட்டியும் இதேபோல்தான் தோற்றமளித்தாள். பாட்டிக்கு வயதாகிவிட்டது. அது ஒருவேளை காரணமாக இருக்கலாம். ஆனல் சுப்புலக்ஷ்மிக்கு இது தான் புரியவேயில்லை. — சுறுசுறுப்பு மிக்க தன்னுடைய அருமையான சித்தி, வேடிக்கை, வேடிக்கையாகப் பேசும் சித்தி, இந்த மாதிரி தன்னல் சகிக்க முடியாதபடி ஏன் ஆடை அணிய வேண்டும்? அதன் விவரம் தனக்குத் தெரியவில்லையே தவிர, அதைப் பற்றிக் கேட்பது சரியல்ல என்று அவள் உணரலானள். அதைப் பற்றிக் கேட்டாலும் யாரும் சரியாகப் பதில் சொல்ல மாட்டார்கள் என்ற உணர்வும் கூடவே இருந்தது.

'அதைக் குறித்து அறிய வேண்டும், தெரிந்து கொண்டே ஆகவேண்டும்! விவரம் தெரிந்த பெரிய பெண்ணாக வளர்ந்து கொண்டு வருகிறோம். சீக்கிரம் தனக்கு ஒன்பது வயது ஆகிவிடும்!'

ஆனாலும் சுப்புலக்ஷ்மியால் கேட்க முடியவில்லை.

2

சுப்புலக்ஷ்மி மிகவும் கெட்டிக்காரப் பெண்ணாக ஆகிக் கொண்டு வந்தாள். ஈ. எஸ். எல். ஸி. பொதுத் தேர்வு எழுத உட்கார்ந்தபோது அவளுக்கு வயது ஒன்பதேதான். செங்கல்பட்டு மாவட்டம் முழுமைக்கும் முதலிடம்



“என் உள்ளத்தைக் கோயில்னு கொண்டாடறீங்களே, எங்கே அந்தக் கோயிலுக்கு ஒரு கோபுரக் கொண்டை போடுங்களேன், பார்ப்போம்!”

பெற்று அவள் வெற்றி அடைந்தாள். இத்துடன் அவளுக்குக் கல்வி போதும் என்று அவள் பெற்றோர்கள் நிச்சயித்து விட்டார்கள். இந்த வயதுடைய மற்ற அநேகம் பெண்களுக்குத் திருமணம் ஆகிவிட்டிருந்தது. இவளுக்கும் ஒரு கணவன் தேடச் சமயம் வந்து விட்டது. ஆயினும் அவள் பெரியவளாக இன்னும் பல வருஷங்கள் ஆகுமாகையால் அவசரப்பட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. இருந்தாலும் நிறைய வரதட்சிணை கொடுக்க இயலாத பெற்றோர்கள், தம் பெண்களுக்குக் கணவன்மார்களைத் தேடுவது சுலபமல்ல. எதற்கும் வரன் பார்த்துக் கொண்டிருப்பது நல்லது என்று சுப்பிரமணிய ஐயர் நினைத்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்துக் கிராமமொன்றில் விசாலாட்சியின் தம்பியின் திருமணம் நடக்க விருந்தது. விசாலாட்சியும் அவள் கணவரும், மூன்று பெண்களும் கல்யாணத்துக்குப் போவதென்று தீர்மானமாயிற்று. அந்த விசேஷங்கள் முடிந்த பின்னர் மீண்டும் ராமேசுவரம் போவதாக இருந்தார்கள், அதன் பிறகாவது விசாலாட்சிக்குத் தீர்க்காயுசான ஆண் பிள்ளை பிறக்க வேண்டும் என்று பிரார்த்திக்க.

கல்யாணம் விமரிசையாக ஐந்து நாட்கள் நடந்தது. சின்னஞ்சிறு கல்யாணப் பெண்ணும் பிள்ளையும் ஹோமத்துக்கு முன் பொம்மைகள்போல் அமர்ந்து புரோகிதர்கள் சொன்ன மந்திரங்களை உச்சரித்தனர். ஹோமப் புகையினால் கண்ணில் நீர் நிரம்பி வழிந்தாலும் அவர்கள் அசையவில்லை. கை கோத்துச் சுற்றி வரும்போது கண்களைத் தாழ்த்தியிருந்தனர். ஒருவரையொருவர் ஓரக் கண்ணால் கூடப் பார்க்க எத்தனிக்கவில்லை. அவர்கள் ஒருவரை யொருவர் இதுவரை பார்த்ததில்லை. இந்தக் குழந்தைப் பெண் பெரியவளாகும் வரை அவர்கள் ஒருவரையொருவர் பார்ப்பதும் பழகுவதும் அரிது. வயது வந்த ஒரு வாரத்துக்குள் சாந்தி முகூர்த்தம் நடந்து விடும். பிறகு அவள் தன் புக்ககம் போய் விடுவாள்.

சுப்புலக்ஷ்மி இப்படியெல்லாம் தனக்கும் நேரும் என்று யோசித்துப் பார்க்க அஞ்சினாள். இந்த எண்ணங்களைத் துடைத்து மனத்தை இறுக மூடிக் கொண்டுவிட்டாள். கல்யாணத்துக்குப் பிள்ளைகள் இருந்த தகப்பன்மார்களின் பேராசையைப் பற்றியும் அவர்கள் அளவுக்கு மீறிய வரதட்சிணை கேட்பதைப் பற்றியும், புது வீடு புகுந்து நல்ல பெயர் எடுக்க விழையும் மருமகளைக் கொடுமைப்படுத்தும் மாமியார்களைப் பற்றியும் பெரியவர்கள் பேசும்போதெல்லாம் அங்கு இருக்கக் கூடாதென்று யாரும் சுப்புலக்ஷ்மிக்குச் சொல்ல வேண்டிய அவசியமிருக்கவில்லை. சம்பாஷணை இந்தக் கட்டத்துக்கு *வரும் முன்னர் சுப்புலக்ஷ்மி தானாகவே வெளித் திண்ணையின் நிழலுக்குத் தனிமையில் ஒரு புத்தகத்துடன் நழுவி விட்டிருப்பாள்.

அவள் தனிமையை வெகுவாக உணர்ந்தாள். அதிக வயது வித்தியாசமில்லாத அவள் தங்கைகள் பாலமும் சாவித்திரியும் தங்களுக்குள் விளையாடிக் கொள்வார்கள். சுப்புலக்ஷ்மிக்குத் தன் வயதுக்கேற்ற நண்பர்கள் இருக்கவே இல்லை. அவர்கள் தங்கியிருந்த வீட்டுப் பெண்களும் பிள்ளைகளும் அவளைவிட வயதில் மிகவும் இளையவர்களாகவோ, மூத்தவர்களாகவோ இருந்தனர்.

திண்ணையில் அமர்ந்து படித்துக் கொண்டோ, பகற் கனவு கண்டு கொண்டோ இருக்கும்போது அக்ரஹாரத்துக் குழந்தைகள் தெருவில் விளையாடுவதைக் கண்டு அவளால் சிறிது ஏக்கமும், பொறாமையும் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ஒரு நாள் அவள் படித்துக்கொண்டு திண்ணையில் உட்கார்ந்திருந்தாள். சற்றுத் தூரத்தில் விளையாடிய குழந்தைகளின் சிரிப்பும் சத்தமும் அவள் செவிகளில் அரைகுறையாக விழுந்து கொண்டிருந்தன. அப்போது உரத்த பரிதாபமான கூக்குரல் ஒன்று கேட்டது. **(தொடரும்)**

காதல் இல்லையேல் சாதல்



'சோ'

[கவிதை என்றால் வீசை என்ன விலை என்று கேட்கக் கூடிய நாகராஜன் சந்தர்ப்பவசத்தால் 'கவிஞன்' ஆகி விடுகிறான். தனக்கு ஒரு கவிதை எழுதித் தருமாறு அவனைப் பணித்தாள் அதே கல்லூரியில் படிக்கும் மாலதி. நாகராஜன் தவித்தான். கவிதை எழுதி வராததற்காகக் கோபித்தவளிடம் வேறு ஒருவர் தொந்தரவு செய்ததன் பேரில் எழுதியதை அவருக்குத் தந்து விட்டதாய்ச் சாக்குப் போக்குக் கூறுகிறான். ஏமாற்றமடைந்த மாலதி என்னை விட அவர் உசத்தியாகப் போய் விட்டாரா என்று ஏங்குகிறாள்.... இனி, மேலே]

நாக: சே! சே! அவர் ரொம்ப நாளா கவிதை கேட்டுத் தொந்தரவு பண்றார்.... நீங்க இப்பத்தானே பண்றீங்க.....ஐ மீன்.... வந்து நீங்க இப்பத்தானே கேக்கறீங்க......

மால: யார் அந்த நண்பர்.....

நாக: அவர்தான்... அந்தக் கவிதை கேட்டாரே அவர்தான்.

மால: கவிதை கேட்டவர்தான். யாருன்னு கேக்கறேன்......

நாக: அவர்தான் என் நண்பர்....

மால : ஐயோ ! அவர்தான் யாருன்னு கேக்கறேன்.....

நாக: அவர்தான் கவிதை கேட்டாரே....

மால (விளக்கமாகக் கேட்கும் முயற்சியில்): கவிதை கேட்டாரே உங்க நண்பர் அவர் யாரு ?

நாக: எனக்குத் தெரிஞ்சவர்....

மால: பேரென்ன ?

நாக: நாகராஜன்.

மால: உங்க பேரைக் கேக்கலே. அவர் பேரைக் கேட்டேன்.

நாக: யார் பேரைக் கேட்டீங்க.....?

மால: உங்க நண்பர்......

நாக: யாரு அவரு?

மால: அதான் கவிதை கேட்டாரே, அவரு........

நாக: உங்களுக்குத் தெரியுமா அவரை ?

மால: கடவுளே! என் தலே சுத்தறது..... ஆல்ரைட்..... நீங்க தமாஷ் பண்ணிக்கிட்டே இருங்க. நான் போறேன்......

நாக: கோபிச்சுக்காதீங்க... அவரு..ஒரு..

மால: அவரும் ஒரு கவிஞரா?

நாக: ஆமாம்! ஆமாம்!.... கவிஞர்......

மால: கவிஞரே வந்து உங்ககிட்டே கவிதை கேட்டாரா..... அப்ப கண்டிப்பா எழுதிக் கொடுக்க வேண்டியதுதான். நான் உங்களைக் கோவிச்சுக்கிட்டதுக்கு ஐ ஆம் சாரி!

நாக: ஹி...ஹி....ஹி.......

மால: யார் அந்தக் கவிஞர்......?

நாக: பாரதியார்.

மால: பாரதியாரா?

நாக: இல்லே... இல்லே.... பாதிரியார்....

மால: பாதிரியாரா?

நாக: யெஸ்..... நம்ம காலேஜ் புரொபஸர்...... ஒரு பாதிரியார் இல்லே.... அவர் தான் கேட்டார்.....

மால: அவருக்குத் தமிழே தெரியாதே....

நாக: அதனாலேதான் கேட்டிருக்கார்.

மால: தமிழே தெரியாம, அவர் எப்படி அதைப் புரிஞ்சுப்பார்......?

நாக: அதனாலென்ன? அவர் அதை இங்கிலீஷ்லே மொழிபெயர்த்துப்பார்.

மால: அவருக்குத்தான் தமிழ் தெரியாதே.

நாக: இங்கிலீஷ் தெரியுமே......

மால: தமிழ் தெரியாம, எப்படித் தமிழ்லேந்து மொழிபெயர்க்கிறது?

நாக: அவரைத்தான் கேக்கணும்... நமக்கு என்ன? அவர் பாடு!

மால: சரி..... நான் கேட்ட கவிதை என்ன ஆச்சு ?

நாக: இன்னும் மறக்கலியா?..... உம்..... ஆல்ரைட்... ஒரு அஞ்சு நிமிஷம் டைம் கொடுங்க. எழுதிடறேன்.

மால: சரி, நான் போய்த் தண்ணீர் குடிச்சுட்டு வரேன்..... அதுக்குள்ளே எழுதிடுங்க.

(வெளியே போகிறாள்)

நாக: கடவுளே!....

[பேப்பரையும் பேனாவையும் எடுத்து யோசிக்கிறான். 'கவிதை வீசை என்ன விலை என்று கேக்கறவன் நான்...மாலதி உனக்கு ஏன் இந்த விபரீதமான ஆசை?... உன் மண்டையிலே என்ன ஒன்னுமே இல்லையா?... காலியா?... என்றெட

சண்டை போடனும்னு தீர்மானம் பண்ணிக் கிட்டியா?... அதுதான் உனக்கு ஜோலியா?' (தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தவன், திடீரென்று பேச்சை நிறுத்துகிறான். ஏதோ யோசனை தோன்றிவிட்ட மாதிரி மகிழ்ச்சி முகத் திலே பரவுகிறது) 'ஆசை... விசை... காலி... ஜோலி!... ஆஹா கவிதை!' (எழுத ஆரம் பிக்கிறான். எழுதி முடித்துச் சுற்று முற்றும் பார்க்க மாலதி வருகிறாள்.]

மால: எழுதிட்டீங்களா....

நாக: ஓ யெஸ் !....

மால: எங்கே கொடுங்க......

நாக: இருங்க......இருங்க......தரேன்.ஆனா படிச்சுட்டு நீங்க கோபிச்சுக்கக் கூடாது... ஸிம்பிளாத்தான் எழுதியிருக்கேன்....

மால: ஸிம்பிளா வார்த்தையைப் போட்டே, பெரிய அர்த்தத்தைச் சொல்லிடு வீங்களே நீங்க....

நாக: ஏதோ என் மனசுலே இருந்ததைச் சொல்லிட்டேன். நீங்க வெளியிலே போனீங்க. எனக்கு ஏதோ தோணித்து..... அதையே எழுதிட்டேன்.

மால: பீடிகையும், முன்னுரையும் பலம்மா இருக்கே......எங்கே கவிதை....?

நாக: கோபிச்சுக்க மாட்டீங் களே....

(காகிதத்தை நீட்டுகிறான்)

[மாலதி அவன் கையிலிருந்து பேப்பரைப் பிடுங்குகிறாள். ஆவலோடு அவசரமாகப் பிரித்துப் படிக்கிறாள். முகம் அஷ்ட கோணலாகிறது.]

கவிதை என்ன விலை விசை?
அவதி உந்தன் விபரீத ஆசை!
மண்டையென்ன உனக்குக் காலியா?
சண்டை என்ன உனக்கு ஜோலியா?

நாக (அவள் முகத்தைப் பார்த்துப் பயந்து): என்ன..... என்ன?

மால: என்னைப் பிடிக்கலேன்னு நேரே சொல்லியிருக்கலாமே?.... அதுக்கு இந்த மாதிரி யெல்லாம் திட்டியிருக்க வேணும்....

நாக: அய்யய்யோ.... நான் ஒண்ணும் திட்டலியே ?

மால: உங்க கவிதைக்கு என்ன அர்த்தம் ?

நாக: யாரைக்]கேட்கலாம்?

மால: உங்க தமாஷெல்லாம் என்கிட்டே வெச்சுக்க வேண்டிய தில்லே....

நாக: நீங்க சரியாப் புரிஞ் சுக்கலே....

மால: இன்னும் புரியறதுக்கு என்ன இருக்கு? உங்க கவிதையி லேதான் எல்லாம் சொல்லிட்டீங் களே. நான் கவிதை விசை என்ன விலேன்னு கேக்கறவ (துக் கம் தொண்டையை அடைக்க) எனக்கு எதுக்கு உங்கமேலே.... ஐ மீன்.... உங்க கவிதை மேலே ஆசை? (அழுது கொண்டே) என் மண்டை காலி..... நான் ஒரு முட்டாள்..... எனக்கு எல்லார் கிட்டேயும் சண்டை போடறது தான் வேலே.....

நாக: நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க.....

மால: இன்னும் வேறே பாக்கியிருக்கா ? போறும், மிஸ்டர் நாகராஜன் போறும். உங்க சிநேகிதம். குட் பை!

(போய் விடுகிறாள்)

நாக: மிஸ் மாலதி! (திகைத்து நிற்கிறான்)

(காட்சி முடிவு)

காட்சி - 6

[மாலதி நாகராஜனிடம் கோபித்துக்கொண்டு சென்ற தினத்திற்கு மறுநாள் காலே நாகராஜன் கவிதைப் போட்டியில் தான் பரிசாகப் பெற்ற வெள்ளிக் கோப்பையைத் தூக்கிக்கொண்டு வேகமாக நடந்துகொண்டிருக்கிறான். அவனுக்குப் பின்னல் மாலதி வந்துகொண்டிருக்கிறாள்.]

மால: நாகராஜன்..... கொஞ்சம் நில் லுங்க......

நாக (யாரோ சொக்கி மாட்டி இழுத்தாற் போல் 'டக்' என்று நின்று திரும்பிப் பார்த்து) நீங்க.... கூப்பிட்டீங்களா?

மால: ஏன், கூப்பிடக் கூடாதா?

நாக: நான்தான் கூப்பிட முடியாது பண்ணிக்கிட்டேனே? நான் எழுதினதை நீங்க



சரியாப் புரிஞ்சுக்கலே...... நான் உங்களுக்குக் கவிதையைப் பத்தித்தெரியாதுன்னு சொல்லவே இல்லே. எனக்குத்தான்.....

மால: நீங்க ஒன்னுமே சொல்ல வேண்டாம் நாகராஜன்... நான் எல்லாம் தெரிஞ்சுக்கிட்டேன்.......

நாக: விஷயம் தெரிஞ்சு போச்சா....

மால: நல்லாப் புரிஞ்சுடுத்து. உங்க கவிதையை என் அறைக்குப் போய் அப்புறம் இரண்டு,மூணுதடவை படிக்கப் பார்த்தேன்..... அர்த்தம் புரிஞ்சுடுத்து.

நாக: நீங்க......

மாலதி: சொல்லட்டுமா? (அவன் பதிலுக்குக் காத்திராமல்),

கவிதை என்ன விலே விசை?
அவதி உந்தன் விபரீத ஆசை
மண்டை என்ன உனக்குக் காலியா?
சண்டை என்ன உனக்கு ஜோலியா?

நாக (குறுக்கிட்டு): நான்என்ன அர்த்தத்திலே எழுதினேன்னு...



ல: தெரியும்...கவிதை விசை என்ன விலேன்னு கேக்கறவங்களுக்கு, கவிதை மேலே உனக்கு இருக்கிற ஆசை, ஒரு விபரீதமான அவதின்னு என்னைப் பார்த்துச் சொல்றீங்க.....

நாக: வந்து......

மால: அப்புறம்...... எனக்கு வெக்கமா இருக்கு.

நாக: என் கவிதைக்கு அர்த்தம் சொல்றதுக்கா ?

மால: சே! சே!......
மண்டையென்ன உனக்குக் காலியா,
சண்டையென்ன உனக்கு ஜோலியா?
அதாவது, நீங்க கேக்கிறீங்க... மண்டே—திங்கட்கிழமை, நீ ப்ரீயாத்தானே இருப்பே? சண்டே — ஞாயிற்றுக்கிழமை உனக்கு ஜோலி ஒன்னும் இல்லேயே? ங்கிறதை, அவ்வளவு அழகா மண்டையென்ன உனக்குக் காலியா? சண்டையென்ன உனக்கு, ஜோலியான்னு கேட்டிருக்கீங்க...

நாக: அப்படியா?

மால: நாகராஜன்..... என்னே, ஸண்டே—மண்டே எல்லா நாளும் பார்த்துப் பேசணும்னு நீங்க விரும்பறீங்களா? பேசமாட்டேங்களா? நான் சொன்ன அர்த்தம் கரெக்ட் தானே நாகராஜன்?

நாக: கரெக்டோ இல்லேயோ சௌகர்யமா இருக்கு......

மால: என்ன சொல்றீங்க.....?

நாக: நீங்க என் கவிதைக்கு இந்த மாதிரி அர்த்தம் புரிஞ்சுக்கிட்டேங்களே?.... அது.... எனக்குச் சௌகரியம்தானே....நமக்குள்ளே என்ன சண்டை?

மால: ஸண்டேயென்ன எனக்கு ஜோலியா?

நாக: மண்டேயென்ன எனக்குக் காலியா?

மால: யெஸ்.

நாக: தாங்க்ஸ்.... என்ன சொன்னீங்க.... என் மண்டை காலியா?.....

மால: நோ, நோ நான் மண்டே ப்ரீயா வெச்சுக்குங்கன்னு, சொன்னேன் !

நாக: திங்கட்கிழமை மட்டும் என்ன? ஒவ்வொரு வாரமும் திங்களிலிருந்து சனிக்கிழமை வரைக்கும் ப்ரீயா வெச்சுக்கறேன். அதுக்கு அடுத்த வாரம் ஞாயிற்றுக் கிழமை ப்ரீயா வெச்சுக்கறேன்!

மால: வெரி குட்..... ஆமாம், மிஸ்டர் நாகராஜன்....

நாக: என்ன மிஸ்டர் வேண்டியிருக்கு....

மால: ஒரு கவிஞருக்கு மரியாதை கொடுக்க வேண்டாமா?

நாக: மரியாதை என்ன அழறது...... கவிஞர் மேலே அன்புதான் இருக்கணும். இப்ப பாரதியார் மேலே நமக்கெல்லாம் எவ்வளவு அன்பு — காதல்?

மால: உண்மையைச் சொல்லப் போனா, உங்க கவிதை மேலே எனக்குக் காதலே பொறந்திடுத்து நாகராஜன்.

நாக: கவிதை மேலேதானா..... கவிஞர் மேலே....

மால (வெட்கி): போங்க...நாகராஜன்... நாம் தினம் சந்தித்துப் பேசலாம் இல்லையா?

நாக: பேசலாம்...... ஆனா நீங்க தினம் ஒரு கவிதை எழுதச் சொன்னா என்ன பண்றது?

மால: உங்களுக்கு அது ஒரு கஷ்டமா?

நாக: கவிதை எழுதறது கஷ்டம் இல்லே... நீங்க அதுக்கு அர்த்தம் கண்டு பிடிக்கணுமே?

மால: என்னாலே முடியலேன்னா, உங்க கிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கறேன்.

நாக: அர்த்தமா? எங்கிட்டயா?

மால: சொல்ல மாட்டீங்களா?

நாக: எப்படி முடியும்? இப்ப கம்பர் ராமாயணம் எழுதினார். அவரேவா அர்த்தம் சொன்னார்? மத்தவங்கதான் அர்த்தம் சொல்லணும்.

மால: சரி, எப்படியாவது கஷ்டப்பட்டு நானே புரிஞ்சுக்கறேன்.

நாக: நீங்க....

மால: எனக்கொண்ணும் அப்படி வயசாகி விடலே..... 'நீ'ன்னே சொல்லலாம்.

நாக: சரி, மாலதி! நீ என்ன சொன்னாலும் நான் கேக்கறதுக்குத் தயார்.

மால: நீங்க முதல்லே ஒரு புனைபெயர் வெச்சுக்கணும்....

நாக: எதுக்கு?

மால: ஒரு கவிஞர் போய் நாகராஜன்னு பேர் வெச்சுக்கலாமா? நீங்க ஒரு தாஸனா மாறணும்.....

நாக: தாஸனா?

மால: ஆமாம்..... கவிஞர் பேரெல்லாம் பாருங்களேன். கபீர்தாஸர், புரந்தரதாஸர், கம்பதாஸன், காளிதாஸன், பாரதிதாஸன். கண்ணதாஸன்.....

நாக: நான் என்ன தாஸன்?..... ஆ!.... என் பேர் மாலதிதாஸன்!

மால: போறுமே சகிக்கலே. நாகராஜன்னே வெச்சுக்குங்க..... ஆமாம், அந்தப் பரிசுக் கோப்பையைக் கையிலே வெச்சுக்கிட்டு, எங்கே கிளம்பினீங்க?

நாக: நேத்து நீ எங்கிட்ட கோவிச்சுக் கிட்டுப் போனதிலே எனக்கு ஹார்ட் அப்படியே தூள், தூளாப் போச்சு.... கவிதையிலேதானே அந்த மாதிரி ஆச்சு. அதனாலே இந்தக் கவிதைப் பரிசுக் கோப்பையைக் கூவம் நதியிலே தூக்கியெறிஞ்சுடறதுன்னுதான் எடுத்துக்கிட்டுக் கிளம்பினேன்.

மால: சே! அதைக் கூவம் நதியிலேயா போடப் போனீங்க?

நாக: பின்னே என்ன கங்கையிலேயா கொண்டு போட முடியும்? எனக்குப் பயிசா வந்த பாவம், கங்கையிலே குளிச்சால்தான் இதுக்குப் போகும்னு நினைக்கிறியா?

மால: உங்களோட பேசி ஜெயிக்க முடியுமா? உங்களுக்குச் சரியாக என்னாலே பேச முடியாது.

நாக: ஆஹா மாலதி.... உலகத்திலேயே உன்னை மாதிரி ஒரு பெண்ணைப் பார்க்கவே முடியாது.

மால: ஏன் அப்படிச் சொல்றீங்க?

நாக: ஒரு ஆண்கிட்டே என்னாலே பேசி ஜெயிக்க முடியாதுன்னு எந்தப் பெண்ணாவது ஒப்புக்குவாளா? நீ ஓர் அதிசயப் பெண்!

மால (சிரித்து): பெண்களை நல்லாப் புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க!

நாக: என் கவிதையைத் தவிர மத்த எல்லாத்தையும் நல்லாப் புரிஞ்சுப்பேன்.

மால: சரி..... சரி..... நான் ஒண்ணு கேப்பேன்....மாட்டேன்னுசொல்லக்கூடாது!

நாக: அய்யய்யோ! என்ன கேக்கப் போறே? கவிதையா?..... அர்த்தம் ரெடியா இருக்கா?

மால: கவிதை இல்லே.

நாக: அப்பாடி!

மால: நீங்க எங்க வீட்டுக்கு ஒரு நாள் வரணும்.

நாக: யார்கிட்டே மாட்டிவிடப் போறே?

மால: கிண்டல் பண்ணாதீங்களேன்..... எங்க சித்தப்பாவுக்கு உங்களை அறிமுகம் செய்து வைக்கணும்......

நாக: சித்தப்பாவா?.... ஏன் அப்பா கிட்டேயே பேசி முடிவு பண்ணிடலாமே?

மால: எங்கப்பா உயிரோட இல்லே.......

நாக: அடடா..... ஐ ஆம் ஸாரி....

மால: பரவாயில்லே. எனக்கு நினைவு தெரியறதுக்கு முன்னாலேயே அவர் செத்துப் போயிட்டார். அவருக்குத் தமிழ் மேலே எவ்வளவு அன்பாம், தெரியுமா?

நாக: பின்னே ஏன் சாகணும்...? நான் தான் அப்போ கவிதையே எழுத ஆரம்பிக்கலையே.....

மால: உங்க கவிதையைப் படிச்சிருந்தா அவர் உங்களை விட்டிருக்கவே மாட்டார்.....

நாக: கட்டி வெச்சு உதைச்சிருப்பாரா?

மால: வீட்டுக்கு என்னிக்கு வர்றீங்க, அதைச் சொல்லுங்க.

நாக: என்னிக்கு வரலாம்? அதைச் சொல்லு.

மால: நாளைக்கு என்ன.... திங்கட்கிழமை இல்லே..... நாளைக்குக் காத்தாலே ஏழரையிலேயிருந்து ஒம்பது மணிக்குள்ளே வாங்க.

நாக: திங்கக்கிழமை காத்தாலே ஏழரை லேந்து ஒன்பது மணிக்குள்ளே வரணுமா? நான் என்ன ராகுகாலமா?

மால: அய்யோ! அதுக்குச் சொல்லலே... ஒன்பது மணிக்கு அவர் வெளியிலே கிளம்பிடு வார். அதுவும் இல்லாம நீங்க காலையிலே ஆறு மணிக்கெல்லாம் கிளம்பி வந்தா, உங்களை ரொம்பச் சுறுசுறுப்பானவர்னு நினைச்சுப்பார்.

ஆகஸ்ட்

27 முதல்

சென்னை..

சித்ரா

மகாராணி

உமா

ராம்

மற்றும் தென்னகமெங்கும்



பிரசாத் புரொடக்ஷன்ஸ்

இதயக் கமலம்

...ஈஸ்ட்மென் கலர்...

டைரக்ஷன் : ஸ்ரீகாந்த்

டைரக்ஷன் மேற்பார்வை } பிரசாத்

திரைக்கதை, வசனம் : ஆரூர் தாஸ்

பாடல்கள் : கண்ணதாசன்


இசை : K.V. மஹாதேவன்

ஒளிப்பதிவு : K.S. பிரசாத்

STUDIO PRASAD

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக்
குறிகள் அதை
அறிவிக்கின்றன.



பொடுகு

இது சாதாரணமான
உபாதை. இதை
ஒருபோதும்
அலட்சியம்
செய்யக்கூடாது.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிரு
கிறது, ஏனெனில்,
ரோமக்கால்களுக்குப்
போதிய ஊட்டம்
இல்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இக்கிலேயை நீங்கள்
அநேகமாகத்
தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்ருக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினுல் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

ப்யூர் சில்விக்ரீன்



கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீர்படி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



Silvikrin

சில்விக்ரீன் – கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/6/65

அதிகாலையிலே எழுந்து காரியங்களைக் கவனிக்கிறவங்களைக் கண்டா எங்க சித்தப்பாவுக்கு ரொம்பப் பிடிக்கும். வந்து.....

நாக: என்ன வெட்கப்படறே? நீ ஒரு காலேஜிலே படிக்கிற பொண்ணு? காலேஜிலே படிக்கிற பொண்ணு வெட்கப்படலாமா?

மால: கொஞ்சம் பேசாம இருங்களேன். வந்து...... அந்த மாதிரி விடியற்காலையிலே எழுந்து சுறுசுறுப்பா இருக்கிறவர்னு நீங்க காண்பிச்சுக்கிட்டா, எங்க சித்தப்பாவுக்கு உங்களை ரொம்பப் பிடிச்சுப் போயிடும்..... நமக்கும் ரொம்ப நல்லது...

நாக: ஏன்?

மால: அப்புறம் நீங்க எங்க வீட்டு மாப்பிள்ளையா வர்றது ரொம்ப சுலபம்.

நாக: ஆஹா! மாலதி..... என்னே உனது எண்ணம். தாங்க்யூ..... (யோசித்து).... ஆமாம், இதென்ன வம்பா இருக்கு. விடியற்காலையிலே வீட்டுக்கு வரவனைத்தான் உங்க சித்தப்பாவுக்குப் பிடிக்குமா? அப்போ உனக்குப் புருஷனா வரப் போறவன், குடுகுடுப்பைக்காரனுத்தான் இருப்பான். இல்லேன்னு பால்காரன்!

மால: திரும்பி ஆரம்பிச்சுட்டீங்களா? நாகராஜன் நான் வீட்டுக்குப் போறேன்.... வந்து என் மேலே உங்களுக்கு ஒண்ணும் கோவம் இல்லையே....

நாக: எதுக்கு?

மாலதி: உங்க கவிதையை முதல்லேயே சரியாப் புரிஞ்சுக்காமப் போனேனே அதுக்கு?

நாக: இதுலே என்ன கோபம்? என் கவிதையை அப்புறமாவது புரிஞ்சுக்கிட்டியே அதுதான் ஆச்சரியம். தமிழ்க் கவிஞன் தலைவிதி இது. அவன் எழுதறதையெல்லாம் தப்பாத்தான் புரிஞ்சுக்கிறாங்க. ஏன் அரசாங்கமே அப்படித்தானே செய்யறது?

மாலதி: ஏன் அப்படிச் சொல்றீங்க?

நாக: நீயே பாரேன். ''விடுதலை, விடுதலை, விடுதலை''ன்னு கம்பர் பாடிருக்காரு...

மாலதி: கம்பரா.... பாரதியார் பாட்டைப் போய்...

நாக. (சமாளித்து): அய்யோ கடவுளே! நான் கம்பரையும் பாரதியையும் ஒரே 'லெவல்'லே வெக்கிறேன். அதனுலேதான் அப்படி மாத்திச் சொன்னேன். பாரதியார் 'விடுதலை, விடுதலை, விடுதலை'ன்னு சொன்னரே, எதை நினைச்சு அப்படிச் சொன்னர்?

மாலதி: நாடு சுதந்திரம் அடையற மாதிரி நினைச்சுப் பாடினர்.


நாக: கரெக்ட். ஆனு அதை அரசாங்கத்துலே எப்படிப் புரிஞ்சுக்கிட்டாங்க? விடுதலை, விடுதலை, விடுதலை...அதாவது 'தலையை விடு, தலையை விடு, தலையை விடு'ன்னு அர்த்தம் புரிஞ்சுக்கிட்டு, பயிர் பண்றதுலேந்து பிணைஸ் பண்றது வரைக்கும் எல்லாத்திலேயும் தங்கள் தலையை நுழைக்கிறாங்க—தலையிடறாங்க!

மாலதி: நல்லாப் போறது உங்க மூளை! சரி, நாளைக்குப் பார்க்கிறேன்.

நாக: டா! டா!

மாலதி: சீரியோ!

(தொடரும்)



மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து
நிவாரணம் அடையுங்கள்

—ரணசிகிச்சையையும்
தடுங்கள்

பொறுக்க முடியாத வலியா! தாங்க முடியாத அரிப்பா! எரிச்சலெடுக்கும் உணர்ச்சியா! ரத்தக் கசிவா! உடனடியாக சிகிச்சை செய்யத் தாமதியாதீர்கள்! அலட்சியம் செய்தால், நோய் முற்றி ரணசிகிச்சை செய்ய வேண்டிவரும். 108 தேசங்களிலுள்ள டாக்டர்களால் சிபாரிசு செய்யப்பட்ட, நம்பிக்கையான ஜெர்மன் மூலநோய் களிம்பு ஹெடன்ஸா உபயோகித்து இப்பொழுதே நிவாரணம் பெறுங்கள்! ஹெடன்ஸா வலியையும் அரிப்பையும் சீக்கிரம் நிறுத்தி, மலப் பிரவிருத்தியைச் சுலபமாக கஷ்டமில்லாமல் செய்கிறது. முக்கியமாக, ஹெடன்ஸாவிலுள்ள சக்திவாய்ந்த மருந்துப் பொருள்கள் நீடித்த நிவாரணமளிப்பதோடு, வெடிப்புகளைச் சுருங்கச் செய்து, ஆரோக்கியமான தசைகளை வளர்க்கிறது. மூலநோய்க்குக் காலாகாலத்தில் ஹெடன்ஸா உபயோகித்தால் பிற்காலத்தில் ரணசிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்படாது என்பது ஞாபகமிருக்கட்டும்.

ஹெடன்ஸாவில் உணர்வழிக்கும் மருந்துகள் ஒன்றும் கிடையாது.

ஒரிஜினல் ஜெர்மன் முறைப்படி
இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

தி டாலர் கம்பெனி

337, தம்பு செட்டி தெரு
சென்னை-1

பிரபல மருந்து வியாபாரிகளிடம்
கிடைக்கும்.

DJ-DOL-3 A TH

தென்னிந்தியர்களின் சுவைக்கேற்றபடி பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது






ஜி.பி
பெருங்காயம்

உயர்தர மிஸ்கி கலவை
கோபால்ஜீ அண்டு கம்பெனி, 218, சாமுயல் ஸ்ட்ரீட், பம்பாய் 3


ஏஜெண்ட்: தென் இந்தியா
கோபால்ஜீ அண்டு கம்பெனி, 203, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, தபால் பெட்டி எண் 1255, மதராஸ்-1

ஏஜெண்டுகள் தேவை—
எல்லா முக்கிய பலசரக்கு கடைகளிலும் கிடைக்கும்.





செய்திப் படங்கள்





★ சென்னை விளையாட்டுக் கலை ஆசிரியர்கள் சங்கத்தில் (Sports Writer's Club) இந்திய விளையாட்டுக் கழகத்துக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜெனரல் கரியப்பா உரையாற்றினார்.

★ லண்டனில் நடைபெறும் காமன்வெல்த் கலை விழாவில் கலந்துகொள்ள ருக்மிணி தேவியின் தலைமையில் கலாக்ஷேத்திரக் கலைஞர்கள் செப்டம்பர் 16ந் தேதி புறப்படுகிறார்கள். பிரசித்திபெற்ற கதகளிக் கலைஞர் கலாமண்டலம் கிருஷ்ணன் நாயர் அக் குழுவில் பிரதம விருந்தினராகச் செல்கிறார்.

★ சமீபத்தில் மறைந்த சங்கீத வித்வான்களான ஜி. என். பாலசுப்பிரமணியம், ஆலத்தூர் சிவசுப்பிரமணிய அய்யர் ஆகியோரது திருவுருவப் படங்களை ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர் திறந்து வைத்தார்.

★ சேலம் சிருங்கேரி மடத்தில் சென்னை கவர்னருக்கு வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது.



மாலதியைத் தன் அறைக்கு அழைத்துச் சென்ற பெரிய சாமி அவள் செய்கையைக் கண்டு வியப்படைகிறான்.
இந்த நள்ளிரவில் எங்கே போயிருந்தாய்? எப்படி இங்கு வந்தாய்?
அனுபவசாலியான நீங்கள் இப்படிக் கேட்கலாமா பெரிய சாமி? என்னைப் போன்றவர்களின் சௌகரியத்துக்காகத் தானே இரவில் டாக்ஸிகள் இருக்கின்றன... ஹஹ்ஹ... ஹா...!
அவள் எங்கே?
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி
21
அது சரி மாலதி... நீ... இப்படி... உயிரோடிருப்பது ராஜாவுக்குத் தெரியுமா?
ராஜாவா...? அது யார்...? ஹ...ஹ...ஓ... நான் செத்துப் போய்விட்டதாகக் கண்ணீர் வடிக்கிறாரோ? பாவம்... அந்தக் கிழவர்! ஹ...ஹ.
இவளுக்குப் புத்தி பேதலித்து விட்டதா? சிரிப்பும் பேச்சும் விபரீதமாக இருக்கின்றனவே.
மிஸ்டர் பெரியசாமி! எனக்கு ரொம்பக் களைப்பாக இருக்கிறது. நான் தூங்கப் போகிறேன். நீங்கள் இந்த அறையிலிருந்து வெளியே போகிறீர்களா?
தேவியின் உத்தரவுப்படி! நான் அடுத்த அறையிலுள்ள சோபாவில் படுத்துக் கொள்கிறேன். நீ அறையைத் தாளிட்டுக் கொள்.
ஹலோ... ஹலோ! யார் பேசறது?... ஆ...
நடு இரவில் யாருடன் பேசுகிறாள்? தர்மராஜனைத் தேடுகிறாளோ! அடிப்பாவி...
போனில் பேசிய பிறகு ஏதோ சினிமாப் பாட்டை ராகமிசைத்துக் கொண்டிருந்தாள் மாலதி. கொஞ்ச நேரத்தில் நான் தூங்கி விட்டேன். மறுபடி எழுந்த போது விடியும் காலை நேரமாகியிருந்தது. பரபரப்புடன் மாலதியின் அறைக்குள் போய்ப் பார்த்தேன். அங்கே அவளைக் காணவில்லை... தர்மராஜன் வந்து அவளை அழைத்துப் போயிருக்க வேண்டும்.


ம்...விபரீதம் தான் நிகழ்ந்து விட்டது பெரியசாமி. மாலதியின் தலையை ஆற்றிலிருந்து தேடி எடுத்திருக்கிறார்கள் போலீசார்... அவளது நிலைக்கு நீ தான் காரணம்... சீக்கிரம் அவனை விடுவித்து விடு.
அதற்கு மறு நாள் தர்மராஜன் என்னைத் தேடி வந்தார். மாலதி உயிரோடு இருக்கிறாள் என்பு-தற்குச் சாட்சியான என்னை உஷார்ப்படுத்த. அந்த உண்மையை என் உள்ளத்திலேயே புதைத்துக் கொண்டு விட வேண்டுமென்றும், அதைப்பற்றி மூச்சு விட்டாலும் முப்பது வருஷங்களுக்குத் தெரியாமல் என்னை ஜெயிலுக்குள் தள்ளி விடத் தன்னால் முடியுமென்றும் கூறி ரகசியத்தைக் காப்பதாக என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு போனார்.
நீ அந்தப் பயமுறுத்தலுக்குப் பணிந்து ஒரு பெண்ணின் உயிரைப் பலி கொடுத்து விட்டாய், இல்லையா?
உண்மைதான் சந்துரு. என் செயலுக்காக நான் வேதனைப் படுகிறேன், வெட்கமும் அடைகிறேன்.
காலங் கடந்த பின் கண்ணீர் விட்டுப் பயன் என்ன?
பெரியசாமி, உன் வாழ்வில் நீ செய்துள்ள எத்தனையோ பாவங்களுக்குப் பிராயச்சித்தமாக, நான் கூட்டி வரும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் இப்போது என்னிடம் கூறியவற்றை அப்படியே கூறுவாயா?
கட்டாயம் கூறுகிறேன் சார்! ஆனால் என் உயிருக்குக் காப்பாற்றுவதாக நீங்கள் உறுதி யளிக்க வேண்டும்.
நாங்கள் போய் வருகிறோம். நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும், பெரியசாமி.
போய் வாருங்கள்... ம்... பாவம் மாலதி நல்ல பெண். அவளுக்கு இந்தக் கதி நேர்ந்திருக்க வேண்டாம்!
இன்றிரவு வீண் போகவில்லை. பெரியசாமியிடமிருந்து இத்தனை தகவல்கள் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை.
சந்துருவிடம் இப்போதுதான் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது, இல்லையா

தொடரும்...



இப்பொழுது நடைபெறுகிறது...
சென்னை
பிளாசா
பிரபாத்
சரஸ்வதி
நூர்ஜஹான்
மற்றும்
தென்னாடெங்கும்
ராஜலக்ஷ்மி
புரொடக்ஷன்ஸ்
வீர
அபிமன்யு
தயாரிப்பு: சுந்தர்லால் நஹாதா - டூண்டிசுவர ராவ்
டைரக்ஷன்: V. மதுசூதன்
இசை: K.V. மஹாதேவன் - பாடல்கள்: கண்ணதாசன்
வசனம்: S. I. பெருமாள் - கலை: S. கிருஷ்ணராவ்
ஒளிப்பதிவு: ரவிகாந்த் - நடனம்: பசுமர்த்தி கிருஷ்ணமூர்த்தி
பாடல்கள் ஒலிப்பதிவு: T.S. ரங்கசாமி
MOULIS



என்னதான் முடிவு?

படத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரையில் முடிவு என்னவா யிருக்கும் என்று ஊகிக்கும் வண்ணம் விறுவிறுப்பும், சுவாரசியமும் நிறைந்திருக்கிறது. குற்றம் செய்தவன் தான் செய்த குற்றத்தை உணர்ந்து மனப்பூர்வமாக மன்னிப்புக் கோருகிறான். குற்றம் சுமத்தப் பட்ட நிரபராதி சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்டு விடுதலை அடைந்து பழிவாங்கும் உணர்ச்சியோடு துடிக்கிறான். பொங்கி யெழும் அந்தப் பழி வாங்கும் உணர்ச்சி எப்படித் தணிந்துவிடுகிறது என்பதை இந்தப் படம் அருமையாய் எடுத்துக்காட்டுகிறது. நடிப்புத் திறமையும், உருக்கமான பாத்திரப் படைப்பும் இந்தப் படத்தின் உயிர்நாடிகளாய் விளங்குகின்றன. தமிழ்ப் படங்களின் தரம் குறைவதற்குத் தோன்றாத் துணையாயிருந்து வரும் காதல் காட்சிகளின் வாடையே இல்லாமல் இருப்பது ஒரு விசேஷம். வழக்கமான முதல் இரவுக் காட்சிகள்கூட இல்லையென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! பாடல்கள் மூன்றே மூன்றுதான்! குறைந்த வசனம்; நிறைந்த நடிப்பு!

நடிப்புக்கு முதலிடம் பெறுபவர் பாலையாதான். குற்றம் உள்ள நெஞ்சம் குறுகுறுக்கும் என்பார்கள். அவர் நெஞ்சு மட்டும் குறுகுறுக்க வில்லை; உடல் முழுவதுமே செய்த குற்றத்துக்கு இரங்கி வருந்துகிறது. பழம் பெரும் நடிகரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்தப் படத்தில்தான் ஏ. வி. எம். ராஜன் தம் பாத்திரத்துக்கு ஏற்ப நடித்திருக்கிறார். பழி வாங் கும் உணர்ச்சியில் துடிக்கும் துடிப் பில் நடிப்பின் சிகரத்தைத் தொட்டு விடுகிறார்.

அஞ்சலி தேவியின் நடிப்பில் காணும் இயல்பான போக்கு நன்றாயிருக்கிறது. வி. எஸ். ராகவனுக்கு இந்தப் படத்தில் தான் சரியான 'சான்ஸ்' கிடைத் திருக்கிறது. கிடைத்த சான்ஸைக் கைவிடாமல் பயன்படுத்தி விட் டார். குடிகாரப் பிரபுவாக வரும் வி. கே. ராமசாமிக்கு இணை அவரேதான்! அபாரமான நடிப்பு! வசந்தியின் நடிப்பு இயற்கையா யிருக்கிறது.

'கலைதனில் விழுந்த கலை யெடுப்பாய்' என்ற கொத்தமங் கலம் சுப்புவின் நடன அபிநயப் பாட்டு நவீன பாணிக் கதம்ப நடனங்களுக்கு நல்ல சாட்டையடி கொடுக்கிறது. அந்தக் காட்சி நன் றாகப் படமாக்கப்பட் டிருக்கிறது.

சினிமாக் கதைக்காக வட நாட் டுக்குக் காவடி எடுக்காமல் தமிழ் நாட்டுச் சரக்கைப் படமாக்கி யிருப்பது பாராட்டுக்குரியது.

மூலக்கதை தமிழ் எழுத்தாளர் 'மகரிஷி'யினுடையது. கதை, வசனம், டைரக்ஷன் யாவும் கே. எஸ். கோபாலகிருஷ்ண னுடையது. மூன்றே மாதங்களில் இச்சிறந்த படத்தைத் தயாரித் திருப்பது அவருடைய திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

என்னதான் முடிவு: தமிழ்ப் படங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதுதான்!

நீலவேணி *(நாடகம்)*

'சமூக நாடகங்களைத் தம் வாழ்வோடு ஒட்டிய சம்பவங்களாக ரசிகர்கள் கருதுவதால் சிறு குற்றங் குறைகள் இருந்தாலும் அவற்றை மறந்து விடு வார்கள். ஆனால் சரித்திர நாடகத்துக்கு வரும் போது ரசிகர்கள் பழங்காலத்தைப் பற்றிய அளவற்ற கற்பனைகளுடன் வருவார்கள். அவர்கள் மனத்தைத் திருப்தி செய்வதென்பது இலேசான காரியமல்ல.' இப்படித் தலைசிறந்த தொழில்துறை நடிகர் திரு எம். ஜி. ஆர். 'நீலவேணி' சரித்திர நாடகத்தில் கலந்துகொண்ட பயில்முறை நடிகர்களின் சிறப்பைப் பாராட்டும்போது கூறினார்.

பர்மாஷெல் கிளப்பின் பயில்முறை நடிகர்கள் வித்வான் வே. லக்ஷ்மணன் எழுதிய இரண்டாம் நந்திவர்மன் காலத்திய சரித்திர நவீனமான 'நீல வேணி'யை முதல் முறையாக அண்ணாமலை மன்றத் தில் அரங்கேற்றினர். நாடகத்தைப் பார்த்தபொழுது இது முதல் அரங்கேற்றம் என்று தெரியவில்லை. பலமுறை பண்பட்டு நடித்த நாடகத்தைப் பார்த்த திருப்தி நிலவியது. உதயசந்திரனாக வந்த திரு டி. என். வேங்கடராமன் தம் தலைசிறந்த நடிப் பினால் அன்று பலரது உள்ளங்களைக் கவர்ந்தார். தொழில்துறை நடிகர்களுக்குப் பயில்துறை நடிகர்கள் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்தார்.

பாண்டிய மன்னன் கயற்கண்ணி என்னும் பாவை யின் மயக்கத்தில் தன் மனைவி கோப்பெருந்தேவி யையும், செல்வத் திருமகள் நீலவேணியையும் புறக்கணிக்கிறான். நீலவேணி கொடிய வில்லன் களான காலவர்மன், சித்திரமாயன் இவர்களின் பிடியிலிருந்து தப்பி உதயசந்திரனிடம் தன் மனத் தைப் பறி கொடுக்கிறாள். உதயசந்திரன் - நீலவேணி காதல் காட்சிகள் சினிமாக் காட்சிகளைப் பார்ப்பது போல் அமைந்திருந்தன. பாசம், நீதி, அறம் இவற்றிடையே நிகழ்ந்த கடும் போட்டியில் அறம் வெல்கிறது. நீலவேணியைத் தீயவர்களிடமிருந்து மீட்கிறான் உதயசந்திரன்.

காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பும், என்ன நடக் குமோ என்ற ஆவலைத் தூண்டும் முறையிலும் நாடகம் அமைந்தது. பர்மாஷெல் பயில்முறைக் குழுவினருக்குப் பாராட்டைத் தேடித் தந்தது.



43. முருகன் மகிமை



இரு சிவப் படைக் கலங்களும் தமது வலிமையைச் சுருக்கிக் கொண்டு தம்மால் அழிந்த மலை, கடல், அண்டங்கள் முதலியவற்றை முன்போல் நிலை நிறுத்தித் தம்மைச் செலுத்தியவர்களிடமே மீண்டும் சென்றன. அழிக்கவும் ஆக்கவும் ஆற்றல் பெற்ற ஆயுதம் அல்லவா அது...?

வீரவாகு தேவருடன் செய்த யுத்தத்தில், உடன் வந்த சேனைகளெல்லாம் இறந்து தனித்து நின்றான் பானுகோபன். 'தனியொருவனாக வீரவாகு தேவருடன் போர் செய்தால் தான் இறப்பது உறுதி. ஆகவே, இனி யுத்தகளத்தில் நிற்பதும் சரியன்று' என்று அஞ்சி வானில் மறைந்து நின்றான். அவன் மறைந்தோடியதைக் கண்ட பூத சேனைகள், 'பானுகோபன் தோற்று விட்டான்' என்று ஆரவாரம் செய்தன. அப்போது பொழுது சாய்ந்துவிட்டது. பூதப் படைகள் யாவும் பாசறைக்குத் திரும்பின.

வானில் மறைந்து நின்ற பானுகோபன், 'இன்றும் நான் தோல்வியுடன் திரும்பினால் நம் புகழ் அடியோடு அழியும். ஆகவே, பகைவரை எப்படியேனும் வெல்ல வேண்டும். வீரவாகுவுக்கு எதிரே நின்று போர் செய்து வெற்றி கொள்ள முடியாது. எனவே, தந்திரத்தினால்தான் வெல்ல வேண்டும்' என்று எண்ணினான். தனது பாட்டி மாயாதேவி கொடுத்த மாயப் படைக் கலத்தை எடுத்து வழிபட்டு, ''நீ ஒருவரும் அறியாவண்ணம் சென்று பகைவர்கள் உயிரையும், உணர்வையும் கெடுத்து நன்னீர்க் கடலில் எறிவாய்'' என்று சொல்லி விடுத்தான்.

உண்மையான மகாவீரர்கள் எடுத்த எடுப்பிலேயே சக்தி மிகுந்த அஸ்திரங்களை உபயோகிக்க மாட்டார்கள். ஆயுதத்தின் ஆற்றலைவிடத் தங்களது ஆற்றலைக் காட்டியே வெல்ல முயலுவார்கள். முடியாமற் போனால்தான் ஆற்றல் மிகுந்த அஸ்திரங்களை எய்வார்கள். நோய் முற்றினால்தானே வைத்தியர் சக்தி மிகுந்த மருந்துகளைத் தருவார்? யுத்தம் தீவிரமடைந்தால் தான் மகாவீரர்கள் ஆயுதங்களைப் பிரயோகிப்பார்கள்.

வானிலிருந்து பானுகோபன் மாயப் படையைச் செலுத்தினான். அது யாரும் அறியாவண்ணம் பூமியை வந்தடைந்தது. பூத சேனைகளின் அறிவை மயக்கியது. ஆயினும் எம்பிரானின் அருள் பெற்ற அவர்களின் உயிரைக் கவர அதனால் முடியவில்லை. மாயப்படை ஊழிக் காற்றின் வடிவெடுத்து ஆலகால விஷம்போல் பரந்தது. வீரவாகு தேவர் முதலிய அனைவரையும் விண் வழியே எடுத்துச் சென்று ஆறுகளையும் கடல்களையும் கடந்து நன்னீர்க் கடலில் அவர்களை அழுத்தியது. அவர்கள் அங்கிருந்து வெளியே கிளம்பாதபடி தடுத்தது.

அதனைக் கண்ட பானுகோபன் மகிழ்ச்சிப் பெருக்கினால் ஜயசங்கம் ஊதினான். விண் வழியாக விரைந்து வீரமகேந்திரம் சென்றான். சூரபன்மனைப் பணிந்து, ''இன்று நான் பலவாறாகப் போராடி வீரவாகுவையும், இலக்கத்தெண்மரையும் ஆயிரம் வெள்ளம் பூத சேனைகளையும் கொன்று வென்றேன். அவர்களது உடல்களைச் சுத்தோதக் கடலில் இட்டேன். அப்பா! இனி நீங்கள் வருத்தப்பட வேண்டாம். நான் படைகளோடு நானே சென்று ஆறுமுகனை வென்று, மால், அயன், இந்திரன் முதலியோரைப் பிடித்துக் கொண்டு வருகிறேன்'' என்றான்.

பானுகோபன் கூறியதைக் கேட்ட சூரபன்மன் உளம் உவந்து மகனைத் தழுவிக் கொண்டான். ''மகனே! ஒரு



மகன் தந்தைக்குச் செய்ய வேண்டி யதை நீ செய்துவிட்டாய். உன்னால் நம் குலம் உயர்ந்தது. இனி நமக்கு ஒரு குறையுமில்லை. நீ கூறியபடியே நாளைக் காலை சென்று முருகனை வென்று பிர மாதி தேவரைப் பிடித்துக் கொண்டு வா'' என்று கூறிப் புதிய அணிகலன் களை அணிவித்து வாழ்த்தி அனுப்பி னன். பானுகோபன் தன் அரண் மனைக்கு வந்து அளவிலா மகிழ்ச்சி யோடிருந்தான். வீரமகேந்திரபுரி முழு வதும் அன்றிரவு ஒரே களியாட்டம்; வெற்றிக் கொண்டாட்டம்.

பானுகோபனின் மாயப் படையால் வீரவாகு தேவர் முதலியோர் நன்னீர்க் கடலில் அழுந்திவிட்டதைக் கண்டு தேவர்கள் பதைத்தோடினர். நாரத மகரிஷி முருகப் பெருமானிடம் தேவர் களுக்கு முன்னே விரைந்தோடி விஷ யத்தைத் தெரிவித்தார்.

கந்தவேள் தமது வேற் படையை நோக்கினர். ''நீ நன்னீர்க் கடலுக்குப் போய் அங்கிருக்கிற மாயப் படை களை அழித்து, வீரவாகு முதலியோர் மயக்கத்தை நீக்கி அவர்களை இங்கே அழைத்து வா'' என்று பணித்து வேலை விடுவித்தருளினர் விமலர்.

கங்கை அன்னதோர் வாலிதா
  கியபுனற் கடற்போய்
அங்கண் வைகிய மாயமாப்
  படையினை அழித்து
வெங்கண் வீரர்மால் அகற்றியே
  அனையவர் விரைவில்
இங்கு வந்திடத் தந்துநீ
  செல்கென இசைத்தான்

'' வேற்படை ஆயிரம் கோடி சூரிய ஒளி போல் புறப்பட்டது. அந்தப் படையுடன் வருணன், வாயு, இந்திரன், அயன், அரி இவர்களின் படைகள் சேவித் துக் கொண்டு உடன் சென்றன. வேற்படை ஆறுகளையும் ஏழு கடல்களையும் கடந்து நன்னீர்க் கடலை யடைந்தது. வேலை வணங்கி, ''மாயப் படையை வெல்லும் திறனின்றி நான் செயலற்றிருக்கிறேனே யன்றிப் பூதப் படைகளுக்குப் பிழை யேதும் செய்யவில்லை'' என்று கூறித் தொழுதான். வேற்படை கடலரசனுக்கு அருள் செய் தது. கடலில் ஆழ்ந்து கிடந்த அனைவருக்கும் வெகு எளிதில் உணர்ச்சி தந்தது. அவ்வளவில் மாயப் படை தானகவே அழிந் தது. ஒளி வந்தால் இருள் தானகவே ஓட வேண்டியதுதானே? தீபத்தை எடுத்து வருபவர் இருளை நோக்கிப் 'போ' எனப் பிடித்துத் தள்ள வேண்டியதில்லையே!

நன்னீர்க் கடலில் ஆழ்ந்திருந்த வீர வாகு முதலியோர் எழுந்து கடலுக்கு மேல் வந்தனர். கரையற்ற கருணைக் கடலைப் பெருக்கிய கந்தவேளைத் தியா னித்து நின்றனர். வேற் படையை வணங்கித் துதித்தனர். வணங்கிய படியே வேற் படைக்குப் பின்னல் சென்றனர். வேல், முருகப் பெரு மானின் திருக்கரத்தில் வந்தமர்ந்தது.

வேற் படைக்குப் பின்னே சென்ற வீரவாகு தேவர், ''பானுகோபனைக் கொன்றலன்றிக் கந்தவேளைச் சேவிக்கச் செல்ல மாட்டேன். பானுகோபனைக் கொல்லவில்லையென்றல் வில்லுடன் நெருப்பில் புகுவேன்'' என்று சபதம் செய்தார்.

ஃ ஃ ஃ

அப்போது நள்ளிரவு. வீரவாகு தேவரும் துணைவர்களும் வீரமகேந்திர புரியின் மேற்கு வாயிலையடைந்தனர். நகரம் ஒரே வெற்றிக் களியாட்டமா யிருந்தது. பூத சேனைகள் கடல் உடைந்தாற்போல் ஆரவாரம் செய்


LIFEBUOY
for health
லைப்பாய்
இருக்குமிடம்: அதுவே...
ஆரோக்கியம் இருக்குமிடம்
லைப்பாய் ஸ்நானம் - உற்சாகப் பெருக்கு. உல்லாச ஊற்று..
ஒவ்வொரு குளியலும் உணர்த்தும்: நல்ல சோப்புக்குரிய தன்மைகள்
யாவும் பெறலாம், அதற்கு மேலும் பெறலாம் ஆரோக்கியமுடன்.
அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய்
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு



''நீங்கள் நாடகத்திலே வில்லனாக நடிக்கலாம். அதற்காக என்னிடம் கொஞ்சும்போதுகூட வில்லன் பார்வை, வில்லன் சிரிப்பு வேணுமா அத்தான்?''

தனர்: அந்த ஆரவார ஒலியைக் கேட்ட அவுணர்கள் வானை நோக்கினார்கள். அவர்களது உடல் வியர்த்தது. வெஞ்சினம் கொண்டார்கள். வாரிதியின் அடியில் அழுத்தப்பட்டவர் எப்படி மீண்டும் வாழ்வும் வலிவும் பெற்றனர் என வியந்து நடுங்கினர்.

வீரமகேந்திரபுரியின் மேற்கு வாயிலைப் புலிமுகன் என்பவன் காவல் காத்துக் கொண்டிருந்தான். மாயவளிடத்தில் தோன்றிய அவன் அறக் கடவுளையும் பிடித்துச் சிறை செய்தவன். தீச்சுடர் போன்ற உடலைக் கொண்டிருந்த அவன் நஞ்சினும் கொடியவன். அவன் நால்வகைப் படைகளுடனும் பூத சேனைகளை எதிர்த்தான். பூத சேனைகளும் அவுணரும் கடும் போர் புரிந்தனர். புலிமுகனும் சிங்கன் என்னும் பூத சேனைத் தலைவனும் சூலப் படையுடன் போர் செய்தார்கள். இருவரும் சூலத்தினால் ஒருவரையொருவர் குத்தினர். சூலங்கள் இருவருடைய மார்புகளையும் பிளந்து கொண்டு முதுகில் புறப்பட்டன. இருவரது உடல்களினின்றும் உதிரம் பெருகியது. மீண்டும் மீண்டும் உடலில் பல இடங்களில் சூலத்தினால் குத்தி அவர்கள் போர் செய்தனர். இருவரிடத்துமிருந்த சூலங்கள் ஒடிந்து வீழ்ந்தன. சூலங்களை இழந்த இருவரும் மற்போர் செய்தனர். முடிவில் சிங்கன் புலிமுகனைக் கொன்றான்.

பின்னர் பூதசேனைகள் நகரத்திற்குள் புகுந்து மதில்களையும் மாளிகைகளையும் உதைத்துத் தள்ளி அழித்தார்கள். அவுணர்களைக் கூட்டம் கூட்டமாக அழித்தார்கள். வீரவாகு தேவர் அக்கினிப் படையையும் வாயுப் படையையும் ஏவி, ''இந் நகரத்தை எரியுங்கள்'' என்று பணித்தார். இரண்டு படைகளும் நகரை எரிக்கத் தொடங்கின. நகரின் சில இடங்கள் எரிந்தன; சில இடங்கள் கரிந்தன; சில இடங்கள் பொடிந்தன; சில இடங்கள் வெடித்தன. சில இடங்கள் புகைந்தன. சிவபெருமானின் திருமுறுவலால் முப்புரம் எரிந்தது போல் அந்நகர் எரிந்தது.

நகரம் எரிவதைக் கண்ட தூதர் சிலர் சூரபன்மனிடம் ஓடினார்கள். நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் அவனுக்குத் தெரிவித்தனர்.

சூரபன்மன் மிகுந்த சினம் கொண்டான். ஒற்றர்களை அழைத்தான். ''நீங்கள் எல்லோரும் ஆகாயத்துக்குட் புகுந்து சென்று, உலகனைத்தையும் ஊழிக்காலத்தில் அழிக்கச் செல்வதற்காக உறங்கிக் கொண்டிருக்கும் மேகங்களை இங்கே அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டான். அதன்படி ஒற்றர்கள் ஆகாயத்துக்குச் சென்று மேகங்களைச் சூரபன்மனிடம் அழைத்து வந்தார்கள். ''மேகங்காள்! இந் நகரத்தை எரிக்கின்ற தீயை அணையுங்கள்'' என்று பணித்தான் சூரபன்மன். அவனது ஆணைப்படி ஊழிமேகங்கள் மழை பொழிந்தன. அதனால் தீ தணிந்தது.

மழை பொழிந்து தீ அணைந்ததைக் கண்ட வீரவாகு தேவர், தீயை மேகங்கள்தான் அழித்தனவோ, அல்லது இதுவும் அவுணர்களின் மாயமோ என்று பலவாறாக யோசித்துக்கொண்டிருந்தார்.

நாரத முனிவர் அங்கு தோன்றினார்: சூரபன்மனின் கட்டளைக் கிணங்க ஊழிக் காலத்து மேகங்கள் இந்தத் தீயைத் தணித்தன. ''வீரரே! இதற்கு மாற்றாக வடவாமுகாக்கினிப் படையைச் செலுத்துங்கள்'' என்று கூறிவிட்டு மறைந்தார்.

வீரவாகு தேவர் வடவாமுகாக்கினிப் படையைச் செலுத்தினார். அப்படை விரைந்து சென்று மேகக் கூட்டங்களில் உள்ள நீரைக் கடிதில் உண்டு வீரவாகு தேவரிடம் திரும்பி வந்தது. எதிரிக்கு உதவி செய்த போதிலும், வலியிழந்து நின்ற முகிற் கூட்டங்களிடமும் கந்தவேள் கருணை பாலித்தார். வலிமை பெற்ற அம்மேகங்கள் நகரினின்று வெளியேறிப் பெரும் புறக் கடலை நோக்கி ஓடின. பூத சேனைகள் பெரும் ஆரவாரம் செய்தன. தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

நடந்தவற்றை அறிந்து ஆறாத சீற்றம் கொண்ட சூரபன்மன் ''நானே

சென்று பூத சேனைகளையும் வீரவாகு தேவரையும் மற்றையோரையும் கொன்று அந்த முருகனையும் வென்று வருகிறேன். எனது தேரைக் கொண்டு வருக'' என்று ஆணையிட்டான்.

சூரனின் மகனாகிய இரணியன் எழுந்தான். அவனுக்கு மூன்று தலைகள். அவன் மாயங்களையும் வஞ்சனைகளையும் கற்றிருந்தாலும், சிறந்த நீதிமான்; நல்லவன். ——

ஆம், சூரபன்மனுக்கும் ஒரு நல்ல மகன் பிறந்திருக்கிறான்! மரங்களெல்லாம் ஒன்று போலவே காய்க்கும். ஆனால் மனிதர்களுக்குக் குழந்தைகள் எல்லாம் ஒன்றுபோல் பிறப்பதில்லை.

ராவணனுக்கும் சூர்ப்பனகைக்கும் உடன் பிறந்த விபீஷணன் பரம பாகவதனாக இல்லையா? கும்பகருணனும் இராவணனைத் திருத்த எவ்வளவோ முயலவில்லையா?

சந்ததி வளர்ச்சியை விரும்பிய நாயக நாயகிகள் சயன அறையில் மனம் ஒருமித்தவர்களாயும், மகிழ்ச்சியுடையவர்களாயும், கலக்கமில்லாதவர்களாயும் இருந்தால்தான் நல்ல பிரஜை உற்பத்தியாகு மென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. தம்பதி சேரும்போது அவர்கள் எந்தக் குணத்துடன் இருக்கிறார்களோ அதே குணத்துடன்தான் குழந்தைகள் பிறக்கும். ஆதலால் சற்புத்திரர்கள் பிறக்க வேண்டும் என்ற நோக்கமுடைய தம்பதிகள் கடவுள் பக்தி நிறைந்த உள்ளத்துடனும் தூய்மையுடனும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

இரணியன் தந்தையிடம் பேசலானான். ''நாம் தேவர்களைச் சிறை செய்தது பாவம். ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆளும் ஆட்சியும் வரமும் சிவபெருமானிடம்தான் பெற்றிருக்கிறீர்கள். அப்பரமேசுவரன் நம்மிடம் உள்ள தீமை காரணமாக அவ்வரங்களை மாற்ற நினைப்பாராயின், அதன் பின் நம் சக்தியெல்லாம் எம்மாத்திரம்? நன்றி மறந்தவனைக் கொல்லக் கூற்றுவன் என்ற ஒருவன் தேவையில்லை. அவன் மறந்த நன்றியே அவனை அழித்து விடும்.''

ஒன்றொரு பயன்றனை
உதவினோர் கணங்
கன்றிட ஒருவினை
கருதிச் செய்வரேல்
புன்றொழில் அவர்க்குமுன்
புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது
கூற்றும் வேண்டுமோ?

இதுதான் கந்த புராணம் உணர்த்தும் மிகப் பெரும் படிப்பினை. இதை இத் தொடரின் தொடக்கத்திலேயே கூறியிருக்கிறோம்.

இரணியன் தொடர்ந்தான்: ''அப்பா! சிவபெருமானை எதிர்த்து இதுவரை பிழைத்தவர்கள் உளரோ? பார்வையினாலேயே மன்மதனைப் பொடிபடச் செய்ததையும், சிரிப்பினால் முப்புரங்களை எரித்ததையும், அந்தகாசுரனைச் சுழலும்படி சூலத்தின் மேல் இட்டதையும் கால் விரலால் சலந்திரனை அழித்ததையும் நீங்கள் கேட்டதில்லையோ? அவர் காலால் காலனை உதைத்தவர். அரியயனாதி தேவர்கள் பயந்தோடி வந்து அடைக்கலம் புகுந்தபோது ஆலகாலம் உண்டவர். அப்பா, நீங்கள் எதிர்த்தீர்களே முருகப் பெருமானை. அந்தப் பாலன் யார் தெரியுமா? சர்வலோக சரண்யனாகிய பரமேசுவரனே தான் குழந்தையாக வந்திருக்கிறார்.

''விஷ்ணு மூர்த்தி வராகமூர்த்தியாக அவதரித்து இரணியனைக் கொன்ற வெற்றியிலே செருக்கடைந்தார். 'நானே உலகங்களுக்கெல்லாம் தலைவன்' என்று மயங்கினார். இரண்யாட்சனும் அப்படித்தான் எண்ணினான். இரண்யாட்சனுடைய இரத்தத்தை வராகமூர்த்தி பருகியதால்தான் நாராயணருக்கும் அந்த எண்ணம் வந்துவிட்டது. வெறியில் அஷ்ட திக்குகளை இடித்துத் தள்ளியது திவ்விய வராகம். மேகங்கள் அஞ்சும்படி ஆர்ப்பரித்தது. கடைக் கண்ணில் ஊழித் தீயைச் சிந்தியது. மதம் பிடித்துப் பூமியைத் தோண்டி உலவியது. இதைக் கண்டு பிரம்மன், இந்திரன் முதலிய தேவர்கள் பயந்து வெள்ளியங்கிரி சென்று சிவபெருமானிடம் முறையிட்டுக் கொண்டார்கள். சிவபெருமான் குன்றம் எறிந்த குமாரக் கடவுளைத்தான் அனுப்பினார். குமாரக் கடவுள் வராகமூர்த்தியை வேலினால் நெற்றியில் குத்தினார். மகாலட்சுமி வந்து மாங்கல்யப் பிச்சை கேட்க, வேலை நிலத்தில் அழுத்தி ஆற்றலைக் குறுக்கினார். குமாரக் கடவுள் அந்த வராகமூர்த்தியின் கொம்பைப் பறித்துக் கொண்டு போய்ச் சிவபெருமானிடம் கொடுத்தார். அந்தக் கொம்பைச் சிவபெருமான் மார்பிலே தரித்துக் கொண்டார்.

''பன்றியங் கொம்புகம
டம்புயங் கஞ்சரர்கள்
பண்டையென் பங்கமணி
பவர் சேயே — திருப்புகழ்

(தொடரும்)



வாலிபன் இன்றைய நாகரிகத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கினான்.

எதிரே இருந்த அந்த வயதானவரைப் பார்த்து, 'மணி என்ன ஆச்சு?' என்று கேட்டான். அந்தப் பெரியவர் கேட்டும் கேளாதவர் போலிருந்தார்.

வாலிபன், பாவம் கேட்கவில்லை போலும் என்று கருதி மீண்டும் 'மணி என்ன ஆச்சு?' என்றான். இந்த முறையும் மௌனமே அனுஷ்டித்தார் பெரியவர். அவன் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போனான்.

'சே! நானொரு முட்டாள். செவிடனிடம் போய்க் கேட்கிறேனே' என்று முணுமுணுத்தான்.

பெரியவர் இப்போது வாய் மலர்ந்தார்: 'தம்பி! நீ நினைப்பது போல் நான் ஒன்றும் செவிடனல்ல' என்றார்.

பின்பு 'ஏன் பதில் கூறவில்லை?' என்று எரிச்சல் மிகுந்த குரலிலே கேட்டான் வாலிபன்.

பெரியவர் சொன்னார்: 'நீ மணி கேட்பாய். நான் சொல்வேன். ஆனால் இதோடு போகுமா? நீ பேச்சுக் கொடுப்பாய். நான் பதில் தருவேன். பின்பு நாமிருவரும் அந்நியோன்யமாய்ப் போவோம். நண்பர்களான பிறகு உன்னை உபசரிப்பதற்காக என் வீட்டுக்கு வா என்று கூப்பிடுவேன். நீயும் வருவாய். எனக்கு அழகு மிக்க மகளொருத்தி இருக்கிறாள். நீங்கள் இருவரும் காதலிப்பீர்கள். வயது வந்த பெண்ணும் வாலிபனும் காதலிப்பது இயற்கை தானே? பின்பு நீங்களிருவரும் என்னிடம் அனுமதி கேட்பீர்கள். ஒரே மகளைப் பெற்றவன் நான். தட்டுக் கழிக்க மனமின்றி இருவருக்கும் திருமணம் செய்விக்கும் நிர்ப்பந்தம் எனக்கு ஏற்படும். ஆனால் வாட்ச் வாங்கிக் கட்டிக் கொள்ளத் திராணியில்லாத நீ எப்படி என் மகளை வைத்து வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுவாய்?' ந. அனுமந்

(ரஷ்ய நாடோடிக்கதை யொன்றைத் தழுவியது.)



எழுத்தாளர்களுக்கு எச்சரிக்கை!

உங்கள் கதாநாயகர்கள் காணும் கனவுகளைப் பக்கம்பக்கமாக விவரித்துப் பிரமாதமாக எழுதாதீர்கள். யதார்த்த நிலைக்கு வாருங்கள்! நாம் காணும் கனவுகளின் காலம் 90 விநாடிதான்! மேலும் சொல்லப் போனால்: நமது அன்னப் பாதையின் நீளம் மொத்தம் முப்பது அடி. நரம்புகளின் வழியே மூளை சம்பந்தப்பட்ட உறுப்புகளுக்குச் செய்தி அனுப்பும் வேகம் மணிக்கு 200 மைல்.

நம் செவியை விடப் பத்து மடங்கும், மூக்கை விட முப்பது மடங்கும் அதிக உணர்வுடையவை கண்கள். நம் மணிக்கட்டிலிருந்து நடுவிரல் நுனி வரை உள்ள நீளமும், மோவாய்க்கட்டையிலிருந்து நெற்றி உச்சிவரை உள்ள நீளமும் எல்லோருக்கும் சமமாக இருக்கும். - கௌதமி



அறிவுக்கு உணவு

1. பார்லிமெண்டின் சம்மதம் பெற்றபோதிலும் கூட நெருக்கடிநிலைப் பிரகடனங்கள் ஆறு மாத காலம் வலிமை பெற்றதாகவும், எக்காரணத்தைக் கொண்டும் மூன்றாண்டுகளுக்கு மேல் நீடிக்கப்பட மாட்டாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது எந்த நாட்டில்?
2. எந்த நாட்டுப் பார்லிமெண்டு "பார்லிமெண்டின் தாய்" என்று அழைக்கப்படுகிறது?
3. எந்த நாட்டுப் பார்லிமெண்ட் தேர்தல்களில் போட்டியிடுகின்றவர் 23 வயது நிரம்பியவர்களாகவும், ராணுவ சேவை புரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும்?
4. எந்தக் குடியாட்சி நாட்டில் பெண்களுக்கு வாக்குரிமை கிடையாது?
5. எல்லா மந்திரிகளும் சாதாரணக் குடிகளாக இருக்க வேண்டுமே தவிர ராணுவ அதிகாரிகளாக இருக்கக் கூடாது. ராணுவத்தில் இருப்பவர்கள் மந்திரிகளாகப் பதவி வகிக்கக் கூடாது. எந்த நாட்டில்?
6. இரண்டு மந்திரிகளுக்குமேல், மேல்சபையிலிருந்து கண்டிப்பாகத் தேர்ந்தெடுக்கக் கூடாது. எந்த நாட்டில்?
7. மந்திரிகள் அனைவரும் கண்டிப்பாகக் கீழ்சபையிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எந்த நாட்டில்?
8. எந்த நாட்டில் எல்லா வாக்காளர்களும் தங்களது வாக்குரிமைகளைக் கண்டிப்பாக அளிக்க வேண்டும்? இல்லையெனில் அவர்கள் அபராதம் செலுத்த வேண்டும்.

தொகுத்தவர்: இரா. சித்தரஞ்சன், மதுரை-1

விடைகள்: 1. இந்தியா; 2. இங்கிலாந்து; 3. பிரான்ஸ்; 4. சுவிட்சர்லாந்து; 5. ஜப்பான்; 6. அயர்லாந்து; 7. கனடா; 8. ஆஸ்திரேலியா.

தன்னுள் மணல் உறுத்துகிறதே என்று தவி யாய்த் தவித்துத் துயரப்பட்டுக் கொண்டிருந்தது கடல் சிப்பி.

அழகான முத்து ஒன்று தனக்காகவே பக்குவ மாகிக் கொண்டிருக்கிறது என்று ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தான் மனிதன்!

— தமிழழகன்



எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து வந்ததும், 'எண்ணெயே போகாமல் என்னடி குளியல்?' என்று தாய்மார்கள் பெண்களின் அடர்ந்த கூந்தலைத் தொட்டுப் பார்த்துக் கோபித்துக் கொள்ளுவதைப் பார்த்திருக்கிறோம். வருங்காலத்தில் இந்தச் சங்கடம் இராது! எண்ணெய்ப் பிசுபிசுப்பைப் போக்கப் புதுவிதமான திரவம் மேற்கு ஜெர்மனியில் கண்டு பிடிக்கப்பட் டிருக்கிறது. எண்ணெய்த் தொட்டியில் மூழ்கி எழுந்த ஓர் அழகியின்மீது இத்திரவத்தைப் பாய்ச்சி, தண்ணீரில் குளித்ததும் எண்ணெய் இருந்த இடமே தெரியாமல் மறைந்தது. கப்பல்களும் தொழிற்சாலைகளும் தேவையற்ற எண்ணெயைக் கடலிலோ ஆற்றிலோ கொட்டி விடுகின்றன. இத்தண்ணீரில் குளிக்கும் மனிதர்களுக்கும் குடிக்கும் விலங்கினங்களுக்கும் இதனால் தீங்கு நேருகிறது. வாகனங்களிலிருந்து ஒழுகும் எண்ணெய் ரஸ்தாவில் படிவதால் பின்னால் வரும் வாகனங்கள் சாலையிலிருந்து நழுவி விபத்துக்குள்ளாகின்றன. இந்த 'எண்ணெய்'த் தொல்லையைத் தவிர்க்கவே, புது விதமான இந்தத் திரவத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மகாராஷ்டிர ராஜ்யத்தில் கணேச உற்சவத்தைக் கொண்டாடச் செலவிடப்படும் தொகை என்ன தெரியுமா? ஏறக்குறைய ஐம்பது லட்சம் பொது விழாவுக்காகச் செலவிடப்படுகிறது! தனி நபர்கள் தங்கள் வீட்டிலே தனியாகப் பண்டிகை கொண்டாடச் செலவிடுவதோ மேலும் இருபத்தைந்து லட்சத்தை எட்டும். விநாயகரது இந்த விழாவை



மக்களிடையே பரப்பும் பெரும் பணியை ஏற்றவர் லோகமான்ய பால கங்காதர திலகர். கணேச உற்சவத்தின் இன்றைய உருவத்துக்கு — அதாவது பஜனைகளுக்கு ஏற்பாடு செய்வது, பக்திப் பாடல்களைப் பாடுவது, இசை விழாக்கள் நடத்துவது, பக்திச் சுவை ததும்பும் நாடகங்கள் நிகழ்த்துவது போன்ற காரியங்களுக்குக் காரணமானவர் திலகரே.

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இந்த உற்சவம் அரசியல் பிரசாரத்துக்கும் ஆக்கமளித்து வந்துள்ளது.

விநாயகரது உருவத்துக்கு அந்த அந்த ஆண்டுகளில் சூடு பிடிக்கும் அரசியல் உணர்ச்சிக்கும் கிளர்ச்சிக்கும் ஏற்ப அலங்காரம் செய்து விழா நடத்தியுள்ளார்கள் மக்கள்.

தவிர, தற்கால இலக்கிய வளர்ச்சியிலும் இந்தப் பண்டிகை ஒரு முக்கிய அங்கம் வகித்து வருகிறது. இந்தப் பண்டிகையின்பொழுது இலக்கிய வல்லுநர்கள் தங்கள் சொந்தப் படைப்பை அரங்கேற்றிச் சொற்பொழிவாற்றுவதும், அறிஞர்கள் கௌரவிக்கப்படுவதும் ஒரு விசேஷம். திலகர் பெருமானின் மனத்திலே இந்த உற்சவம் ஜனித்து சமூகத்தின் சமுதாய — அரசியல் துறைக்கு ஓர் அடித்தளமாக உருவாகி ஒருமைப்பாட்டுக்கு ஒரு களமாக அமைந்தது.

இத்தகைய கூட்டு வழிபாடு மக்களிடையே அரசியல் உணர்வைப் பரப்பிச் சுதந்திரப்போரில் மக்களை நாட்டம் கொள்ளச் செய்யப் பலவகையிலும் உதவியது.

மூட்டைப்பூச்சி வாத்தியார்!

பொழுது போக்குகளில் எத்தனையோ விதம். இதனை ஆங்கிலத்தில் ஹாபி எனக் கூறுவர். மூட்டைப் பூச்சிகளைச் சேகரித்து ஆராய்வது மேற்கு ஜெர்மனியில் நியூம்யூன்ஸ்டர் என்ற இடத்தில் ஒரு பள்ளி ஆசிரியரின் பொழுதுபோக்காம்.

கடந்த சில ஆண்டுகளில் சுமார் 2000 வகை மூட்டைப் பூச்சிகளைக் கண்ணாடிப் பெட்டிகளில் சேகரித்திருக்கிறாராம் இந்த வாத்தியார். இந்த இரண்டாயிரம் வகைகளில் மூன்று வகைதான் ரத்தம் குடிக்கும் வகையாம். அதில் ஒன்று உலக மறிந்த படுக்கை மூட்டையாம் (பெட்பக்). ஓய்.வி.வி.

ஆதாரம்: 'ஜெர்மன் நியூஸ் வீக்லி'

ஒரு யோசனை: இந்த மேற்கு ஜெர்மன் ஆசிரியரை ஒரு முறை நம் ரயில் பெட்டிகளில் அதிலும் மூன்றாவது வகுப்பிலே பிரயாணம் செய்யுமாறு கோரலாம்!


அய்யங்கார் ஹாஸ்யம்!

1. மதுரையில் அரியக்குடியின் கச்சேரி. பிடில் — ஸ்ரீ சௌடையா. வயலின் மிகவும் நன்றாக இருந்தது. எல்லோரும் மிகவும் நன்றாக ரசித்தார்கள். திரு அய்யங்கார் தம்முடைய பாராட்டைப் பின்வருமாறு ஒரு பாட்டின் நடுவில் சேர்த்துப் பாடித் தெரிவித்தார். அது இதுதான்: ''சௌடையாவின் வாசிப்பைக் கேட்காதவர் செவிடய்யா.'' — கரவொலி அடங்கப் பல நிமிடங்கள் ஆயின.

2. திருவையாற்றில் தியாகராஜ உற்சவம். எல்லா வித்வான்களும் மற்றும் சில அன்பர்களும் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். ஒரே புழுக்கம். 'காத்தே காணுமே' என்று ஓர் அன்பர் கூற, அதைக் கேட்டுக் கொண்டு வந்த அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், 'காத்து புக்காத்துக்கு (மாமியார் வீட்டுக்கு)ப் போயிருக்கும் போலே இருக்கு' என்று சொல்லிச் சிரித்தார்.

—சுதா ராவ்









"நாட்டின் நிலைநிலா ஏடு மாளட்டும்; இலக்கியம் இறக்கட்டும்; கலை கலையட்டும். நமக்கு வேண்டுவது ஏட்டைப் புரட்டினால், நாடு, நாட்டின் மக்கள், மக்கள் வாழ்க்கை, அவர்கள் வாழ்க்கை வளம், நாகரிகம் இன்ன பிற யாவும் தெள்ளிதில் விளங்க வேண்டும். அது ஏட்டோடு நிற்றல் சாலாது; நடைமுறையில் நடப்பதையே நவிலும் நூலாதல் வேண்டும்."

ஃ ஃ ஃ

"அன்னியர்கள் நம்மை மதிக்கமாட்டார்களே, பழிப் பார்களே எதிர்ப்பு பலமாய் விடுமே என்கிற பயமும் பலக் குறைவும் யாரிடத்தில் இருக்கிறதோ அவர்கள் ஒரு காலமும் சீர்திருத்தத்துக்கு உதவமாட்டார்கள். அக்குணங்கள் கொண்ட வர்களால் நடைபெறும் சீர்திருத்தம் ஒரு காலமும் பல னளிக்க முடியாது; அன்றியும் சீர்திருத்தம் செய்பவர்கள் எவ் வித தட்டுப்பாட்டுக்கும் ஆளாயிருத்தல் கூடாது.



ஃ ஃ ஃ

"பாட்டாளி – பஞ்சமன் – பாடுபட்டும் உணவின்றி உடையின்றித் தலைமுறை தலைமுறையாக உள்ளம் குமுறிய போதெல்லாம் அவனை வாழ வைக்கச் சர்க்காரிடமிருந்து சட் டம் புறப்படவில்லை. தனியுடைமையாளரின் தயவு தோன்ற வில்லை. கட்சிகளுக்கும் கருணை பிறக்கவில்லை. ஏழை துன்புற்றால் அது அவன் தலைவிதி; முன்ஜென்ம பாவம்; தெய்வத்தின் கோபம். பாட்டாளி மகன் பண்டம் வாங்கப் பணம் இல்லாமல் பசித்திருக்கும் போது – பருத்தி ஆடைக்குப் பரிதவித்தபோது பார்த்திருந்த உலகம் இன்று படித்தவனுக்குப் பாலன்னமில்லை யென்றால், பணக்காரனுக்குப் பட்டாடை இல்லை யென்றால் பஞ்சமெனக் கூறிப் பரிவு காட்டுகிறது.

ஃ ஃ ஃ

"என்னுடைய முடிவான கருத்து என்னவென்றால் திறமை முதல் தேவையும் இல்லை. இரண்டாம் தேவையுமில்லை. மூன் றாம் தேவையுமில்லை! திறமை என்பதே அடியோடு தேவையில்லை என்பதுதான். திறமையுடையவர்களை யெல்லாம் கொஞ்ச காலத்துக்கு ஒதுக்கி வைத்துவிட்டு, திறமையற்றவர்களை மட்டும் கல்லூரிகளில் சேர்த்துப் படிக்கும்படி செய்ய வேண் டும். அப்போதுதான் கையும் காலும் சூம்பிப் போய் வயிறு மட்டும் பருத்து வலுக் குறைந்து வாடியிருக்கும் தமிழ் நாடு வலுவடைய முடியும்.



ஃ ஃ ஃ

மேற்கண்ட வாசகங்கள் தமிழ்நாட்டின் சில பிரபல மேடைப்பேச்சாளர்களுடையவை. திருவாளர்கள் ஈ.வெ.ரா., ம. பொ. சி., இ. ஆ. பெ. விசுவநாதம், சி. என். ஏ. ஆகிய வர்களை மேற்கண்ட வாசகங்களுடன் சரியாக இணைக்க முடிகிறதா என்று முயற்சி செய்யுங்கள். உங்கள் திறமையைக் கீழே கண்ட சரியான விடைகளுடன் ஒத்திட்டுப் பார்த்து உங்களுக்கு நீங்களே மார்க்குகள் போட்டுக் கொள்ளுங்கள்.



1. சி. என். அண்ணாத்துரை, 2. ஈ. வெ. ராமசாமி நாயக்கர், 3. ம. பொ. சி. 4. இ. ஆ. பெ. விசுவநாதம்

ஆதாரம் : "சிறந்த பேச்சாளர்கள்"

புகழ்பெற்ற போலிகள்

ஆச்சரிய மோசடி


“சந்தேகமின்றிச் சந்திர மண்டலத்தில் வாழ்பவர்கள் சந்தோஷம் நிறைந்த பிரகிருதிகளாகவே தென்படுகிறார்கள். அவர்களுடைய சில பழக்கவழக்கங்களை மாத்திரம் நம்முடைய அநுபவபூர்வமான வழிகளுடன் ஒப்பிட முடியாமல் இருக்கிறது. இது பற்றிய ஒரு தனி ரகசிய அறிக்கை பிற்பாடு வெளியாகும்.”


சந்திர மண்டலத்துக்கு நேரே போய்த் தங்கியிருந்து பார்த்து விட்டுத் திரும்பி வந்தவர் பேசுவதைக் கேட்பது போல் இருக்கிறதல்லவா? இந்தச் சுவாரசியம் நிறைந்த செய்தியை மக்கள் பரபரப்புடன் கேட்டு ரசித்தார்கள். இன்றைய ஸ்பூட்னிக், ராக்கெட் நாட்களிலல்ல! இன்றைக்கு ஏறத்தாழ நூற்று முப்பது வருடங்களுக்கு முன்பு! மக்களுக்கு இத்தகைய ஆர்வத்தையும் ஆவலையும் அளிக்கக் காரணமாக இருந்தது 'நியூயார்க் ஸன்' 'New York Sun' என்ற செய்திப் பத்திரிகைதான்!

1835ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் தேதியிட்ட 'நியூயார்க் ஸன்' பத்திரிகை இதழ்தான் முதன் முதலில் இந்தச் சந்திர மண்டலச் செய்தியை வெளியிட்டு வாசகர்களிடையே பரபரப்பைத் தோற்றுவித்தது. அதன் இரண்டாவது பக்கத்தில் 'ஸர் ஜான் ஹெர்ஷல் பிரமிப்பூட்டும் வகையில் வான வெளி ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார். அவருடைய புதுவகையான தூரதிருஷ்டிக் கண்ணாடி அந்த ஆராய்ச்சிகளுக்கு வெகுவாக உதவியிருக்கிறது. இது பற்றிய விவரங்கள் மேலும் தொடரும்' என்று கண்டிருந்தது.

நான்கு நாட்கள் கழித்து அதே பத்திரிகையின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் 'ஆச்சரியமான வானவெளிக் கண்டுபிடிப்புகள். ஜான் ஹெர்ஷல் அடைந்த வெற்றி' என்ற வார்த்தைகளும் பிரசுரமாயின.

அன்று மாலைக்குள்ளாகவே, அத்தனை நியூயார்க் நகரவாசிகளும் இச்செய்தி பற்றியே பேச ஆரம்பித்தார்கள். காரணம் ஸர் ஜான் ஹெர்ஷல் அந்த நாட்களில் ஒரு பிரபலமடைந்த வானசாஸ்திர மேதை. கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் அவர் தென்னாப்பிரிக்காவில் உள்ள கேப் டவுனில் ஒரு பிரத்தியேகப் பரிசோதனைச்சாலை அமைத்துக் கொண்டு தம் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தத் திட்டமிட்டு, அமெரிக்காவிலிருந்து கிளம்பிப் போய்விட்டிருந்தார். அப்புறம் அவரைப் பற்றிய எந்தவித தகவல்களும் நியூயார்க்வாசிகளுக்கு எட்டவில்லை.





'நியூயார்க் ஸன்' பத்திரிகைதான் இப்போது முதன் முதலாக அவரைப் பற்றிய தகவல் கொடுக்க ஆரம்பித்தது.

''ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஒரு மருத்துவர் அமெரிக்காவுக்கு வந்திருப்பதாகவும் அவர்தான் ஹெர்ஷலின் அபார வெற்றிகளைப் பற்றி எடின்பரோ விஞ்ஞான சஞ்சிகை ஒன்றில் வெளியாகியிருக்கும் விஷயங்களைச் சுட்டிக் காட்டி அந்தச் சஞ்சிகைகளையும் கொடுத்திருப்பதாகவும் அதை ஆதாரமாகக் கொண்டு தம் பத்திரிகையில் தொடர்ந்து அந்த ஆராய்ச்சி விஷயங்கள் வெளியிடப்படும் என்றும் 'நியூயார்க் ஸன்' பத்திரிகையின் ஆசிரியரான பெஞ்சாமின் டே அறிவித்திருந்தார். அவருக்கு வயது இருபத்தைந்து. பத்திரிகையின்ஸ்தாபகரும்ஆசிரியரும்அவரே!

அதைத் தொடர்ந்து முதல் கட்டுரையிலேயே ஸர் ஜான் ஹெர்ஷல் கேப்டவுனில் உபயோகிக்கும் புதிய தூரதிருஷ்டிக் கருவியைப் பற்றி விவரமாக எழுதப்பட்டிருந்தது. இருபத்தி நான்கு அடி நீளமுள்ள விசேஷ 'லென்ஸ்' பொருத்தப்பட்டிருப்பதாகவும் பதினேயாயிரம் பவுண்டு கனமுள்ளதென்றும் நாற்பத்தி இரண்டாயிரம் மடங்கு பெரிதாகக் காட்டும் தன்மை வாய்ந்ததென்றும் அந்தத் தூரதிருஷ்டிக் கருவி வருணிக்கப்பட்டிருந்தது.

வாசகர்களின் உள்ளங்களில் ஆர்வம் வெள்ளமாகப் பெருக்கெடுத்தோடத் தொடங்கியது. அவர்கள் பத்திரிகை ஆபீஸ் வாயிலிலேயே போய்க் காத்திருந்து அச்சுமை உலருவதற்கு முன்பே 'நியூயார்க்ஸன்'னை வாங்கிப் படிக்கத் துடித்தார்கள். அவர்கள் ஆர்வம் வீண் போகவில்லை.

அடுத்தாற்போல் ஹெர்ஷல் தம் விசேஷ தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் சந்திர மண்டலத்தைப் பார்த்த செய்தி வெளியாயிற்று.

''சுமார் நாலு கஜ தூரத்திலிருந்தே பார்க்கும் உணர்ச்சி தோன்றுகிறது. நாம் வசிக்கும் பூமிக்கும் சந்திர மண்டலத்துக்கும் எந்த விதமான வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லை. மரங்களடர்ந்த வனப் பிரதேசங்கள் தென்படுகின்றன. நமது காட்டெருமைகளை விடப் பன்மடங்கு சிறிய நாலு கால் பிராணிகள் வளைய வருகின்றன. அவைகளின் கொம்புகள் பிறைச் சந்திரன் வடிவில் அமைந்திருக்கின்றன. பிடரியெல்லாம் ரோமக் கற்றைகள்..... மேகக் கூட்டங்கள் இப்போது பார்வையை மறைக்கின்றன. சற்றுப் பொறுத்துப் பார்ப்போம்'' என்று ஹெர்ஷல் தூரதிருஷ்டிக் கண்ணாடியில் தம் கண்களைப் பதித்துப் பார்த்துக் கொண்டே தம் உதவியாளர்களிடம் மேற்கண்டவாறு குறிப்புக்கள் கொடுத்தாராம்.

தொடர்ந்து, ''மேகங்கள் கரைகின்றன. இப்போது புதிய காட்சி தென்படுகிறது. தவளைகள் போல் ஆனால் உருண்டை வடிவான ஜந்துக்கள் நீருக்குள்ளிருந்து மணல் திட்டுக்களுக்கு அதி வேகமாகத் தாவுகின்றன. ஓடைக் கரையில் ஆடு போன்ற, ஆனால் ஒற்றைக் கொம்புள்ள மிருகங்கள் நடமாடுகின்றன. இன்னும் எத்தனை அதிசயங்கள் இங்கு இருக்கின்றனவோ?'' என்று ஹெர்ஷல் முடித்திருந்தார்.

இந்தச் செய்தி வெளியான தினத்தன்று பத்திரிகைப் பிரதிகள் அனைத்தும் அச்சாகி அரை மணி நேரத்தில் தீர்ந்து விட்டன. தெருவிலும், வீடுகளிலும், பார்க்குகளிலும் பொதுமக்கள் தங்கள் சொந்தப் பிரச்னைகளையெல்லாம் மறந்து சந்திர மண்டலத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் காலத்தில் நியூயார்க் நகரில் பெஞ்சாமின் டேயின் 'நியூயார்க் ஸன்'னைத் தவிர பத்துச் செய்தித் தாள்கள் அச்சாயின. அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் புதிதாகத் தங்களுக்குப் போட்டியாகத் தொழிலில் இறங்கியிருக்கும் பெஞ்சாமின் டேயையும், அவருடைய பத்திரிகையையும் அலட்சியப் பார்வையுடனேயே ஒதுக்கி வந்தார்கள். அவர்கள் பல வருடங்களாக இந்தத் தொழிலில் இருப்பவர்களல்லவா? ஆனால், ஹெர்ஷலின் சந்திரமண்டல ஆராய்ச்சிசம்பந்தப்பட்ட செய்திகள் 'நியூயார்க் ஸன்'னின் மதிப்பை உயர்த்தி யிருக்கின்றன என்று அவர்கள் ஒப்புக்கொள்ள முன்வந்தனர். ''சமீப காலத்

தின் வாசகர்களின் ஆவலை இந்த அளவு தூண்டும் வகையில் எந்த விதமான செய்திகளும் வெளியானதில்லை. ஸர் ஜான் ஹெர்ஷெலும் அவருடைய தூரதிருஷ்டிக் கண்ணாடியும் இன்றைய மக்களின் பொதுஅறிவை வெகுவாக அதிகரிக்க உதவியிருக்கின்றனர்'' என்று 'நியூயார்க் டெய்லி அட்வர்டைசர்' குறிப்பிட்டிருந்தது.

பெஞ்சாமின் டே, தொடர்ந்து சந்திர மண்டலத்தில் வேறு பகுதிகளில் ஹெர்ஷெல் கண்ட புது மாதிரித் தாவரங்களைப் பற்றியும் உலகின் பல பாகங்களிலும் வாழும் பூர்வக் குடிகளின் குடிசைகளை விட அபிவிருத்தியடைந்த அளவில் அங்கு தென்படும் குடிசைகளைப் பற்றியும், அவற்றிலிருந்து புகை வெளிவருவதிலிருந்து அங்குள்ள மனிதர்களுக்குத் தீயின் உபயோகம் தெரிந்திருக்க வேண்டுமென்றும், சந்திர மண்டலக் குறிப்புக்களை வெளியிட்டார்.

ஆறு நாட்களுக்குப் பிறகு அதே ஆகஸ்ட் இருபத்தி எட்டாம் தேதியன்று பெஞ்சாமின் டே 'இன்று உலகத்திலேயே அதிகமான எண்ணிக்கையில் அச்சாகும் பத்திரிகை நம்முடையதுதான் என்றும், மொத்தம் பத்தொன்பதாயிரத்து முந்நூற்று அறுபது பிரதிகள் (19,360) அச்சாகின்றனவென்றும் அறிவித்தார். அவருடைய அச்சகம் ஒரு நாளைக்குப் பத்து மணி நேரம் தொடர்ந்து வேலை செய்தது. 'அந்த நாட்களில் உலகில் அதிகபட்சமாகப் பதினேழாயிரம் பிரதிகளை விநியோகித்த ஸ்தாபனம் 'லண்டன் டைம்ஸ்'தான்!

''தூரதிருஷ்டிக் கண்ணாடியின் 'லென்ஸை' மேலும் அபிவிருத்தி செய்து பார்த்ததில் சந்திர மண்டலத்தில் மனிதர்களும் இருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அவர்களுக்கு இறக்கைகள் போன்ற உறுப்புக்கள் இருப்பதாகவும் தோன்றுகிறது. ஆனால் அவர்கள் தரையில் நடக்கும்போது கம்பீரமாக நிமிர்ந்து நடக்கிறார்கள். முகத்தைத் தவிர எங்கும் அவர்களுக்குச் செம்பு நிறத்தில் ஒரே ரோமக் கத்தைகள். இவர்களை மனித வௌவால்கள் என்றே அழைக்கலாம்.

''சந்தேகமின்றிச் சந்திர மண்டலத்தில் வாழ்பவர்கள் சந்தோஷம் நிறைந்த பிரகிருதிகளாகவே தென்படுகிறார்கள். அவர்களுடைய சில பழக்க வழக்கங்களை மாத்திரம் நம்முடைய அநுபவபூர்வமான வழிகளுடன் ஒப்பிட முடியாமல் இருக்கிறது. இது பற்றிய ஒரு தனி ரகசிய அறிக்கை பிற்பாடு வெளியாகும்.''

இந்தக் கட்டத்தில் 'மெர்க்கன்டைல் அட்வர்டைசர்', 'நியூயார்க் அட்வகேட்' போன்ற இதர பத்திரிகைகளும் ஸர் ஜான் ஹெர்ஷெலின் புகழ் பாடி 'நியூயார்க் ஸன்' கட்டுரைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்துப் பிரசுரிக்கத் தொடங்கின.

பதினோராயிரம் வார்த்தைகளைக் கொண்ட அந்தக் கட்டுரைத் தொடர் ஆகஸ்ட் முப்பத்தியோராம் தேதியன்று முடிந்தபோது **அன்றைய நியூயார்க்கின் இரண்டு லட்சத்தி எழுபதினாயிரம் ஜனத்தொகையினரும் 'நியூயார்க் ஸன்'னின் கட்டுரையின் மனத்தைப் பறி கொடுத்திருந்தார்கள்; அந்தப் பத்திரிகையின் விற்பனையும் ஏகமாக ஏறிவிட்டது.**

செப்டம்பர் மாத முதல் வாரத்தில் 'நியூயார்க் ஸன்' நிருபர்களில் ஒருவரான ரிச்சர்ட் ஆடம்ஸ் லாக், ஒரு ஹோட்டலில் 'காமர்ஸ் ஜர்னல்' என்னும் சக பத்திரிகை நிருபருடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தான். 'காமர்ஸ் ஜர்னல்' கொஞ்சம் ஜபர்தஸ்து உள்ள பத்திரிகை. அதுகூட 'நியூயார்க் ஸன்' வளர்ச்சியைக் கண்டு மனம் தளர்ந்து ஹெர்ஷெல் ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொஞ்சம் மாற்றி மீண்டும் பிரசுரிக்க நினைத்தது. இந்தச் செய்தியைத்தான் அந்தப் பத்திரிகை நிருபர் 'லாக்'கிடம் தெரிவித்தார்.

தம் பத்திரிகையின் வெற்றிப் பெருமிதத்தில் மிதந்து கொண்டிருந்த லாக் உற்சாக மிகுதியில் சிரித்தான். கடந்த இரு வாரங்களில் அவனுக்குச் சம்பளம் கணிசமாக உயர்ந்திருந்தது.

''ஆஹா!... உங்கள் காமர்ஸ் ஜர்னலும் இந்தக் காப்பியடிக்கும் நிலைக்கு வந்து விட்டதா? பேஷாய் அடியுங்கள். அத்தனை பெருமையும் எனக்குத்தான்! சந்திர மண்டல ஆராய்ச்சிக் கட்டுரைக்கும் ஹெர்ஷெலுக்கும் சம்பந்தம் கிடையாது. என் கற்பனையை உபயோகித்து நான்தான் முழுக்க முழுக்க எழுதினேன். இப்போது ஹெர்ஷெல் எங்கிருக்கிறார் என்றுகூட எனக்குத் தெரியாது'' என்றான் லாக்.

லாக் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை பட்டதாரி. புத்தகப் பிரசுரகர்த்தாவாக ஆக வேண்டும் என்று முயற்சி செய்து தோல்வி கண்டு அமெரிக்காவுக்குப் பிழைப்பை நாடி வந்தவன். சிறு வயதிலிருந்தே விஞ்ஞான விந்தைகளில் மனத்தைப் பறி கொடுத்தவன். தான் ஒரு பெரிய விஞ்ஞானி என்று கற்பனை செய்து கொள்வான். அந்தக் கற்பனையின் விளைவாகத்தான் ஸர் ஜான் ஹெர்ஷெலின் பெயரை இணைத்துத் தன் இஷ்டத்துக்கு ஏற்ற சந்திர மண்டலத்தைச் சிருஷ்டித்து நியூயார்க் நகரவாசிகளைக் கவர்ந்துவிட்டான்.

'காமர்ஸ் ஜர்னல்' நிருபர் ஒரே ஓட்டமாக ஓடித் தன் பத்திரிகையில் இந்தப் 'போலி சந்திர மண்டலத்'தின் குட்டை உடைத்துக் கொட்டை எழுத்தில் செய்தி வெளியிடச் செய்தான். வாசகர்கள் திகைத்துப் போனார்கள். மற்றப் பத்திரிகைகளும் 'நியூயார்க் ஸன்'னைக் கிண்டலுக்குள்ளாக்கின. ஆனால் பெஞ்சாமின் டே கொஞ்சம்கூட அயர்ந்து விடவில்லை. காரணம், அவர் பத்திரிகையின் விநியோக எண்ணிக்கை விழவில்லை. அவருக்கு வேண்டியது அதுதானே!

தென்னாப்பிரிக்காவின் ஒரு மூலையில் தம் சர்வ சாதாரண தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவி கொண்டு நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருந்த ஸர் ஜான் ஹெர்ஷெலுக்கு வெகு நாட்கள் கழித்து இந்த 'நியூயார்க் ஸன்' விவகாரம் எட்டியது. அவர் மனம் விட்டுச் சிரித்தார். ''நான் கனவிலும் எதிர்பார்க்க முடியாத புகழையும் பெருமையையும் இந்தப் பத்திரிகை நிருபர் எனக்குத் தேடிக் கொடுத்துவிட்டார்! **அவருக்கு மிக்க நன்றி!'' என்றார்.**

—திருவேரகத்தான்



இளமையிற் கல்

சமையல் பயிலும் சிறுமி, அவளே வருங்காலக் குடும்பத் தலைவி. கற்றுக்கொடுங்களேன் ஒரு நாள். எவ்வளவு விரைவில் கற்றுக்கொடுக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு மேல்.

உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் இப்போதே கற்றுக்கொடுக்க வேண்டிய மற்றொரு பாடம், பற்களையும் ஈறுகளையும் ஒழுங்கு தவறாமல் பராமரிப்பதே. பற்சிதைவும் ஈறு நோய்களும் வராமல் பாதுகாத்த உங்கள் உதவிக்காகப் பிற்காலத்திலே நன்றி செலுத்துவார்கள் அவர்கள்.

போர்ஹான்ஸ் பற்பசைகொண்டு பற்களையும் ஈறுகளையும் பாதுகாத்துக்கொள்ள இன்றே பழக்குங்கள் உங்கள் செல்வங்களை. அது ஒரு பல் வைத்தியரின் தயாரிப்பாகும்; ஈறுகளின் நலனுக்காக டாக்டர் போர்ஹான்ஸ் தயாரித்த விசேஷத் துவர் மருந்துகள் அடங்கிய பற்பசை உலகில் இதுவொன்றே. தவறாமல் உபயோகித்துவந்தால் பனிச்சென்ற வெண் பற்களையும் பாங்கான உறுதிவாய்ந்த ஈறுகளையும் பெற்று விளங்குவது திண்ணம்.

"CARE OF THE TEETH AND GUMS" என்ற சிறிய வண்ணப் புத்தகத்தை இலவசமாகப் பெற, தபால் செலவுக்காக 10 பைசா தபால் வில்லைகளை இணைத்து எழுதவும்: மானேர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர் 10031, பம்பாய்.



COUPON

K. 6

Please send me a copy of the booklet
"CARE OF THE TEETH AND GUMS"

Name ....

Address ....

....

"ஜாதி இரண்டொழிய வேறில்லை என்று அந்தக் காலத்திலே யாரோ பெரியவர் சொல்லி வைத்தார். தர்மம் கொடுப்பவன் உசத்தி, கொடுக்காதவன் தாழ்த்தி என்று ஏதோ சொன்னதாக நினைவு. அவர் இந்தக் காலத்திலே பட்டணத்திலே எங்காவது ஒண்டுக்குடித்தனம் நடத்தினால் வேறு விதமாகப் பாடியிருப்பார்! இந்த மெட்ராஸிலே இப்போ இரண்டே ஜாதிகள்தான். ஒண்ணு வீட்டைக் கட்டிப் போட்டுக் கொண்டு வாடகைக்கு விடுகிறவர். மற்றொன்று குடியிருக்க உள்ளே நுழைகிறவர்.

அப்பப்பா! இந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் போன ஜன்மத்திலே கம்சன், ஹிரண்யன் முதலானவர்களாக இருந்திருப்பார்களோன்னுகூட ஒரொருசமயம் நினைக்கத் தோணறது! இடம் கேக்கறபோதே நாக்குக் கூசாமே 'அத்தனை பசங்களுள்ள ஃபாமிலிக்கு இடம் கொடுக்க முடியாது' என்று நிர்த்தாட்சிண்யமாகச் சொல்லிவிடுகிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் இவர்களுக்கும் கொடுத்துட முடிகிறதா? மனுஷன்னு எத்தனையோ எதிர்பாராத சிக்கல்கள் இருக்கும். நாலாம் தேதி காலையிலே முகத்தில் எத்தனை கடுகடுப்பைத் தோற்றுவித்துக்கொள்ள முடியுமோ அத்தனையையும் உண்டாக்கிக்கொண்டு நம் முன் நிற்பார் வீட்டைப் படைத்தவர்.

வாடகைன்னு கழுகாகப் பறக்கிறாரே! ரிப்பேர் பண்ணணும்னு ஒரு வார்த்தை சொல்லிப் பாருங்களேன். அவர் காது நிரந்தரச் செவிடாகிவிடும்! குடியிருக்க வருபவர்களுக்கு வசதி ஒரு கேடா என்ற கேள்வி அவர் பார்வையிலே நிற்கும். ஒரு குழாயைச் சுற்றி வந்து ஒன்பது குடித்தனக்காரர்கள் மண்டையை உடைத்துக் கொள்ளட்டுமே! அவர் எட்டிக்கூடப் பார்க்க மாட்டார்! அவர்தான் தமக்குத் தனிக் குழாய் வைத்திருப்பாரே!

ஏதாவது கேட்டால் 'உமது போர்ஷன் எனக்கே தேவை! காலிபண்ணும்' என்று சர்வ அலட்சியமாகச் சொல்லிவிடுவார். குடிதூக்கற கஷ்டத்தை நினைத்துப் பார்த்து எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது!



"அவர்கள் பொல்லாதவர்கள்!"

சுட்டிக் காட்டுபவர் ஒண்டுக்குடித்தனம் நடத்தும் **திரு வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி ராவ்** (பி அண்டு ஸி மில்லில் பணியாற்றுபவர்).



பாராட்டுப் பத்திரங்கள் வழங்கலாம்! அந்தக் காலத்து மகாபுருஷர்கள் பலவித அஸ்திரங்களைப் பிரயோகித்து எதிரிகளை வீழ்த்துவார்களாம்! இந்தக் காலத்தில் எட்டடிக்கு எட்டடி அறை, ஒரு சமையலறை இவற்றுக்கு ஐம்பது ரூபாய் வாடகை அநாயாசமாகக் கேட்பதோடு நிற்காமல் ஐந்நூறு ரூபாய் முன்பணம் வேண்டும் என்ற அட்வான்ஸ் அஸ்திரத்தையும் வீசி இடம் கேட்க வருபவர்களை மூர்ச்சையுறச் செய்கிறார்கள்.

குடித்தனக்காரர்களுக்குத் தனி எலெக்டிரிக் மீட்டர் வைக்காத 'ஓனர்'களெல்லாம் பிளாக் அவுட் நிபுணர்கள். எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலும் ஒன்பது அடித்தால் மெயினை 'ஆப்' பண்ணி விடுவார்கள். இப்படித்தான் ஒரு நாள் ராத்திரி தரிசனம் கொடுத்துத் தலைமறைவாய்ப் போன தேள் ஒன்றைத் தேடும் அவசரத்தில் கடிகாரத்தைக் கவனிக்க மறந்து விட்டோம்! அந்தத் தேளுக்கு உதவி செய்யறாப் போலே விளக்கு அணைந்துவிட்டது! ஒரே வர்க்க அநுதாபம்! மூணும் தேதின்னு மூணும் தேதி வாடகை வீடு படைத்தவர்களுக்கு விசாலமான இருதயம் வேண்டும். நியாயமான வாடகைக்கு ஆசைப்பட வேண்டும்! வாடகை கொடுப்பவர்களுக்குக் குறைந்தபட்ச வசதி செய்து தர முன்வர வேண்டும்.

புதிது புதிதாகக் குடித்தனம் மாறினால் வாடகையும் கூட்டலாம் என்ற ஒரே கொள்கையைக் கடைப்பிடிப்பவர்களுக்கு என்றைக்குத்தான் நல்ல புத்தி வருமோ?

ஹைதர்கால வீடு – அது
அவர் பெருமைச் சின்னம்

மைதாமாப் போல் உளுத்துக்
கொட்டும் மரச் சட்டம்

கைவைத்த இடமெல்லாம்
காரைக் கட்டி பர்பி

வையகத்தில் கண்டிராத
மயனுடைய சிருஷ்டி!

என்று பாடிவிட்டுச் சளைசளையாய் வாடகையைக் கொட்டிக் கொடுத்துவிட்டு வசதிகளுக்குக் கனவு காணும் குடித்தனக்காரர்கள் குரல் யாரை எட்டப் போகிறது?

நான் பகவத் கீதை பாராயணம் பண்ணுகிறேன். "ஹே பார்த்தா! பலனைப் பற்றிக் கவலைப்படாமல் நீபாட்டுக்குக் காரியத்தைச் செய்" என்று பகவான் எளிதாகச் சொல்லிவிட்டார் அந்தக் காலத்தில். அதே பகவான் இப்போது பிரத்யட்சமாகி, "பக்தா! நீபாட்டுக்கு இடம் கேட்டு வருபவர்களுக்குப் போர்ஷனைக் கொடுத்துவிடு! பலனைப் பற்றி யோசிக்காதே' என்று சொன்னால் என்னால் கேட்டுவிட முடியுமா? பாவம், பகவான்! அவருக்கு இக்காலத்துப் பட்டணத்துக் குடித்தனக்காரர்களின் போக்கு எப்படித் தெரியப் போகிறது?

இடம் கேட்டு வரும்போதுதான் அவர்களிடம் எத்தனை குழைவு, மரியாதை! 'இந்த இடம் எங்களுக்கு ஏதேஷ்டம். நீங்க சொல்ற வாடகையைக் கொடுத்துவிடுகிறேன். மூணு மாத அட்வான்ஸா? இதோ பிடியுங்கள்' என்று பர்ஸைத் திறக்கிறார்கள். உள்ளே புகுந்த மூன்றும் நாளே யுத்த சங்கை முழங்கத் தொடங்கிவிடுகிறார்கள். 'அநியாயம்! அக்கிரமம்! இந்தக் குச்சுக்கு இவ்வளவு வாடகையா?' என்று ஓலமிடுகிறார்கள். நுழைவதற்கு முன்னாலே இந்த ஞானோதயம் ஏற்பட வேண்டும். அப்புறம் மாதா மாதம் வாடகை வாங்குவதற்குள் நம் பிராணன் போய்விடுகிறது. காலி பண்ணச் சொன்னால் நாங்க பொல்லாதவங்க.

வரும்போது கணவனும் மனைவியுமாக இரண்டேபேர்கள்தான் வருவார்கள். ஆனால் அடுத்த வாரத்திலேயே ஒரு இரவுக்குள் அவர் சம்சாரமும் இரண்டு மூன்று பேரன் பேத்திகளுடன் டாக்ஸியிலிருந்து இறங்குவார்கள். 'கிராமத்திலேயிருந்து வந்திருக்கிறார்கள். பத்து நாளிலே போய்விடுவார்கள்' என்று முதலில் வாடகைக்கு இடம் பிடித்தவர் நாளுக்காக நம்மிடம் சொல்லிவிட்டு நழுவுவார். அப்புறமாவது அவர்கள் கிளம்புவதாவது? வருகிறபோது அதிக நபர்கள் இருப்பதாகக் காண்பித்துக் கொள்ளக் கூடாது என்பதற்கு இப்படி ஒரு தந்திரம்.

'இடம் கேட்டு வரபோது குழந்தைகள் எத்தனை என்று கேட்டுவிட்டால் எங்களுக்குக் கம்சன் பட்டம்! நாங்க ஒன்றும் குழந்தைகள் விரோதியில்லை! ஆனால் அந்த வாண்டுகள் கூடத்திலேயே கோலிக் குண்டு ஆடக் குழி தோண்டுவார்கள். பெற்றவன் கண்டிக்க மாட்டான். வாடகைக்கு இருக்கும் வீடு தானே? அலட்சியம்! பக்கத்து வீட்டுக்காரன் கண்ணாடி ஜன்னலை உடைத்துவிட்டு வம்பை விலைக்கு வாங்குவார்கள். என் வீட்டுக்கும் எனக்கும் அவப் பெயர். இன்தவிடக் கம்சன் பட்டமே தேவலை!

'கொள்ளையாய் வாடகை வாங்கிக்கொள்கிறான். ஆனால் வெள்ளையடிக்க மனம் வர மாட்டேனென்கிறது' என்று யாராவது நிச்சயம் உம்மிடம் சொல்லியிருப்பார்களே! சுவரைச் சுவராக வைத்திருக்கிறார்களா பாவிகள்! சர்வ நாசம்! இழைக்க இழைக்கப் பூசிய சுவர்களிலெல்லாம் இளிச்சவாய் காலண்டர்களை மாட்ட ஆணி அடித்துப் பாழ்பண்ணுகிறார்கள். இவர்களுக்கு வெள்ளையடிப்பு என்ன என்றுதானே நினைக்கத் தோன்றுகிறது!

என் சௌகரியத்துக்கு டெலிபோன் வைத்துக் கொண்டிருக்கிறேன். நடு ராத்திரி

"இவர்கள் மட்டும் என்னவாம்?"

பதில் கேள்வி போடுபவர் வீட்டுச் சொந்தக்காரரர் திரு கே. பி. சுப்பிரமணியம் (ஆசிரியர் விவேகானந்தா கல்லூரி)


பிரச்னைகள்



யிலே குடியிருப்பவரோடே குசலப்பிரசனம் பண்ண யாராவது கூப்பிடுவார்கள். நான் போது அனுப்பி அவரை வரவழைத்துப் பேசி முடிக்கும்வரையில் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருக்க வேண்டும். முகத்தைச் சுளித்தால் வீட்டுக்காரன் பொல்லாதவன்!

வாடகை ஒழுங்காக வந்து சேர்வன்று சிரமந்தான். எங்களுக்கும் பண முடைஉண்டு. இல்லென்று எதுக்காக வீட்டில் இன்னொருத்தரைக் குடி வைக்கப் போகிறோம். ரிப்பேர் பண்ணறதோ ஏன் கண்ணும்பு அடிக்கிறதுன்னுக்கூட இந்தக் காலத்தில் சாமான்கள் விலையும் கூலியும் ஏகமா ஆகிறது. வருஷா வருஷம் உயர்த்துக்கிட்டே போகிற கார்ப்பரேஷனின் சொத்து வரி வேறே.

மொத்தத்திலே இடம் தேடிக் குடி வருபவர்கள் வாடகை கொடுக்கும் விஷயத்தில் நாணயமாக நடந்து கொள்ள வேண்டும். குடியிருக்கிற இடத்தைத் தங்கள் சொந்த இடத்தைப் பாதுகாப்பது போல் வைத்துக் கொள்ள வேண்டும். அப்புறம் பிரச்னைக்கு ஏது சார் இடம்?



காலச்சக்கரம்

சி. ராஜேந்திரன்

அத்தியாயம் 26

சலசலப்பு

தாமரைத் தொழிலகம் தொடங்கிய சில மாதங்களில் தங்கப்பன் தானாகவே முயன்று முன்னின்று ஃபாக்டரி தொழிலாளர்களின் யூனியன் ஒன்றை நிறுவினான். எல்லா விதங்களிலும் ஒரு லட்சியத் தொழிற்சாலையாக அது திகழ வேண்டும் என்கிற ஆசை அவனுக்கு. தொழிலாளர்கள் கூடுவதற்கென்று குறைந்த செலவில் ஓலைக் கூரையும் சிமிண்டுத் தளமும் மூங்கில் தூண்களும் கொண்ட ஒரு தனி இடத்தை உருவாக்கினான். அதை ஒட்டிப் பல 'ஷவர்பாத்'களுடன் கூடிய மறைவிடம் குளியலறையாகப் பயன்பட்டது. மாலையில் அன்றைய வேலைகள் முடிந்ததும் தொழிலாளர் அழுக்குப் போக நீராடி விட்டுக் காக்கி உடைகளுக்குப் பதில் காலையில் ஃபாக்டரிக்கு வரும்போது அணிந்திருந்த உடைகளை மீண்டும் தரிப்பார்கள். பின்னர், விசாலமான அந்தக் கூடத்துக்குப் போய் அவரவர் விருப்பம் போல் பொழுதைப் போக்குவார்கள். தினசரி வாரப் பத்திரிகைகளும், புத்தகங்களும் அங்கு வேண்டிய அளவு இருந்தன. டேபிள் டென்னிஸ், கேரம், செஸ், சீட்டாட்டம் போன்ற விளையாட்டுக்களுக்கான வசதிகள் செய்து தரப்பட்டிருந்தன. அங்கே அவர்கள் ஆடலாம், பாடலாம், நாடகங்கள்கூட அரங்கேற்றலாம்! இவற்றைத் தவிர தரமான தர்க்கங்களையும் வளர்க்க உதவினான், தங்கப்பன்.

அன்றைய தினசரியைப் படிப்பதுபோல் பக்கங்களைப் புரட்டியபடி தங்கப்பன் தானாகவே விவாதத்தைத் தொடங்கி வைப்பான். ''சேச்சே! இந்த உலகிலிருந்து இன்னும் நிறத் துவேஷம் ஒழியவில்லையே! ஒருவன் கறுப்பாக இருக்கிறான் என்பதாலேயே அவன் தாழ்ந்தவன் என்கிற எண்ணத்தை வளர்த்து அவனை ஒதுக்கி வைத்துப் பலவிதங்களிலும் இழிவுபடுத்துவது எவ்வளவு கொடுமை!'' என்பான்.

இதைக் கேட்டுக் கொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் ராமசாமி, ''ஆமாங்க, எத்தனையோ நாகரிக முன்னேற்றம் அடைந்த நாடு என்று பெயர் பெற்ற அமெரிக்காவிலேயே இப்படியெல்லாம் நடக்கலாமுங்களா?'' என்பான்.

அவனோடு சேர்ந்து இன்னும் இரண்டு பேர்களும் கண்டனக் குரல் எழுப்புவார்கள்.

அப்போது தங்கப்பன் இடையில் புகுந்து, ''அமெரிக்க மக்களைக் குறை கூற நமக்கென்ன அருகதை இருக்கிறது? அதைவிடப் பயங்கரமான தீண்டாமை நிலவிய நாடில்லையா இது? அதை ஒழித்துக் கட்ட ஒரு காந்தி தோன்றினார் இங்கே. அமெரிக்காவிலும் மார்டின் லூதர் கிங் போன்ற பலர் அண்ணலின் அடிச்சுவட்டைப் பின்பற்றித்தான் அன்பு வழியிலே அமைதியான வகையிலே நீக்ரோக்களுக்குச் சகலத்திலும் சம உரிமை வழங்கப்பட வேண்டுமென்று போராடி வருகிறாங்க. கென்னடியும் ஜான்ஸனும் அமெரிக்க நீக்ரோக்களுக்கு எத்தனையோ செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கும் காந்தி வாழ்ந்த இந்த நாட்டிலே நாம் கட்சிக் கொள்கை, அபேட்சகர் தகுதி எல்லாவற்றையும் விட்டு ஜாதி, மதம், மொழி, ராஜ்யம் போன்ற குறுகிய அடிப்படையிலேதானே, தேர்தல்களை நடத்துகிறோம். இதெல்லாவற்றையும் விடக் கேவலமான பணமல்லவா தேர்தலில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்குது?'' என்பான்.

''நீங்க என்னங்க, இரண்டு பக்கத்துக்கும் சாதகமாப் பேசறீங்களே?'' என்பான் மருதமுத்து.

''காரணத்தோடுதான்'' என்று சிரித்துக் கொண்டே பதிலளிப்பான் தங்கப்பன். ''எந்தப் பிரச்னையையும் இரு பக்கங்களையும் அனுதாபத்துடன் சீர்தூக்கிப் பார்த்து ஆராய வேண்டும். பிறகு நியாயம் என்று மனச்சாட்சிப்படி நமக்குப் படுகிறதை ஒப்புக்கொண்டு அந்த முடிவிலே உறுதியாக நிற்க வேண்டும். இந்தப் பண்பை இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருத்தரும் வளர்த்துக் கொண்டால்தான் ஜனநாயகம் தழைக்கும்!''

''இந்த ஒரு ஃபாக்டரியைச் சேர்ந்த நூற்றி இரண்டு ஊழியர்கள் இப்படி ஜனநாயகப் பண்பை வளர்த்துக்கிட்டால் போதுமா ஸார்? நாட்டையே சீர்திருத்திவிட முடியுமா?''

''உடனடியாக முடியாதுதான். ஆனால் ஆரம்பம் என்று எங்கேயாவது ஏற்படுத்தானே ஆக வேண்டும்? 'என்னுடைய இந்தச் சின்னத் தொழிலகத்தால்தான் நாட்டில் செல்வம் கொழித்துவிடப் போகிறதாக்கும்' என்று நான் சும்மா இருந்திருந்தால் நீ குறிப்பிட்ட அந்த நூற்றி இரண்டு பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டியிருக்குமா? அப்படியே ஒவ்வொருவரும் 'நம்மால்தான் தேசம் முன்னேறிவிடப் போகிறதா?' என்று பேசாமல் இருந்து விட்டால் தேசத்தின் கதி என்ன ஆவது? நம் கடமையை நாம் செய்துகொண்டு போனால் பிறரும் தன்னால் நம்மைப் பின்பற்றுவார்கள்!''

மற்றொரு சமயம், ''பத்திரிகையில் லஞ்ச ஊழல் பற்றிச் செய்தி வராத நாளே இராது போலிருக்கிறது'' என்று அலுத்துக் கொண்டான் வெல்டர் காசிலிங்கம்.

"குற்றம் உன்னுடையது" என்றான் தங்கப்பன். காசிலிங்கத்தைப் போலவே திகைத்துத் தன்னைச் சுற்றிச் சூழ்ந்து நின்ற மற்றும் பலரிடம் தங்கப்பன் தன் கருத்தை மேலும் விவரித்தான். "ஒருவன் கன்னம் வைத்துத் திருடினால் அவனைத் திருடன் என்று கூறிக் கடுமையாகத் தண்டிக்கலாம். ஆனால் ஒருவன் திருட வசதியாகச் சாவியை வைத்து விட்டுச் சென்றால் அவனைத் திருடனாக்கிய குற்றம் உன்னுடையது. எளிதாகக் கவரலாம் என்ற எண்ணத்தை, ஆசையை அவனிடத்தில் தோற்றுவித்தது உன்னுடைய அசிரத்தைதான். அதனால் அவனைப் போலவே நீயும் ஓரளவுக்குக் குற்றவாளிதான். அதே போல் மக்களின் அசிரத்தை காரணமாகத் தான் ஜனநாயகத் தலைமையிலும் சூதும் வாதும் லஞ்சமும் ஊழலும் பெருகுகின்றன. மக்கள் விழிப்புடன் இருந்தாலே தலைமையும் ஒழுங்காகச் செயல்படும்."

இவ்வாறாகச் சுவையான சர்ச்சைகளும் பொழுதுபோக்கான விளையாட்டுக்களுமாக நடந்து கொண்டிருந்தது சங்கம்.

தங்களில் ஒருவனாகத் தங்கப்பன் பழகுகிற விதத்தையும் அவனது இனிய சுபாவத்தையும் அதே சமயத்தில் வேலை வாங்குவதிலே அவன் காண்பிக்கிற கண்டிப்பையும் புகழாத தொழிலாளி இல்லை.

"தொழிலகத்தைத் தொடங்கியதற்கான அத்தனை பாராட்டுக்களையும் நற்பெயரையும் தீனதயாளு தாமே தட்டிக்கொண்டு போய் விடுவார் என்றீங்களே, இப்போது உங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்கிறீங்களா? என்னிடம் சம்பளம் பெறுவோர் என்னை வாழ்த்துகிறார்கள். வேறு என்ன வேண்டும் எனக்கு?" என்று பெருமிதத்துடன் தங்கப்பன் மாருதியிடம் கேட்பான்.


ஆனால் சில மாதங்களுக்குப் பின், தங்கப்பன் தேர்தலில் நிற்கப் போவதாக முடிவாகத் தீர்மானித்த சில தினங்களுக்கெல்லாம் இலேசான சலசலப்பு தொழிலாளர்களிடையே தோன்ற ஆரம்பித்தது. எத்தனையோ குடும்பங்களுக்கு வாழ்வளித்தவன் என்று பெயர் பெற்ற தங்கப்பனை முதலாளி வர்க்கத்தினன் என்றும் பண மூட்டை என்றும் அதிருப்தியுடன் இடித்துக் காட்டி முணுமுணுக்க ஆரம்பித்தார்கள் ஒரு சிலர். அவனிடம் நேரடியாக அவ்விதம் சொல்லவில்லைதான். அவன் பெயரையும் அவர்கள் இழுக்கவில்லைதான். எனினும் கண்ணுக்குத் தென்படாத ஒரு புகைமூட்டம் போல் அந்தக் குமுறலைத் தங்கப்பனால் உணர முடிந்தது. அவன் காதில் விழுகிற மாதிரி அவர்களில் சிலர் மறைமுகமாகப் பிறரிடம் அவனைப் பழித்துக் கூறினார்கள். சங்கத்தின் கூடத்தில் பேச்சுச் சுதந்திரத்துக்குத் தாராளமாக வழி வகுத்துத் தந்திருந்த அவனால் இதற்குச் 'சட்'டென்று ஒரு முற்றுப்புள்ளி வைக்கவும் முடியவில்லை. "எங்கு நோக்கினும் தொழிலாளர் சமூகத்துக்கு அநீதிதான், அண்ணே!" என்றான் சாத்தப்பன். "பசுத் தோல் போர்த்திக்கிட்ட புலி போல் சில முதலாளிங்க வேஷம் போடுவாங்க. கொஞ்சம் ஏமாந்தால் போதும், ஏழைங்க வயத்திலே அடிச்சு இவங்க மாடி மேலே மாடியா கட்டிக்கிட்டுப் போவாங்க. தொழிலாளிங்ககிட்டே அன்பொழுகப் பேசறதும் உங்களுக்கு ஒரு யூனியனை நானே முன்னின்று ஆரம்பிச்சுத் தரேன் என்கிறதும் எல்லாம் வெறும் பசப்புக்காக!"

தங்கப்பனுக்குத் தன் தகப்பனார் இறப்பதற்கு ஐந்து வருஷங்களுக்கு முன் கட்டிய வீட்டைத் தான் இப்போது பழுது பார்த்துப் புதுப்பித்து வருவதும் மாடியில் ஓலைக் கூரையும் தட்டிச் சுவருமாயிருந்த தனது தனி அறையைச் செங்கல் சிமிண்டு காங்கிரீட்டால் உரு



வாக்கி வருவதும் நினைவு வந்தன. அவனுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது.

"கொடுத்தது போதாதென்று வீட்டைச் சேர்க்க ஆகும் செலவுத் தொகையையும் இன்னும் ஒரு மாத போனஸாக இவர்களுக்குப் பிரித்துத் தந்துவிட வேண்டும் என்று கருதுகிறார்களா? பத்தாயிரம் ரூபாய் அதற்காக எனக்குச் செலவாகிறதென்றும் தொழிலகத்தில் உள்ள இயந்திரங்களையெல்லாம் அடமானம் வைத்துப் பத்துச் சதவீத வட்டியில் இருபதாயிரம் ரூபாய் நான் கடன் எழுப்பி யிருப்பது இவர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது? கண்ணெதிரில் தென்படுவதை மட்டும்தான் இவர்கள் பார்க்கிறார்கள்" என்று மாருதியிடம் விசனத்துடன் குறைப்பட்டுக் கொண்டான் தங்கப்பன். "எனக்கு எதுவுமே விளங்கவில்லை, ஸார்! முதலாளி — தொழிலாளி என்ற பிரிவினை மனப்பான்மை யெல்லாம் நம்ம தொழிலகத்தில் யார் மனத்திலும் எட்டிப் பார்க்கக் கூடாது என்பதற்காக நான் எவ்வளவு பாடுபட்டேன்? உண்மையான அன்புடன் சகோதர



பாவத்துடன் அவர்களிடம் நான் நடந்து கொண்டது இதற்காகத்தானா? தொழிலகத்தை மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்பதற்காக இரண்டு இயந்திரங்களைத் தருவித்திருப்பது இவர்கள் கண்களை உறுத்துகிறதா?"

"தம்பி! உன் புகழ் பரவுவதை விரும்பாதவங்க செய்கிற காரியம் இது" என்று விளக்கம் கொடுத்தார் மாருதி. "இந்த நாளிலே யோக்கியமாகத் தொழில் செய்பவனைக் கூட சுயநலவாதி, பண மூட்டை என்று ஏசிப்புடறதும் மக்களை அப்படி நம்ப வைக்கிறதும் எளிதாயிருக்கு. அவனது அறிவாற்றல், உழைப்பு, செல்வத்தை முதலீடு செய்வதிலே அவன் காட்டிய துணிச்சல், நாட்டின் தொழில் வளம், பொருளாதாரம் சிறக்க அவன் ஆற்றுகிற பங்கு, எடுத்துக் கொள்கிற

பிரயாசை ஆகிய அவற்றையெல்லாம் எவன் கேட்கிறான்? அவன் லாபம் என்கிற பெயரிலே காண்கிறானே பணம்; அதுதான் பெரிசு படுத்தப்படுது. லாபம் என்கிற அந்தச் சொல்லே ஏதோ சமூக விரோதச் செயலைக் குறிக்கிற வார்த்தையாக மாறிடுச்சே!''

''நீங்க சொல்கிறதைப் பார்த்தால் யாரோ வெளி ஆளுங்க இப்படியெல்லாம் இவங்களைப் பேசத் தூண்டினமாதிரி தோணுதே?''

''தோணுகிறது என்ன தம்பி? அதுதான் உண்மை! தேர்தலுக்கு நிற்கப் போவதாக நீ அறிவிச்ச தினத்திலேயிருந்து தினம் இரண்டு பேர் — நம்ம ஃபாக்டரியைச் சேர்ந்தவங்க— தினதயாளு வீட்டுக்குப் போய் வராங்க. அவங்க யாரு, அங்கே யாரைப் பார்த்துப் பேசறாங்க என்கிற விவரமும் எனக்குத் தெரியும். ஆனால் அதை நான் சொல்கிறது நல்லா இராது!''

''சொல்லவே வேணும். முருகேசன் மாமாவும் உஷாவும் கூடிப்பேசுவதை இரண்டு தடவைகளில் நேரில் பார்த்த பிறகும் இப்படி நடக்கும் என்கிறதை முன்னாலேயே கணிக்காமல் போனது என்னுடைய முட்டாள்தனம்! இது தெரியாமெ, பாவம், என் தொழிலாளர்கள் பேரிலே வருத்தப்பட்டேனே! தினதயாளுவும் அவர் மகளும் இதில் நேரடியாகச் சம்பந்தப்படாவிட்டால்தான் என்ன? மந்திரியின் இல்லத்தில் வைத்து— அது தோட்டத்தில்தானென்றாலும் — என் மாமா மிரட்டினால் அவர்களுக்குப் பயமாக இராதா? 'சொன்னபடி கேட்டு விடலாம், நமக்கேன் வம்பு?' என்று யார்தான் நினைக்க மாட்டார்கள்?''

''தம்பி! அப்படிப் பயந்துக்கிட்டு மட்டும் செய்த காரியமா எனக்குத் தெரியவில்லே. நான் குறிப்பிட்ட அந்த ரெண்டு பேருக்குப் பணம் பரிமாறப்பட்டிருப்பதாயும் நினைக்கிறேன், இந்த மாதிரி விஷமப் பிரசாரம் செய்வதற்குக் கூலியாக.''

''அடடா! யார் அவங்க? சொல்லுங்க, இப்பவே சீட்டுக் கிழிச்சுப்பிடுவோம்!''

''அவசரப்படாதே, தம்பி! நம்மாலே எதையும் நிரூபிக்க முடியாது! காரணமின்றி இரண்டு தொழிலாளிகளை வேலையை விட்டு அனுப்பிச்சதா பழி சுமத்துவாங்க. அப்புறம் லேபர் கோர்ட், ஸ்ட்ரைக், அது இதுன்னு விவகாரம் வளர்ந்துக்கிட்டே போகும். எதிராளிங்க விரும்பறதும் அதைத்தான். தேர்தல் சமயத்திலே இந்த மாதிரி தகராறு தோன்றினால் ரொம்பச் சுலபமா உன்னைக் கெட்ட பேர் வந்து சூழ்ந்துக்கிடும். நீ வெற்றி பெறவே முடியாது!''

''அதுக்காக நேர்மையில்லாதவங்களை, நான் சம்பளம் கொடுத்து வேலைக்கு வைச்சுக்கிட்டிருக்கிறதா?''

''தம்பி! உன் நலனைக் கருதியே அந்தப் பெயர்களை நான் இப்போ வெளியிடுவதாக இல்லே. சும்மா என்னைத் தொந்தரவு பண்ணாதே'' என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் மாருதி.

ஆனால் அவர் எதைத் தவிர்க்கத் திட்டம் போட்டாரோ, அதுவே நடக்க எதிர்த்தரப்பினரும் திட்டம் வகுத்ததாகத் தெரிந்தது.

'பீட்டர்' பக்கிரிசாமி தன் வேலையை ஒழுங்காகச் செய்யாமல் அநாவசியமாகத் தாமதப்படுத்துவதை இன்ஜினியர் சுகுமாரன் மூலம் அறிந்தான் தங்கப்பன். விடுவிடுவென்று அவனருகில் சென்று, ''நான் வேலை வாங்குவதில் கண்டிப்பான ஆசாமி என்கிறது உனக்குத் தெரியுமில்லே? தொழிற்சாலைக்கு வெளியே உன் தோள்மேலே கையைப் போட்டுக்கிட்டுப் போக நான் தயாராக இருக்கிறேன்! ஆனால் இந்தக் காம்பவுண்டுக்குள்ளே நுழைஞ்சதுக்கப்புறம் காரியமெல்லாம் கறாரா நடக்கணும்!''

''கச்சிதமாப் பேசிட்டீங்க'' என்றான் பக்கிரிசாமி. ''ஸ்பானரைக் கையிலே பிடிச்சுப் பார்த்தா தெரியும் இதிலே இருக்கிற கஷ்டம். ஃபேனுக்கு அடியிலே ஹாய்யா உட்கார்ந்துகிட்டுக் கணக்கு எழுதற சமாசாரமா இது?''

தங்கப்பன் பொங்கி எழுந்தான். ''சுகுமாரன்! ஆபீஸ் அறைக்கு வாங்க. இவனை டிஸ்மிஸ் பண்ணி ஆர்டர் டைப் செய்து தரேன்'' என்று கூறிவிட்டு நடந்தான் வெகு வேகமாக.

மாருதி விஷயமறிந்ததும் பதைபதைத்தார். ''தம்பி! கொஞ்சம் நிதானம் காட்டியிருக்கக் கூடாதா?'' என்று அங்கலாய்த்தார்.

''நீங்க இதிலே தலையிடாதீங்க'' என்று அவர் மீதும் பாய்ந்தான் தங்கப்பன்.

''வெள்ளம் தலைக்கு மேலேயே போயிடுச்சே, அப்புறம் தலையிட்டுப் பிரயோசனம் தான் என்ன?'' என்றார் அவர். ''இனிமேல் நீ பின்வாங்கவும் முடியாது. மரியாதை கெட்டுப் போகும். முன்னேறினால் மேலே மேலே பல சிக்கல்கள்தான்; உனக்கு அபக்கியாதிதான்!''

''உலகமே தூற்றட்டுமே! எனக்குக் கவலை இல்லே. எனக்கு ஒழுக்கம்தான் முக்கியம்'' என்றான் தங்கப்பன்.

மாருதி நீண்ட பெருமூச்சுடன் இடிந்து போய் உட்கார்ந்து விட்டார்.

அன்று மாலை தொழிலாளர் சங்கத்தின் கூட்டத்துள் தங்கப்பன் நுழைய முற்பட்ட போது, ''முதலாளிகிட்டே பணிவா தெரிவிக்கக்கிடறது என்னவென்றால் யூனியன் மீட்டிங் நடக்குது; இதில் நீங்கள் சம்பந்தப்படாமல் வெளியே இருந்துக்கிடறதே நல்லது'' என்று வெல்டர் காசிலிங்கம் கூறினான்.

'தான் உருவாக்கித் தந்த கூடத்தினுள் நுழையத் தனக்கே தடை விதிக்கிறார்களா?' என்று தங்கப்பனால் மனத்துக்குள் பொருமாமல் இருக்க முடியவில்லை. எனினும், அவர்கள் கோரிக்கையிலும் நியாயம் இருப்பதை உணர்ந்து அவன் சொன்னான்: ''காசி! உங்கள் கூட்டம் முடிந்த பிறகு உங்கள் அனைவரிடத்திலும் நான் பத்து நிமிஷங்கள் பேச வேண்டும். ஆபீஸ் அறையில் நான் காத்திருக்கிறேன்!''

தங்கப்பன் திரும்பி நடந்தான். இத்தனை நாட்களாக இல்லாத ஒரு தளர்ச்சி அவன் நடையில் இன்று காணப்படுவதாகக் காசிலிங்கத்துக்குத் தோன்றியது. **(தொடரும்)**



என்ன பிறப்போ? என்ன வாழ்வோ?

நெஞ்சில் குமுறிய உணர்வு அழுப்பின் இதழை இறுக்கிப் பறித்தது. பாலா சுரந்தது? கண்ணீர் வடிந்தது. சீ, சீ! பெண்ணாக எப்படியும் பிறந்துவிடலாம்; ஆணாக—அதிலும் தலைமகனாகப் பிறப்பதைவிட ஒரு பாவம் வேறெதுவுமே இல்லை.

ஏன் பிறந்தோமோ? எதற்காகத்தான் வாழ்கிறோமோ என்று அவனுடைய துயரம் கவிந்த நெஞ்சம் ஆயிரமாயிரம் முறை முனகிக் கொண்டது. உடன் பிறந்தவர்கள் இரண்டு தம்பிகள். தம்பிகளா அவர்கள்? தம்பியுடையோன் படைக்கஞ்சானாம்! பித்துக் குளிப் பேச்சு! ஒரு தங்கையும் இருந்தாள்! சூர்ப்பனகையும், தாடகையும் எவ்வளவோ நல்லவர்களாகி விட்டனர்! அவளால் வந்த வினைதானே குடும்பத்தையே பிளவு காணச் செய்து விட்டது! ஏழைமை நிறைந்த குடும்பத்தில் பெண்ணெடுக்கக் கூடாதா? அப்படி எடுத்தது ஒரு பாவமாம்! குற்றமாம்! சபேசனின் உடன்பிறந்தவர்கள் மட்டுமல்லாமல், பெற்ற வயிறே இப்படிப் பேசத் தொடங்கியது. வீட்டுக்கு அடங்கி நடக்கமாட்டாளாம். அவர்களுடைய அறியாமை நெஞ்சம் அலறியது. உண்மையில் சிவகாமி ஓர் உத்தமி. அழகு, பதவிசு, உயர்வான குடும்ப கம்பீரம் அனைத்தும் அவளிடம் பழுதில்லாமல் இடம் பெற்றிருந்தன. சபேசன் இவற்றைப் பூரணமாக அறிவான். அவனறிந்து என்ன பயன்?

இந்தச் சச்சரவுகளால் தனிக்குடித்தனம் பெயர்ந்து ஐந்தாண்டுகள் ஆயிற்று. இன்னும் அவர்கள் தெளிய வேண்டுமே! எல்லாவற்றுக்கும் பெற்ற தகப்பன் சரியாக இல்லையே! அவர் மட்டும் சம்பாத்தியத்தை ஊதாரித்தனமாகத் தனிக்காட்டு ராஜா மாதிரி செலவழிப்பதும் எங்கோ தங்குவதும், எப்படியோ வாழ்வதுமாக இல்லாதிருந்தால்....?

தலையெழுத்து சரியாக இருந்தால்தானே தலைவிதி சரியாக இருப்பதற்கு?

அன்று அபூர்வமாக அம்மா வந்திருந்தாள். தனக்கென்று ஏதேனும் காரியம் ஆக வேண்டியிருந்தால் அப்படி வருவது வழக்கம்.

அம்மா வரும்போது எப்போதும்போலவே பேசாமலிருந்தான் சபேசன். சிவகாமிதான் கண்கள் மலர, அகம் குளிர, வாய் மணக்க, "வாங்க, மாமி!" என்று வரவேற்புக் கொடுத்தாள். எல்லாரையுமாக ஒரு நோட்டம் விட்டுக்கொண்டே முகட்டு முகத்துடன் வாசற்படியில் தாழ்வாரில் கையூன்றியவண்ணம் அம்மா அமர்ந்தாள். மங்களம்தான் என்ற பெயருக்கேற்ப மஞ்சள் குங்குமம் அவளுடைய முகத்தில் பழுக்கப் பழுக்கத் துலங்கின. இதற்குள் பள்ளியிலிருந்து திரும்பிய பேரப் பிள்ளைகள், "பாட்டி, பாட்டி" என்று சூழ்ந்து கொண்டன. கொஞ்சமேனும் அந்தம்மாளுக்குப் பாசம் இருக்க வேண்டுமே!

சபேசனுக்கு நெஞ்சு குமைந்தது: ஆனாலும் அடக்கிக்கொண்டான். பெண் வயிற்றுப் பிள்ளைகள் எத்தனை அசிங்கமானாலும் எடுத்துக் கொஞ்சும் இந்த அம்மாளுக்கு மாணிக்கம் போன்ற பிள்ளைகள் மனத்தைக் கவரவில்லை போலும்!

"சாப்பிடுகிறீர்களா, மாமி?" சிவகாமி முறைமைக்காக அல்லாமல் முழுமனத்துடனேயே கேட்டாள்.

"ம்.... அதுதான் வாழுது! சாப்பிட்டு முடிச்சாச்சு!"

அம்மாளின் பதில். எத்தனை வருமானமிருந்தும் தன்னைக் காப்பாற்றவில்லையே, தனக்குச் சோறு போடவில்லையே என்று ஊர் முழுவதும் தம்பட்டமடித்துப் பெயரைக் கெடுத்துக் கொண்டு திரியும் அம்மாவாயிற்றே! ஆறுபிள்ளைகளை வைத்துக் காப்பாற்றும் அவனால் அந்த ஜீவனின் வயிற்றைத் தானா நிரப்ப முடியாது? மங்களம்மாளின் திட்டங்களுக்குப் பணிய முடியவில்லை. எல்லாருக்குமாகச் சோறு போட வேண்டுமாம்! இது முடிகிற காரியமா? அதுவும் விஷமிகளுக்கு....!

"என்ன மாமி, விசேஷம்?"

"விசேஷமிருந்தால்தான் உங்கள் வீட்டுக்கு வர வேண்டுமோ? எனக்கு உரிமை உண்டு; எப்போது வேண்டுமானாலும் வருவேன்! இதைக் கேட்க நீ யார்?"

சிவகாமி அரண்டு விட்டாள். சபேசன் அப்போதும் பொறுமையை இழக்கவில்லை. சிவகாமி சொன்னாள்: "நிறைய உரிமை உண்டு மாமி! நான், அதைப் பறிக்கவில்லையே! இது உங்கள் பிள்ளை வீடு! திடீரென்று வருகை தரவே கேட்டேன்."

"ஓ...... அதுவா? நாளைக்கு ஒரு கலியாணம். உன் பட்டுப் புடவை — அதுவும் நிச்சயதார்த்தத்துக்கு வைத்த புடவை தேவை. எடுத்துக் கொடு.'' மங்களம்மாளின் குரலில் அதிகாரம் தொனித்தது.

''மாமி! உங்களுக்குத் தெரியும். தெரிந்தும் புடவையைக் கேட்கிறீர்களே! அதுவும் பரிசப் புடவையை!''

''அதனுலென்ன? கொடுத்தால் உனக்குக் குறைந்தா போய்விடும்?''

''அதற்குச் சொல்லவில்லே, மாமி! ஒருவர் கட்டிய புடவையை இன்னொருவர் கட்டக்கூடாது என்பது அவருடைய கொள்கை.''

''வாஸ்தவம்தான்; பெற்ற தாய்க்குக்கூடவா?''

சிவகாமி விழித்தாள். பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு சபேசன் தலையில் விழுந்து விட்டது. அவன் கேட்டான்:

''ஏம்மா! உங்கள் அருமை மகள் புடவையை வாங்கித் தானே இதுவரை கட்டி வந்தீர்கள்? இப்போது என்ன வந்து விட்டது? தங்கையம்மாள் தர மறுத்துவிட்டாளா?''

''டேய், சபேசா! அவளேப் பற்றி நீ பேசாதே! அவள் ஒருத்தி இருப்பதுதான் உனக்குப் பிடிக்கவில்லேயே!''

''நான் இருப்பதும் நடமாடுவதும் அவளுக்குப் பிடிக்காமல்தான் இந்தச் சில்லறைத் தூண்டுதல்களைச் செய்து வருகிறுளே! என் பெண்டாட்டி பளிச்சென்று இருப்பது அவளுடைய கண்ணுக்குக் கசப்பாக இருக்கிறது!''

''வீண் பேச்சுப் போதும்டா! பட்டுப் புடவை அவசியமாக வேண்டும்!''

''அம்மா! என் கொள்கையை உடைக்க வேண்டும் என்றே கங்கணம் கட்டிக்கொண்டு வந்தாற்போலத் தெரிகிறது. நான் என் கொள்கையை மாற்றிக் கொள்ள முடியாதம்மா! வேண்டுமானுல் என்னுடன் வாருங்கள். வேறு பட்டுப் புடவையை விலே கொடுத்து வாங்கித் தருகிறேன்!''

''ஓ...இவன் பணத்தில் மிதந்தவன்; இதை என்னிடமே காட்டுகிறுயா? ஏண்டா சபேசா! நாங்கள் எல்லாம் தரித்திரம் பிடித்தவர்கள்; உன் பெண்டாட்டி கட்டியதைக் கொடுத்தால் தரித்திரம் ஒட்டிக்கொள்ளும் என்று தலேகாணி மந்திரம் ஓதிவிட்டாள்; அதைக் கேட்டுக் கொண்டு நீ ஆடுகிறுய்! இந்த வயிற்றில் பிறந்தவன்தாண்டா நீ! உயர்ந்து விட்டதாலோ உயர்வான பெண்டாட்டியைக் கட்டிக்கொண்டதாலோ ஆகிவிடாது!''

''ஐயோ, அம்மா! நீங்கள் நினைப்பது தவறு. இன்னும் சிவகாமியை நீ புரிந்துகொள்ளவில்லே. போகட்டும். இதையாவது புரிந்துகொள். புடவை விஷயம் என் கொள்கை. அது தர முடியாது.''

''தர முடியாது? இந்தப் பெற்ற வயிறு பத்தி எரியுதடா! நீ உருப்படுவியா?''

ஆத்திரமும், ஆவேசமுமாக எழுந்து வெளியேறினுள் மங்களம். கண் கலங்க அப்படியே அமர்ந்துவிட்டான் சபேசன்.

அன்னே இட்ட சாபத் தீ அவனேப் பற்றிக் கொண்டு எரிவது போலத் தோன்றியது. அதை மேலும் எரியச் செய்வது போலச் சற்றைக்கெல்லாம் உள்ளே நுழைந்தாள் தங்கையென்ற உருவில் பிறந்த ராட்சஸி பருவதம். வந்ததும் வராததுமாக அவள் கேட்டாள்: ''அம்மாவை இப்படி அவமானப்படுத்தி அனுப்ப வேண்டுமென்று எத்தனே நாட்களாகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? அண்ணியம்மா உபதேசம் தலேக்கேறி விட்டதா?''

சபேசன் அண்ணாந்து நோக்கினுன். சிவகாமி உள்ளே போய் விட்டாள்.

''பருவதம்! குடும்பத்தில் நூறு கோளாறு இருந்தாலும் அதனேப் பெரிதுபடுத்தாமல் ஒட்டி உறவு செய்ய வேண்டிய நீ. இப்படிப் பிளவு செய்து என்னேச் சித்திரவதையை அனுபவிக்கச் செய்ய எத்தனே நாளாக அம்மா கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறுய்?''



''ஆமாம்; நீங்க ரொம்ப ஒழுங்கு! பெற்றவளுக்குச் சோறு போடவோ, துணி எடுத்துக் கொடுக்கவோ யோக்கியதை இல்லாதவர் என்மீது பழி போடுவதைப் பாரு!''

சபேசன் சினத்தின் உச்சிக்குத் தாவிவிட்டான். அடக்கி வந்த பொறுமை உணர்ச்சி வெடித்துச் சிதறியது.

''இப்போது நீ எங்கே வந்தாய்?''

''உங்கள் வீட்டில் இலே போட்டுச் சாப்பிட வரவில்லே.''

''போடவும் நான் தயாராக இல்லே.''

''அதுதான் தெரியுமே! எங்கம்மா...''

''மூடு வாயை! எங்கம்மா... 'அம்மா' என்ற சொல் உனக்குத்தான் சாசனமா? புருஷனே மதித்து நடக்காத கழுதை நீ! அம்மாவைப் பற்றிப் பேச வந்துவிட்டாய்! வெளியே போ! அம்மாவாம், அம்மா! ஒரே அரக்கி வம்சம்!''

தலையைத் தொங்கப்போட்டுக் கொண்ட பருவதமும் வந்த வழியை நோக்கி நடந்தாள்.

பொழுது சாய்ந்து வெகுநேரம் வரையில் சபேசன் மனம் அமைதி பெருமல் தவித்தது. அந்தக் குடும்பத்துக்குத்தான் அவன் எத்தனை செய்திருக்கிருன்! சின்னத் தம்பி ராஜாவை அவன் படிக்க வைத்தான். ஒரு சமயம் பரீட்சைக்குப் பணமில்லை என்று சிவகாமி தான் போட்டு வந்த கம்மலையே அடகு வைத்திருக்கிருன். அப்பேர்ப்பட்டவன் சில நாட்களுக்கு முன் வளர்த்த கடா மார்பில் பாய்வது போல, சின்ன விஷயமொன்றுக்கு அக்காள் பேச்சைக் கேட்டுக் கொண்டு அண்ணியைக் கன்னபின்னவென்று பேசி விட்டான்.

நினைக்க நினைக்கச் சபேசனின் நெஞ்சு வெந்தது.

இனியும் தஞ்சாவூரில் வாழ அவன் விரும்பவில்லை. இவர்கள் முன்னிலையில் இருப்பதை விடச் சென்னைக்கு மாற்றலாகிப் போய்விட எண்ணினுன். இவனுடைய நிலையுணர்ந்த உயிர் நண்பர் சென்னையிலிருந்து தஞ்சாவூர்த் தபால் நிலையத்துக்கு மாற்றலாகித் தம் சென்னைப் பீடத்தைச் சபேசனுக்கு அளித்தார். அவரது அந்தத் தியாகம் பாராட்டுக்குரியது. உயிர் காப்பார் தோழரல்லவா?

சென்னைமா நகரம் பல விதத்தில் பிடித்திருந்தும், வாழ்வில் நிம்மதியே இல்லாமல் போய்விட்டது சபேசனுக்கு. இரண்டாண்டு காலமாக அவன் படாத தொல்லைகளைப் பட்டு விட்டான். எல்லாம் அன்னை இட்ட சாபம் என்றே அவனுக்குப் பட்டது.

இத்தனைக்கும் அவன் எந்த விதமான துரோகமும் மனமறிந்து செய்யவில்லையே! மூன்று மாதங்களுக்கு முன் சின்னவன் ராஜாவுக்குத் திருமணமாயிற்றும். சபேசனைத் தவிர்த்தே செய்தார்கள். அதற்காக அவன் எப்படியெல்லாம் வருத்தப்பட்டான்! கேள்விப்பட்ட அன்றைய தினமே மனைவியுடன் மயிலைக் கபாலீசுவரர் கோயிலுக்குச் சென்று தம்பியின் பெயரால் அர்ச்சனை செய்தான்.

அலுவலகத்தில் ஒரு பழுத்த கிழவர் அவன் பக்கத்தில் வேலை பார்த்து வந்தார். குருசாமி ஐயர் என்பது அவருடைய பெயர். அவருக்குச் சபேசனை மிகவும் பிடித்திருந்தது.

எப்போது பார்த்தாலும் எதையோ பறி கொடுத்தவனைப் போலக் காணப்பட்ட அவனை விசாரிக்கத் தொடங்கினுர். அவனும் கொஞ்சமும் மறைக்காமல் தன் வாழ்க்கைப் பரிதாபங்களைச் சொன்னுன்.

சபேசனுடைய வாழ்க்கை வரலாறு பரிதாபத்துக்குரிய ஒன்றுகத்தான் இருந்தது. பெற்ற மகனுக்குச் சாபம் கொடுக்கும் அன்னையும் இருக்கிருள் என்பதை அப்போதுதான் தெரிந்து கொண்டார் அந்த அனுபவ புருஷரான குருசாமி அய்யர்.

"சபேசா! நீ சொல்லி வந்ததெல்லாம் கேட்கக் கேட்க வேதனையாகத்தான் இருக்கிறது. ஆனுலும் நீ புடவையைக் கொடுக்க ஏன் மறுக்க வேண்டும்? அதனுல் என்ன வந்து விடும் என்று நீ நினைத்தாய்?"

"நீங்கள் பெரியவர். உங்களிடம் சொல்வதற்கென்ன சார்! என்ன இருந்தாலும் என் மனைவி கட்டிய புடவை அது. ஆடை என்பதே மாக படிந்த ஒன்று. அதிலும் பெண் — என்ளுேடு இரண்டறக் கலந்த என் மனைவி கட்டிய புடவை இது. தாயின் உடலில் இந்த ஆடை ஏறுவது என் மனத்துக்கு ஒப்பவில்லை. ஒரு தாய் கட்டிய புடவையை மருமகள் கட்டலாம். ஒரு மகள் கட்டிய புடவையைத் தாய் கட்டுவது நல்ல பண்புள்ள மரபுக்குச் சரியாகத் தெரியவில்லை. என் அம்மாவோ, ஒருவஞேடு வாழும் மகள் கட்டிய புடவையையே கட்டுவார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்குப் புடவை தந்து என் மனைவியின் புனிதத்தையும் கெடுக்கச் சம்மதிக்கவில்லை, இதுதான் என் கொள்கை." குருசாமி ஐயர் வியந்தேபோனுர்.

சபேசனின் உயர்ந்த பண்பை அவர் பெரிதாக நினைத்து மகிழ்ந்து போனுர். "சபேசா! என் வீட்டுக்குப் பக்கத்தில் ஒருபெரியவர் இருக்கிறர். நல்ல ஜோதிடர். அவரிடம் உன் தாய்க்கான சாபத்துக்குப் பரிகாரம் உண்டா என்று கேட்கிறேன். அப்படி ஏதேனும் அவர் சொன்னுல் அதன்படி நீ செய்து பார்!"

"ஆகட்டும் சார்! அப்படியே நான் செய்கிறேன்!" என்ருன் சபேசன்.

வெள்ளிக்கிழமை சுமங்கலியாகப் புலர்ந்தது. அன்று அலுவலகத்துக்கு விடுமுறை போட்டுவிட்டான் சபேசன். அன்னையிட்ட சாபத்துக்கான ஒரு சாங்கியத்தை — குருசாமி ஐயர் ஏற்பாட்டின்படி. அந்தக் கிழச் சோதிடர் சொன்ன சாங்கியத்தைத் தானே முன்நின்று செய்யவே அவன் விடுமுறை எடுத்திருந்தான்.

''ஆமாம்; வெறும் நூல் புடவையே போதுமென்றுதானே சோதிடர் சொன்னார். நீங்கள் பட்டுப் புடவையே எடுத்து வந்திருக்கிறீர்களே! வீண் செலவுதானே?''

''சிவகாமி! செய்யும் செலவைக் கொஞ்சம் கூடுதலாகச் செய்கிறேன். அவ்வளவுதான்; அம்மாவின் சாபம் பூரணமாகத் தணியட்டுமே என்றுதான்!''

''சோதிடர் சொன்னது போல, நாம் பூசை முடித்ததும் ஒரு பழுத்த சுமங்கலிப் பெண் நம் வீட்டைத் தேடி வரவேண்டுமே! வந்தால் புண்ணியம்தான். வயிறார உணவு படைத்து, புடவையைத் தானம் கொடுத்து அனுப்பலாம்!''

''கவலைப்படாதே சிவகாமி! நம் தூய நெஞ்சத்துக்குக் கடவுள் பார்த்து யாரை யாவது அனுப்பி வைப்பார்!''

சிவகாமி வேலையில் மும்முரமாக மூழ்கினாள். கடிகாரம் மணி பன்னிரண்டு என்று காட்டியது. அமர்க்களமாகப் பூசைகள் முடிந்தன. உணவு உண்ண வேண்டும். யாரேனும் ஒரு சுமங்கலிப் பெண் வரவேண்டுமே! அவள் அப்படி எதிர்பாராத விதமாக வந்து, உண்டு, புடவை தானம் பெற்றுச் சென்ற பிறகல்லவா இவர்கள் உணவு உண்ண வேண்டும்!

எதிர்பார்த்தது போல எந்தச் சுமங்கலிப் பெண்ணும் வருகை தரவில்லை. மணியோ இரண்டுக்கு மேலாகி விட்டது. மூன்று நாலரை எமகண்டம். ஆகவே இருவரும் மனம் நொந்தவராய் உணவுண்ணத் தொடங்கினர். தெய்வம் இன்னும் சோதிக்கிறது.

இதைப் போலவே இரண்டாம் வெள்ளிக்கிழமையும் அவர்கள் எதிர்பார்த்தனர். இப்படியே ஏமாற்றம். சபேசனும், சிவகாமியும் கண்ணீரில் மிதக்கலாயினர். குருசாமி ஐயர் வந்து எவ்வளவோ அவர்களைத் தேற்றி ஆறுதல் மொழிகளைக் கூறிச் சென்றார். மூன்றும் வெள்ளிக்கிழமை நிச்சயம் ஆண்டவன் அருள் பாலிப்பான் என்றும் அவர் உறுதி கூறினார்.

வழக்கம் போலவே நேரம் கரைந்து கொண்டே வந்தது. எத்தனையோ சுமங்கலிப் பெண்கள் வீட்டுக்கு வருவதும் செல்வதுமாக இருக்கின்றனர். சோதனை போல் வெள்ளிக்கிழமையானால் இப்படி நேர்கிறதே! யாருக்காவது சொல்லி வைத்து இப்படிச் செய்திருக்கலாமோ? அதில் பயனில்லை என்றுதானே சோதிடர் சொல்கிறார்!

''என்னங்க அத்தான்! இந்த வெள்ளிக்கிழமையும் நமக்குச் சோதனைதான்!''

''சிவகாமி! அம்மா...'' சபேசன் சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் அந்த வீட்டு முன் கட்டில் குடியிருக்கும் ஓர் அம்மாள் வந்து: ''உங்களை யாரோ கேட்கிறார்கள்!'' என்றாள்.

ஆனந்தத் துள்ளலுடன் வெளியே சென்று கவனித்த சபேசன், நிலைகுத்திய கண்களுடன் பல கணங்கள் அப்படியே அசையாமல் நின்றுவிட்டான். அவனுடைய அந்த மயக்கம் தெளிய வெகுநேரம் பிடித்தது. தன்னை மறந்தவனாய் ''அம்மா!'' என்று அலறினான். மங்களம்மாள்தான். கிழிசல் உடையும், பசையற்ற பரட்டைத் தலையுமாக வந்து நின்று கொண்டிருந்தாள். ''சபேசா! நான் பாவியடா!''

மங்களம்மாள் கண்ணீர் சொரிந்தாள்.

''இல்லையம்மா! நீங்கள் புண்ணியவதி. உள்ளே வாருங்கள்.''

இதற்குள் சிவகாமி ஓடோடி வந்தாள். அன்று போலவே இன்றும் கண் மலர, அகம் குளிர, வாய் மணக்க, ''வாங்க மாமி!'' என்று அன்புடன் அழைத்தாள்.

மருமகளைக் காணவே நாணமாக இருந்தது மங்களம்மாளுக்கு. ''சிவகாமி! நீ அந்தச் சிவகாமசுந்தரிதான்!''

வீட்டினுள் நுழைந்ததும் நடுவீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இன்னும் யாரும் சாப்பிட்டதாகக் காணோம். ஒரு தட்டில் பட்டுப் புடவையொன்றிருந்தது. மங்களத்துக்கு ஒன்றுமே புரியவில்லை.

''இதெல்லாம் என்னடா சபேசா!''

'உனக்காகத்தானம்மா!''

''எனக்காகவா?''

''எல்லாவற்றையும் பின்னால் சொல்லுகிறேன். முதலில் குளியுங்கள்!''

சபேசனுக்கும், சிவகாமிக்கும் எல்லையிலா மகிழ்ச்சி! எந்தத் தெய்வத்துக்குச் சாங்கியம் செய்ய முனைந்தார்களோ, அந்தத் தெய்வமே அதை ஏற்க வந்துவிட்டதே! பழைய அம்மாவாகக் காணப்படவில்லை. புதிய அனுபவம் பெற்ற அம்மாவாகக் காணப்பட்டாள் மங்களம். உண்மைதானே? கடைப் பிள்ளைக்குக் கட்டிவைத்த மருமகள் கண்ணில் விரலை விட்டு ஆட்டிவிட்டாள். அதனால் எல்லோரும் தனிக் குடித்தனம் நாடிச் சென்றுவிட்டனர். எங்கும் உருப்படியாகத் தங்கிக் காலம் கடத்த முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. மகளாய்ப் பிறந்த அந்த ராட்சசியும் 'தண்டச் சோறு' என்று தெரிய வந்தபோது கண்டும் காணாதவளாய் இருந்துவிட்டாள். மங்களம்மாள் இதயத்தில் இப்போதுதான் 'சிவகாமோதயம்' ஏற்பட்டது. அது சென்னைக்கும் அழைத்து வரச் செய்துவிட்டது.

குளித்து முடித்த மங்களம்மாள் புத்தம் புதிய பட்டுப் புடவையை உடுத்திப் பூரணச் சுமங்கலிக் கோலத்துடன் பூசையை முடித்துக்கொண்டு மகனையும், மருமகளையும் நிறைவாக வாழ்த்தினாள். பிறகு மருமகள் பரிமாற மனமகிழ்வோடு உண்ணத் தொடங்கினாள். பெற்ற வயிறு நிறைய நிறைய இட்ட தீ— சாபம் இருக்கும் இடம் தெரியாமல் அணைந்துகொண்டே — அழிந்துகொண்டே போயிற்று!

அன்னை இட்ட தீயை அவளே அணைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அகமகிழ்ந்தனர் சபேசனும் சிவகாமியும்.


வீட்டுச் சலவையின்
பெருமை
ஸர்ப் சலவையின்
அருமை
Surf
AMAZING BLUE POWDER
FOR THE WHITEST WASH!

வடாம் இட்ட வைபவம்

எஸ். பத்மாவதி



மயிலாப்பூர் 'கென்னடி வடாம் ஸ்டோர்ஸ்' முன்னால் நான் நின்று கொண்டிருந்தபோது தான் சாவித்திரி மாமியின் கார் எனக்கு முன்பு வந்து நின்றது. அதற்குப் பக்கத்துக் கடைதான் 'காந்தி பீடி, பொடிக் கடை'.

காந்திக்கும் பீடிக்கும் எவ்வளவு சம்பந்தமோ அவ்வளவு சம்பந்தம் கென்னடிக்கும் வடாத்துக்கும். இருந்தாலும் 'கென்னடி வடாம்' மிகவும் பிரசித்தமாகி விட்டது.

''யாரும்மா, அகிலாவா? எங்கே இப்படி வெயிலில் கிளம்பினாய்?'' சாவித்திரி மாமி காரில் இருந்தபடியே என்னைப் பார்த்துக் கேட்டாள்.

''வடாம் வாங்கத்தான் இப்படிக் கிளம்பி வந்தேன் மாமி... ஐந்து ரூபாய் ஆயிற்று'' என்று சொல்லி, என் கையிலிருந்த சிறிய பொட்டலத்தை அவளிடம் காண்பித்தேன்.

''என்ன அநியாயம்! ஐந்து ரூபாய்க்கு ஐம்பது வடாம் கூட இருக்காது போலிருக்கிறதே... நன்றாக வடாம் வாங்கினாய்...விலை கொடுத்து! வெயில் வீண் போகாமல் தலை கொதிக்க வடாம் டிப்போவுக்கு வந்தாயே, வீட்டில் உட்கார்ந்து வடாம் பிழிந்து வீணாகும் வெயிலில் போட்டால் ஒரு வருஷத்துக்கு வரும்...'' என்று கூறித் தோள்பட்டையில் முகத்தை இடித்துக் கொண்டாள். பிறகு, ''உம்... உங்களைப் போல் சோம்பேறிகளை நம்பித்தானே இவனும் கடையைத் திறந்திருக்கிறான்...'' என்று சாவித்திரி மாமி நீட்டி முழக்கிச் சொன்னதைக் கேட்டதும் எனக்கு அவமானமாகப் போய்விட்டது.

''என்ன செய்வது மாமி! எனக்கு வடாம் இடத் தெரியாதே!''

''நன்றாக இருக்கிறதடீ... நீ சொல்வது! யார் காதிலாவது விழுந்தால் சிரிக்கப் போகிறார்கள்.... 'காரிகையும் — காஸ் அடுப்பும்' என்று புதிதாக ஒரு புத்தகம் வந்திருக்கே, அதிலே வடாம் செய்வதைப் பற்றி விவரமாகப் போட்டிருக்கிறான்.



ஒரு புத்தகம் வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போய்ப் படித்துப் பார்'' என்று மொழிந்து விட்டு ''விடு டிரைவர்... நேரமாயிற்று'' என்று உத்தரவு கொடுத்தாள்.

நான் உடனே ஆவேசத்துடன் பக்கத்திலிருந்த புத்தகக் கடையில் நுழைந்து ''காரிகையும் — காஸ் அடுப்பும்'' என்ற புத்தகப் பிரதி ஒன்றை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தேன்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு எங்கள் பகுதி லேடீஸ் கிளப்பில் வடாம் இடுவதைப் பற்றிச் சமூக சேவகி மிஸ் அற்புதலோசனியின் பிரசங்கம் நடைபெற்றது. அநாகரிகமாகத் தரையில் ஓலைப் பாயைப் பரப்பி வடாம் பிழிவது சுகாதார விதிகளுக்குப் புறம்பானது என்று வன்மையாகக் கண்டித்த மிஸ் அற்புதலோசனி அவர்கள் எப்படிச் சுகாதார விதிகளுக்கு உட்பட்டு வடாம் இடுவது என்று விவரித்தார். 'டெட்டால்' போட்டுத் துடைத்துச் சுத்தம் செய்த பெரிய டைனிங் டேபிள்களை வெயிலில் போட்டு, பாய்க்குப் பதில்

விரிப்புகளை மேலே பரப்பி, வடாம் பிழிந்து மேலே ஒரு பெரிய கொசு வலையைக் கட்டி, எறும்பு மொய்க்காமல் பார்த்துப் பக்குவமாகச் செய்ய வேண்டும் என்றும், எவ்வளவு டிகிரி உஷ்ணம் இருந்தால் எவ்வளவு நிமிடங்களில் வடாம் ஒரு பக்கம் உலரும், மறுபக்கம் (கைபடாமல் இடுக்கியால் திருப்பிப் போட்டு) உலர எவ்வளவு டிகிரி உஷ்ணம் தேவை என்று புள்ளி விவரங்களுடன் தடுமாற்றமின்றி விவரித்தபோது நான் பிரமிப்புடன் கேட்டுப் பெருமூச்செறிந்தேன்.

ஆனால் இந்த ஏற்பாடுகளைப் பற்றி அருமையான யோசனை சொன்ன மிஸ் அற்புதலோசனி வடாத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்ல மறந்ததைப் பற்றி யாரும் ஞாபகப்படுத்தாதது எனக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

இரண்டு நாட்கள் கழித்து என் பள்ளித் தோழி பரமேசுவரி வீட்டில் குழந்தை ஆண்டு நிறைவு விருந்துச் சாப்பாட்டில் 'வடாம்' பரிமாறப்பட்டபோது, பரமேசுவரி நடுவில் நின்றுகொண்டு, ''வீட்டில் நானே செய்த வடாம்... போட்டுக்கொள்ளுங்கள்... போட்டுக் கொள்ளுங்கள்....'' என்று எல்லோரையும் உபசரித்தபோது பொறுமையினும் என் வயிறு (முன்னமே விருந்து சாப்பிட்டு நிறைந்திருந்ததால்!) வெடித்து விடும்போல் இருந்தது.

அடுத்த நாள் எங்கள் வீட்டுக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொட்டும் பெண் பாதி நாள் வேலைக்கு வரவில்லை.

''என்னடி காரணம்?'' என்று கேட்டதற்கு ''வீட்டில் வடாம் பிழிந்தேன் மாமி!'' என்று அவள் பதில் சொன்னபோது எனக்கு ஆத்திரம் எண்ணெயில் இட்ட வடாம் போலப் பொரிந்தது.

'நானும் வடாம் இட்டேன்' என்று சொல்லிக்கொள்ள வேண்டும் என்ற ஆசை என் மனத்தைத் தீவிரமாக ஆக்கிரமித்தது.

சரி, வடாம் செய்தேவிடுவது என்று தீர்மானம் செய்து சாமான்களைச் சேகரித்தேன். புத்தகத்தில் சொல்லியிருப்பது போல் முதலில் ஜவ்வரிசி வடாம் செய்து பார்ப்பது என்று தீர்மானித்து அரைப் படி பச்சை மிளகாயை ஆட்டுக்கல்லில் இட்டு அரைக்க ஆரம்பித்தேன்.

'சளக்'... நான் உயிரிழக்கும்போதும் எதிரியை வீழ்த்திவிடும் வீரன் போல் ஒரு குண்டு மிளகாய் நசுங்கி என் கண்ணில் தெறித்தது.

''அம்மாடி... அப்பாடி...'' என்று கால் மணி நேரம் என்னைக் கதறவும் வைத்து விட்டது. கை எரிச்சல் ஒரு பக்கம். கண் எரிச்சல் ஒரு பக்கம்! ''சேச்சே! சந்தன விழுது அரைத்து விற்பது போலப் பச்சை மிளகாய் விழுது அரைத்து விற்காதவரை இந்த உலகம் உருப்படாது'' என்று என் ஆத்திரம் தீரச் சபித்துக் கொண்டே மிளகாயைக் கல்லுரலிலிருந்து வழித்து எடுத்தேன்.

ஒரு வழியாக ஒற்றைக் கண்ணின் உதவியால் கூழ் கிளறி முடித்தேன். என் இரு பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு வடாம் இடுவதில் உதவ ஓடி வந்தார்கள்.

வெள்ளைத் துணி வேண்டுமே! என் கணவருடைய மல் வேட்டிதான் என் கைகளுக்கு அகப்பட்டது. வடாம் உலர்ந்து எடுத்த பிறகு வேஷ்டியைத் தோய்த்துக் காதும் காதும் வைத்தாற்போல் பீரோவில் வைத்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டு அதை விரித்து வெயிலில் போட்டு, என் பெண்கள் துணையுடன் வடாம் இட ஆரம்பித்தேன்.

நாங்கள் மூவரும் கரண்டி கரண்டியாகக் கூழை எடுத்துத் துணியில் இலேசாகப் பரப்பி நொடியில் வடாம் இட்டு முடித்துவிட்டோம்.

''ப்பூ...! இவ்வளவு சுலபம் என்று தெரியாமல் போயிற்றே!'' என்று ஹாலில் மின்விசிறியின் கீழ் அமர்ந்து, மிளகாய் பட்டுச் சிவந்து எரிந்து கொண்டிருந்த கைகளுக்குத் தேங்காய் எண்ணெய் தடவிய வண்ணம் நான் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

'அடுத்த நாள் துணியைத் திருப்பிப் போட்டுத் தண்ணீர் தெளித்துச் சிறிது நேரம் வைத்திருந்து வடாத்தை உரித்து எடுத்தால் துணியிலிருந்து வந்துவிடும். பிறகு முறத்தில் போட்டுக் காய வைத்து எடுத்துப் பாட்டில்களில் பத்திரப்படுத்தவும்' என்று புத்தகத்தில் எழுதியிருந்தது.

முறம் தயாராக இருந்தது. வடாம் எடுத்துப் பத்திரப்படுத்த நான்கு புது கண்ணாடிப் பாட்டில்கள் என் ஜரிகைப் புடவையைப் போட்டு வாங்கியாயிற்று. ஆனால் வடாம் துணியை விட்டு வர மறுத்துச் சத்தியாக்கிரகம் செய்தது. ஒரு கை தண்ணீரிலிருந்து ஒரு குடம் தண்ணீர் வரை குடித்து விட்டுத் துணியோடு துணியாக ஒட்டிக் கொண்டிருந்த வடாத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு எரிச்சல் தாங்கவில்லை!

காய்ந்தது போதாதோ என்று மறுபடியும் வெயிலில் போட்டேன். அடுத்த நாளும் தண்ணீர் தெளித்துப் பார்த்தேன். ஊஹூம்! துணி வேறு வடாம் வேறு என்று இருந்தால் தானே!

அப்பொழுதுதான் எனக்கு நான் செய்த பிசகு தெரிந்தது. அப்பளம்போல இலேசாக இருக்க வேண்டும் என்ற ஆசையில் கூழில் நிறையத் தண்ணீர் சேர்த்ததன் பலன்... வேஷ்டிக்குக் கஞ்சி போட்டதுபோல் கூழ் ஒட்டிக் கொண்டு மொட மொடவென்று ஆகிவிட்டது.

தவிப்புடன் கத்தரிக்கோலை எடுத்துக் கையகலமுள்ள வடாத்தைக் கத்தரித்துக் கத்தரித்து எடுத்துத் தண்ணீரில் ஊறப் போட்டு, பின்னும் கத்தியால் சுரண்டி ஒட்டிக்கொண்டிருந்த வேஷ்டித் துண்டுகளைப் பிய்த்து எடுத்தேன். இந்த வேலை ஒரு வாரம் நடந்தது. ஒரு வீசை ஜவ்வரிசிக் கூழுக்கு இரண்டு கையளவு வடாம் – வேஷ்டி வடாம் கிடைத்தது.

அன்று இரவு அதைப் பொரித்தபோது என் பெண்கள் ஒருவரும் அதைக் கையால் கூடத் தொடவில்லை. அவர்களுக்குத் தெரியும் அது எப்படி வந்ததென்று.

என் கணவர் மட்டும் ''ஜவ்வரிசி வடாம் போல் முத்துமுத்தாக இல்லாமல் இலேசாகக் கரகரப்பாக இருக்கிறதே! என் குழந்தைகள்

போட்டுக் கொள்ளவில்லை! அவர்களுக்கு மிகவும் பிடிக்குமே!'' என்று அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்டுக் கொண்டு வேஷ்டி வடாத்தைத் தின்றார். நான் முன்பே எச்சரித்திருந்ததால் குழந்தைகள் ஒருவரும் வாயைத் திறக்கவில்லை.

அடுத்த நாள் இவர் தம் மல் வேஷ்டியைக் காணும் என்று குதித்தபோது.... நாங்கள் அனைவரும் ஊமைகள் போல் மௌனமாக இருந்தோம்.

மறு நாள் பக்கத்து வீட்டுப் பார்வதம் மாமியிடம் சென்று நைச்சியமாகப் பேசி 'எப்படி வடாம் இடுவது?' என்று தெரிந்து கொண்டு வரப் புறப்பட்டேன்.

எப்பொழுதும் என்னைப் பார்த்ததும் கைக் காரியத்தைப் போட்டுவிட்டுப் பேச வரும் பார்வதம் மாமி அன்று என்னவோ என்னைக் கண்டும் காணாதது போல ரேடியோ அருகில் அமர்ந்து காதை அதனுடன் பொருத்திக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

நான் வீட்டுக்குத் திரும்பக் காலை எடுத்து வைத்தபோது மாமி 'பட்டென்று' ரேடியோவை மூடிவிட்டு ''அப்பாடி! கவலையில்லை. இருடி... அகிலா!'' என்றாள்.

''என்ன கவலை?'' ஆவலுடன் கேட்டேன்.

''அதாண்டீ... வடாம் பிழியக் கூழ் கிளறி யிருக்கிறேன். ரேடியோவில் வானிலை அறிவிப்புக் கேட்டேன். இன்று முழுவதும் மழை பெய்யாது என்று சொன்னான்'' என்றவள் மணியைப் பார்த்துவிட்டு, ''இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது. ராகுகாலம் போவதற்கு. அதற்குப் பிறகுதான் பிழிய வேண்டும். அதுவரை உட்காரேன்'' என்று உபசரித்தாள்.

அப்பொழுதுதான் எனக்கு ஞானோதயம் உண்டாயிற்று. ஏன் நான் இட்ட வடாம் கெட்டுவிட்டதென்று! 'சரியான ராகுகாலத்தில் இட்டிருப்பேன்....' என்று நானே என் வடாம் துணியை விட்டு வராததற்குக் காரணம் கண்டுபிடித்த திருப்தியில் பூரித்துப் போனேன்.

இந்த ரகசிய நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டுவிட்டதால் இனிமேல் தைரியமாக வடாம் இடலாம் என்ற திருப்தி ஏற்பட்டது.

இந்தத் தடவை அரிசி கருவடாம் இடுவதென்று தீர்மானித்து வானிலை அறிவிப்பை ரேடியோவில் கேட்டு இன்றும் இரு தினங்களுக்கு வெயில் கடுமையாகக் காயும் என்று நிச்சயப்படுத்திக் கொண்டு கூழ் கிளறி வெயிலில் பாயைப் போட்டு வடாம் பிழிந்து விட்டேன்.

''அப்பாடா!...'' என்று நான் உள்ளே நுழைவதற்கும் படபடவென்று மழைத் துளிகள் விழுவதற்கும் சரியாக இருந்தது.

''என்ன அநியாயம்? நான் அபூர்வமாக வடாம் இட்டிருப்பது இந்த மழைக்கு எப்படித் தெரிந்தது? ரேடியோவில் கூட மழை இல்லை என்று சொன்னார்கள்... என் வீட்டில் மாத்திரந்தான் மழை பெய்கிறதா?'' என்று எண்ணிப் பரபரப்புடன் பக்கத்து வீட்டில் எட்டிப் பார்த்தேன்.

பார்வதம் மாமி ஓடி வந்து உலர்ந்த துணிகளை எடுத்துக் கொண்டிருந்தவள் என்னைப்

விநாயகர் பூசை!

தமிழமுகன்

[விநாயகப் பெருமானுக்கு ஒரு கொம்பேயன்றி, இரு கொம்புகள் கிடையாதாகையால், இக் கவிதையும் இரட்டைக் கொம்பெழுத்துக்களை முற்றிலும் இல்லாதபடி பாடப் பெற்றுள்ளது.]

ஆனைமுகப் பிள்ளையார்க்கு
அவலை வைக்கணும்!
ஐந்து கரச் சாமியாருக்குக்
கடலை வைக்கணும்!

பானை வயி றப்பனுக்குப்
படையும் வைக்கணும்!
பரமனாரின் தலைப் பிள்ளைக்கு
அடையும் வைக்கணும்;

ஆலமரச் சிமானுக்கு
அப்பம் வைக்கணும்!
அரசமரப் பூமானுக்குக்
கப்பம் வைக்கணும்!

சிலமுள்ள கணபதிக்குச்
சிறப்பும் வைக்கணும்!
சின்னச்சின்ன எள்ளுருண்டைப்
பரப்பும் வைக்கணும்!

விக்கின விநாயகர்க்கு
விளங்காய் வைக்கணும்!
விதமும் ஐய னார்க்குத்தென்னை
இளங்காய் வைக்கணும்!

பக்கத் துணை யானவர்க்குப்
பலவும் வைக்கணும்!
பக்தியொடு பிரார்த்தனையாய்க்
கொலுவும் வைக்கணும்!

ஆத்தங்கரைத் தெய்வமவர்
அன்பு வைக்கணும்!
ஆம்; அருளும் நம்மீதவர்
ரொம்ப வைக்கணும்!

காத்திருக்கும் தெய்வமவர்
கருணை யிருக்கணும்!
காலமெலாம் வாழ அவர்
துணையு மிருக்கணும்!



பார்த்துவிட்டு, வேலியினருகில் வந்து எட்டிப் பார்த்துவிட்டு, ''என்ன அநியாயமடி! வானத்தைப் பார்த்துக் கொண்டு வடாம் இடமாட்டாயோ? சீக்கிரம் கொண்டுபோய் உள்ளே மின் விசிறியினடியில் போடு. இல்லாவிட்டால் எல்லாம் ஊறிக்கொண்டு பாழாகிவிடும்'' என்று சொன்னதைக் கேட்டு என் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

அரக்கப் பரக்க நானும் என் பெண்களும் பாயை உள்ளே இழுத்துக் கொண்டு வந்தோம். மழை பலமாகப் பிடித்துக்கொண்டு கொட்ட ஆரம்பித்துவிட்டது. மின் விசிறியினடியில் போட வேண்டுமாம். எங்கே போடுவது? படுக்கை அறையில் மாத்திரம்தான் மின் விசிறி இருக்கிறது. வடாம் பாழாகாமல் இருக்க வேண்டுமே என்ற கவலையில் பாயைப் பிடித்து இரட்டைக் கட்டில்கள் மீது போட்டு மின் விசிறியை நன்றாகச் சுழல விட்டு மழைச் சாரல் புகாமலிருக்க ஜன்னல் கதவுகளை மூடிவிட்டு வந்தேன்.

சிறிது நேரம் சென்றிருக்கும். என் கணவரின் குரல் உச்ச ஸ்தாயியில் கேட்டது. என்னவென்று ஓடிப்போய்ப் பார்த்தபோது தான் விஷயம் தெரிந்தது.

தலைவலி என்று ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு வாசல் வராந்தாவில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தவர் சிறிது நேரம் படுத்து எழுந்தால் தலை வலி குறையுமென்றெண்ணிப் படுக்கையறையில் போய், மழை பெய்வதால் ஜன்னல் சாற்றப்பட்டிருப்பதாக எண்ணி அலுப்புடன் அப்படியே படுக்கையில் படுத்திருக்கிறார்! பாவம், அவர் தலையிலிருந்து கால்வரையில் வடாம் ஒட்டிக் கொண்டிருந்தது!

''இந்த வீட்டில் வடாத்துக்கு டன்லப் பில்லோ வேண்டியிருக்கிறது. கொஞ்சம்கூட நாகரிகம் தெரியாத பட்டிக்காட்டு ஜென்மம்'' என்று இவர் கத்தக் கத்த நான் அவர் மேல் ஒட்டிக் கொண்டிருந்த வடாம் மாவை வழித்து வழித்துச் சாக்கடையில் போட்டேன்.

இந்த இரண்டு அனுபவங்களுக்குப் பிறகும் என் வடாம் ஆசை விட்டது என்கிறீர்களா? அதுதான் இல்லை. எல்லோரும் டின் டின்னாக வடாம் போட்டு எடுத்து வைத்தால் நான் ஒரு சிறிய டப்பா நிறையவாவது வடாம் இட்டு வைக்க அசக்தையாகி விட்டேனே என்ற எண்ணம் என் ஆசையை அடங்க விடவில்லை.

இந்தத் தடவை மிகவும் சுலபமாகச் செய்யக்கூடிய அவல் கருவடாத்தைப் பார்வதம் மாமியின் மேற்பார்வையில் அவர்கள் வீட்டு மொட்டை மாடியிலேயே இட்டுவிட்டு, என் சிறிய பெண் கையில் ஒரு குச்சியைக் கொடுத்துக் காகம் வந்தால் ஓட்டும்படி சொல்லிவிட்டுக் கீழே வந்தேன்.

சிறிது நேரம் கழித்துப் போய்ப் பார்த்தபோது என் பெண் நிழலில் படுத்துச் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். காக்கைகள் கூட்டம் விருந்தில் ஆழ்ந்திருந்தது.

நான் அங்கலாய்ப்பதைப் பார்த்த பார்வதம் மாமி, வீதியில் விளையாடிக் கொண்டிருந்த தன் பெரிய பிள்ளையைக் கூப்பிட்டுக் காவல் இருக்கும்படி சொல்லவே, அவன் தன் சகாக்களுடன் கோலி விளையாடியபடியே காவல் இருப்பதாக ஒப்புக் கொண்டான்.

நான் நிம்மதியாக வீடு திரும்பி வேலையில் ஈடுபட்டேன். வேலை முடிந்து நான் மாடியில் ஏறிப் பார்த்தபோது பகீரென்றது. எண்ணிப் பத்தே வடாம் இருந்தது பாயில். பார்வதம் மாமியின் திருக் குமாரனும் அவன் சிநேகிதப் பட்டாளமும் ''மாமி, வடாம் வெகு ஜோர்! ஆளுக்கு இரண்டு எடுத்துக் கொண்டோம். இனிமேல் நீங்களே பார்த்துக் கொள்ளுங்க. நாங்கள் கீழே விளையாடப் போகிறோம்'' என்று கத்திக் கொண்டே தடதடவென்று மாடியிலிருந்து இறங்கி மறைந்தனர்.

நான் ஆத்திரத்துடன் பாயை உதறிச் சுருட்டிக் கொண்டு கீழே இறங்கினேன். மீதி பத்து வடாம் என்னவாயிற்று என்று கேட்கிறீர்களா?

''ஏன் இவ்வளவு சிரமப்பட்ட எனக்கு அது கூட வேண்டாமா?'' என்ற ஆத்திரத்தில் அதை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு தான் பாயைச் சுருட்டினேன் என்று சொல்ல வேண்டுமா?

நமக்கும் வடாம் இடுவதற்கும் 'ராசி' இல்லை என்று தீர்மானித்து அடுத்த நாள் கையில் ரூபாயுடன் கென்னடி வடாம் ஸ்டோர்ஸுக்குப் புறப்பட்டேன்.

யார் கண்ணில் படக் கூடாது என்று நான் விரும்பினேனோ அந்தச் சாவித்திரி மாமியின் கார் எதிர்ச் சாரியில் நிற்பதைப் பார்த்துத் திடுக்கிட்டு, அங்கு நின்றுகொண்டிருந்த ரிக்ஷாவின் பின் மறைந்து கொண்டேன்.


''இந்த மாமியின் கார் எப்போது கிளம்பும்?'' என்று காத்திருந்த வேளையில் சாவித்திரி மாமியின் கார் டிரைவர் 'கென்னடி வடாம் ஸ்டோர்ஸி'லிருந்து ஒரு பெரிய வடாம் பொட்டலத்துடன் வெளியில் வந்து, வீதியைக் கடந்து காரை நோக்கிச் சென்றான்.

சாவித்திரி மாமி ஒரு நொடியில் கைகளை நீட்டி அதை வாங்கி உள்ளே மறைத்துக் கொண்டாள்.

சரேலென்று ரிக்ஷா மறைவிலிருந்து வெளி வந்த நான், வீதியைக் கடந்து எதிர்ச் சாரியில் நின்ற காரின் அருகில் சென்றேன். அந்த மாமியினால் எனக்கு ஏற்பட்ட நஷ்டத்தினால் எழுந்த ஆத்திரத்தை உள்ளடக்கிய குரலில் ''என்னமாமி! சௌக்கியமா? வடாம் வாங்க வந்தீர்களாக்கும்?...'' என்று பயமில்லாமல் விசாரித்தேன்.

திடுக்கிட்டுத் திரும்பிய சாவித்திரி மாமியின் முகம் என்னைப் பார்த்ததும் சிறுத்து விட்டது. கையில் வடாம் பொட்டலத்துடன் திருதிருவென்று விழித்துக் கொண்டே ''உம், நேரமாயிற்று. விடு டிரைவர் காரை!'' என்று உத்தரவிட்டாள்.

வடாம் இடத் தெரியாததனால் உண்டான தாழ்வு மனப்பான்மையெல்லாம் ஒரு நொடியில் என்னை விட்டு அகல நான் நிம்மதியாகச் சிரித்துக் கொண்டே வீதியைக் கடந்து 'கென்னடி வடாம் ஸ்டோர்ஸ்'க்குள் நுழைந்தேன்.



டாக்டர் எஸ். சத்யநாராயணா அவர்களின் குமாரர் சிரஞ்சீவி ரங்கா ராவ் M. B., B. S.க்கும், ராயகாடா ஜி. அப்பா ராவ் அவர்களின் குமாரத்தி சௌபாக்யவதி சுஜாதாவுக்கும் சமீபத்தில் சென்னை, 'அபட்ஸ்பரி' மாளிகையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கு தலைவர் ராஜாஜி உள்பட நகரப் பிரமுகர்கள் பெரும்பாலோர் வந்திருந்தனர். ஏராளமான பரிசுப் பொருள்களும், வாழ்த்துக்களும் வந்து குவிந்தன. வாழ்க, மணமக்கள்!

அத்தியாயம் முப்பத்தைந்து

காலத்தின் கேள்வி

ராஜன் காலனியைச் சபேசன் கடப்பதற்குள் பொழுது நன்றாக இருட்டி விட்டது. விளக்கு இல்லாத சைக்கிள்கள் ஒன்றிரண்டு போவதும் வருவதுமாக இருந்ததைத் தவிர அந்த வண்டிப் பேட்டையில் ஜன நடமாட்டமும் ஓய்ந்து போயிற்று. எதிரே தொலை தூரத்திலிருந்த குருடி மலைத் தொடர் வானக் கூரையைத் தாங்கிக் கொண்டு நிற்கும் கருங்சுவர் போல் காட்சியளித்தது. பாதையின் இருபுறமிருந்த தோட்டங்களுக்கிடையே நீர் இறைக்கும் யந்திரங்களுக்கெனப் போடப்பட்ட ஒருசில கொட்டகைகளில் மின்விளக்குகள் எரிந்து கொண்டிருப்பது அடர்த்தியாக வளர்ந்திருந்த வேலிப்புதர்களுக்கு இப்பால் மங்கலாகத் தெரிந்தன. மற்றப்படி எங்கும் இருளின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது.

தூண்டில் முள்ளால் தன் சட்டைக் காலரைச் சுண்டியிழுத்துவிட்டு ஓடிய அந்த அழகிய இளம் பெண், அவன் தங்கியிருந்த அகதிகள் முகாமில் துயரமே உருவாக நடமாடிக் கொண்டிருந்த மக்கள், அவர்களிலே ஒருவனைக் குடிசையொன்றின் தாழ்வார நிழலில் தனியே உட்கார்ந்து சோகமயமான பாடலொன்றைத் தன்னை மறந்து புல்புல்தாராவில் வாசித்துக் கொண்டிருந்த இளைஞன், புளியமரத்தடியில் சிகரெட் குடித்தவாறு பத்திரிகை படித்துக் கொண்டிருந்த முரட்டு இளைஞன், அவனைப் பார்க்க வந்த மலையாளிப் பேர்வழி — இவர்களைப் பற்றியே திரும்பத் திரும்ப எண்ணமிட்டு, அதனால் ஏற்பட்ட இனிமை, அவலம், வெறுப்பு வியப்பு முதலான உணர்ச்சிகளில் மனத்தைத் தோய்த்துப் புரட்டியெடுத்துக் கொண்டிருந்த அவன், அந்த ஜனசந்தடியற்ற இருள் சூழ்ந்த பாதையில் எவ்வித அச்சமோ அவசரமோ இன்றிச் சாவதானமாக நடந்து கொண்டிருந்தான்.

வண்டிப்பாட்டையை விட்டு ஓர் ஒற்றையடித் தடத்தில் திரும்பி நடந்த போது அவனுடைய சிந்தனையும் வேறு திசையில் திரும்பியது. இதே நேரத்தில் சென்னை நகரத் தெருக்களும் சாலைகளும் எப்படி விருக்குமென ஒரு கணம் எண்ணிப் பார்த்தான். அவற்றின் ஜன வெள்ளமும் ஒளி வெள்ளமும் நிறைந்த கோலாகலக் காட்சிகள் மனக்கண்ணில் தோன்றவே அவற்றைக் கண்டு மிரட்சியடைந்தவன் போல் கால்களைச் சற்று எட்டிப் போட்டு நடக்கலானான். அத்துடன், அந்நகரில் அவன் இருந்தபோது ஒவ்வொரு நாளும் இம்மாதிரி முன்னிரவு நேரம் வந்ததுமே, 'இன்று எங்கே படுப்பது?' என்ற பெருங் கவலையில் ஆழ்ந்து, 'இந்தப் பாழாய்ப் போன இரவு வராமலே இருக்கக் கூடாதா?' என்று ஏங்கிச் சலித்துத் தவித்ததையும் இப்போது நினைத்துக் கொண்டு மனம் கருகிக் கசந்தான்.





'எப்படியோ அந்த நரக வேதனையிலிருந்து மீண்டு வந்து விட்டேன். இனி அதைக் கனவிலும் நினைத்துப் பார்க்கக் கூடாது. அதோ, என் கிராமம் தெரிகிறது. அங்கே என்னுடைய வீட்டுக்குத்தான் போக வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. எந்த வீட்டுத் திண்ணையிலும் ஏறி உட்காரலாம்; தூக்கம் வந்தால் அங்கேயே படுத்தும் விடலாம். யாரும் எழுப்பி விசாரித்துத் துரத்த மாட்டார்கள். போலீஸ், சட்டம் என்று பயமுறுத்தவும் மாட்டார்கள். "கோடி வீட்டுப் பிள்ளையாண்டானா? உள்ளே வந்து படுக்கலாமே!" என்று வேண்டுமானாலும் பரிவுடன் கூறுவார்கள். காற்று வரவில்லையென்று தெருவில்கூடக் கயிற்றுக் கட்டிலைத் தூக்கிப் போட்டு ஹாய்யாகப் படுத்துக் கொள்ளலாம். அப்போது எந்த 'செவண்டிஃபோரும்' வந்து மிரட்டி உருட்டித் தள்ளிக் கொண்டு போகாது. கிராம வாழ்க்கைக்கும் நகர வாழ்க்கைக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்! நகரங்களுக்கே உரிய பல்வேறு சட்டங்கள் என்னும் திருகாணிகளால் பூட்டப்பட்ட ஓர் இயந்திரம் போலத்தான் மனிதன் அங்கு வாழ வேண்டியிருக்கிறது. பட்டண எல்லைகளில் காலை வைத்ததுமே மனிதனின் பாதிச் சுதந்திரம் பறி போய்விடுகிறது. ஆனால் கிராமமோ....? சுயக்கட்டுப்பாட்டில் நின்று நியாயமான சுதந்திரங்கள் அவ்வளவையும் இங்கு அநுபவிக்கலாம்.



கருகித் துவண்ட அவன் மனம் ஒரு புதிய மலர்ச்சி கண்டு நிமிரவே, சிந்தனை மேலும் நீண்டது.

'இந்த இனிய சுதந்திர இன்பத்தைச் சில கிராம மக்கள் வெறுத்து — செங்கோலைவிடச் சிறந்ததான ஏர்க் கலப்பையையும் ஏற்றக் கோலையும் பிடிக்க அலுப்படைந்து — சிங்கிள் சாயாவுக்கும், பன் — பிஸ்கோத்துக்கும், சாப்பாட்டுக் கடைக்காரியின் எச்சில் சோற்றுக்கும், நைலான் சேலைக்கும், தினத்துக்கொரு சினிமாவுக்கும் ஆசைப்பட்டு நகரங்களுக்கு ஓடி, அங்கு மானம் மரியாதைகளை இழந்து, மனித நாகரிகத்துக்கே புறம்பான பல வேலைகளைச்செய்து, குந்தியிருக்கக் குடிசைகளுமின்றி நடைபாதைகளிலும், சாக்கடைக் கால்வாய் ஓரங்களிலும், சாலை மரத்தடிகளிலும் ஒண்டிக்கிடந்து காலத்தைக் கழிக்கத் துணியும் அறியாமையை என்னென்பது?'

சட்டென்று தலையை வேகமாக ஆட்டிக் கொண்டான் சபேசன். 'இல்லை; இப்படி நான் நினைப்பதுதான் அறியாமை! கிராம மக்கள் நகரங்களை நோக்கி ஓடுவதற்கு அங்குள்ள அந்த அற்புதமான கவர்ச்சிக் கவைகளே காரணங்கள் என்று மட்டும் கூறிவிட முடியாது. வேறு பலவும் உண்டு. நகர மக்களை இப்போது பேய்ப் பிடியாகப் பிடித்துப் படைக்கும் அரசியல் கட்சிப் பித்து ஒருவித உணர்ச்சி போலவே வளர்ந்து மெல்ல மெல்லக் கிராமங்களிலும் பரவத் தொடங்கியிருப்பதும், அங்கே புளித்து நுரைத்துக் கிளம்பும் நாகரிக மோகக் காற்று சிறுகச் சிறுகச் சுழன்றேறி வந்து இங்கும் வீச ஆரம்பித்திருப்பதும் அவற்றில் முக்கியமானவை. இவற்றுடன், நிலம், நிலத்தில் பாடுபடுவது சம்பந்தமாக அறிவாளிகள் பேசும் புதுப் புது சித்தாந்தங்கள், கொள்கைகள், கோட்பாடுகள், செய்யும் அரைகுறையான சீர்திருத்தங்கள் — இவை பாமர மக்களின் மனத்தில் ஓர் அதிதமான ஆசைக் கனலை மூட்டத்தான் உதவுகின்றனவே தவிர, அதை அவர்கள் அடைவதில் எள்ளத்தனை உதவியோ உத்தரவாதமோ அளிப்பதில்லை. இவையும் இன்னும் பலவும் சேர்ந்து கிராமங்களின் புனிதத்தையே மாசுபடுத்தி விட்டதோடு அல்லாமல், அவற்றின் கட்டுக்கோப்பான ஒரு வாழ்க்கைமுறையையும் தகர்த்துச் சீர்குலைய வைத்து விட்டிருக்கின்றன. அதன் விளைவுதான், மண்ணில் பொன்னை விளைவித்துக் கொண்டிருந்த மக்கள் நாளொரு குடும்பமும் பொழுதொரு கோஷ்டியுமாகக் கிராமங்களை விட்டு வெளியேறி நகரத் தெருக்களின் நடைபாதைகளில் வந்து குவிந்து கொண்டிருப்பது!'

உரத்த குரலில் குரைத்துக் கொண்டே ஓடி வந்த நாய் ஒன்று சபேசனின் காலை முகர்ந்து பார்த்து விட்டு உடனே வாலைக் குழைத்துக் கொண்டு மகிழ்ச்சி முனகலிட்டு அவனைச் சுற்றி வர, அப்போதுதான் சிந்தனையிலிருந்து விடுபட்ட அவன், அந்த நாயின் முதுகைத் தடவித் தட்டிக் கொடுத்தவாறு தன் வீட்டுத் திண்ணைப் படி மீது ஏறி நின்றான். உள்ளே அத்தை மீனாட்சியும்,

இப்பொழுது நடைபெறுகிறது

ஆகஸ்ட்


28ல்

முதல்

சென்னை· **வெலிங்டன்·ஸ்ரீமுருகன்**

ராக்ஸி·சீனிவாசா

மற்றும் தென்னாடெங்கும்



G.N.வேலுமணியின்

சரவணா பிலிம்ஸ்

கலங்கரை விளக்கம்

டைரக்ஷன்

K.சங்கர்



ELEGANT

அவளது கணவனும் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. அவர்கள் பேச்சு அவனைப் பற்றி யது போலிருக்கவே, அதைக் கூர்ந்து செவி மடுத்தான் :

''பிள்ளையாண்டானிடம் ஏதாவது தோட் டம் பார்த்தாயா?'' — இது மீனாட்சியின் கணவன் குரல்.

''எல்லாம் பார்த்து விட்டேன். நாம் நினைச்சது போல அப்படி ஒண்ணும் பசை இருக்கிறதாகத் தெரியலே.'' — மீனாட்சியின் பதில் குரல் இது.

''என்னும் இப்படி?''

''அதுதான் போன கதை, வந்த கதையெல் லாம் முதலிலேயே சொல்லி விட்டேனே ! அதிலிருந்து தெரிஞ்சுக்க வேண்டியதுதான்.''

''உன் அண்ணர் எப்போ வரப் போகிரு ராம் ?''

''ரெண்டாவது கப்பலில் வாரேன்னு சொன்னவர் இன்னும் வரலே. பையன் சொல்லி வருத்தப்படறான்.''

''நீயும் அதை நம்பிட்டே இல்லையா?''

''வேறென்ன செய்யறது?''

''போடீ, பைத்தியக்காரி! அந்த மனுஷ னாவது, கப்பல் ஏறுகிறதாவது! அவரை 'அவள்' அத்தனை சுலுவாக அனுப்பி விடுவாளா ?''

''யாரைச் சொல்றீங்க?''

''உனக்கு ஒண்ணும் தெரியாதா? ஊரே அறிஞ்ச விஷயம்! சாகிற போது உன் அண்ணியார் கண்ணம்மா என்ன சொன் னுங்க? 'அந்தப் பர்மாக்காரியோடு அவர் நிரந்தரமா தங்கிடறதுக்குத்தான் பிள்ளை யைக் கப்பலேத்தி அனுப்பிச்சுட்டாரு'ன்னு சொல்லிக் கண்ணீர் வடிக்கலையா? அது தான் நடந்திருக்கக் கூடிய சமாசாரம். அவரை இனி எதிர்பார்க்கிறது பைத்தியக் காரத்தனம் !''

''சரி; எப்படியாவது போகட்டும். நமக்கு ஏன் வம்பு ?''

''அதுதான் சொல்றேன். கொஞ்சம் சாக்கிரதையாகவே இருந்துக்க. 'அவர் வருவார், இவன் கொடுப்பான்'னு நம்பி ஊரைச் சுத்திக் கடன் வாங்கி வேளை தப்பா மல் உலை ஏத்திக்கிட்டு இருக்காதே. அப்புறம் நாம்தான் அதுக்கெல்லாம் தலை கொடுக்கும் படியாகிவிடும்.''

சபேசனால் இதற்கு மேல் அவர்கள் பேச்சைக் கேட்க முடியவில்லை. தலை சுற்று வது போலாகிக் கண்கள் இருண்டன. ஓடிந்து மடிந்து திண்ணையில் அப்படியே உட்கார்ந்து விட்டான்.

சாப்பிட்ட இலையைப் போடுவதற்காக வெளியே வந்த மீனாட்சி அவனைப் பார்த்து விட்டு, ''என்ன தம்பி? எப்போ வந்தீங்க? உங்களுக்காகத்தான் அத்தான் இவ்வளவு நேரம் சாப்பிடாமல் இருந்தார். எழுந் திருச்சு வாங்க; ஒரு பிடி சாப்பிட்டுவிட்டுப் படுப்பீங்க !'' என்றாள்.

''வேண்டாம், அத்தை! எனக்கு வயிறு என்னவோ போல் இருக்கிறது'' என்று அடைத்த குரலில் கூறிய சபேசன் திண்ணை யில் அப்படியே சுருண்டு படுத்தான்.

அதற்கு மேல் அவனை வற்புறுத்தாமல் மெல்ல நழுவிச் சென்றாள் மீனாட்சி.

இரவு வெகு நேரமாகியும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. படுக்கையில் அப்படி யும் இப்படியுமாக நெளிந்து புரண்டு கொண் டிருந்தவன் திடுமென்று எழுந்து உட் கார்ந்தான்.

'ரங்கூனில் என் தந்தை யாரோ ஒரு பர்மியப் பெண்ணுடன் தொடர்பு கொண் டிருக்கிறாராம்! இது உண்மைதானு ?'

கொதித்துப் பொங்கும் சுடுநீர்ப் பாளையி லிருந்து வெடித்துச் சிதறும் குமிழ்போல் இந்தக் கேள்வி அவன் மனத்திலிருந்து புடைத்துக் கொண்டு எழுந்தது. உடனே அவனுக்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அப்படிச் சிரிக்க



''உங்களுக்குக் கல்யாணம் ஆனால் என்ன ? அதற்காக வேலையை ரிசைன் பண்ணணுமா?''

''ஒருத்தனை வீட்டிலும், ஆபீஸிலும் வேலை செய்ய முடியுமா ?''



''சீக்கிரமாய் ஹோட்டலுக்குப் போய் எனக்கு ஒரு கப் காப்பி வாங்கிக்கொண்டு வாருங்கள். அதற்குள் நான் உங்களுக்குக் காப்பி தயார் பண்ணி வைக்கிறேன்!''

முடியவில்லை. கண்கள்தான் கலங்கிக் குளமாயின.

காலஞ்சென்ற அவனது தாய் தன் கணவரின் மீது – அதாவது, அவனுடைய தந்தையின் மேல் – இந்த அவநம்பிக்கையான குற்றத்தைச் சுமத்தி மனம் குமைந்து கொண்டிருந்ததோடு அல்லாமல், அதுபற்றி ஊர் ஜனங்களிடமும் சொல்லிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் என்று சில தினங்களுக்குமுன் அத்தை மீனாட்சியின் வாயிலாகக் கேள்விபட்ட போது அதுகுறித்து அவன் மேற்கொண்டு எதுவும் சிந்திக்கவில்லை; கவலைப்படவும் இல்லை. சாகப் போகிற நிலையில் தன் தாய் இப்படி ஏதோ வாய்க்கு வந்ததை உளறிக் கொண்டிருந்திருக்கிறாள் என்று எண்ணி அவ்விஷயத்தை அதோடு மறந்து விட்டான். ஆனால் இன்று அவனுடைய அத்தான் அதே சேதியை அத்தனை உறுதியாகவும் தெளிவாகவும் தமது மனைவியிடம் சொன்னதைக் கேட்ட பிறகே, 'அது உண்மைதானோ?' என்ற சந்தேகம் எழுந்து அவனை இந்தப் பாடு படுத்த ஆரம்பித்து விட்டது.

'ஏறத்தாழப் பதினாறு ஆண்டுகள் என் தந்தையாருடனேயே நிழல்போல் இருந்து வளர்ந்து வந்திருக்கும் எனக்கே தெரியாத இவ்விஷயம், பல ஆயிரம் மைல்களுக்கு இப்பால் இருந்த என் தாய்க்கு மட்டும் எப்படித் தெரிந்து விட்டதாம்?' –

கடல் கடந்து செல்லும் ஆண்களின்மேல் இங்குள்ளவர்கள் இத்தகைய குற்றச்சாட்டுகளை எளிதாகச் சுமத்தி விடுவது பற்றி அவன் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறான். அதில் ஓரளவு உண்மை உண்டு என்பதையும் அறிவான். ஆனால் தன் தந்தையின் மீதே இம்மாதிரியான ஒரு கெட்ட அபிப்பிராயம் இங்கு நிலவும் என்று அவன் கனவுகூடக் கண்டதில்லை. காரணம், அவரது குணநலன்கள், நடத்தைகள் ஆகியவற்றின்மீது அவனுக்கு அத்தனை அபாரமான நம்பிக்கையும் மதிப்பும் மரியாதையும் இருந்தன. அதனால் அவரிடம் அவன் ஒரு தந்தை மேல் கொள்ளக் கூடிய அன்பும் பாசமும் மட்டுமல்ல; அதற்கும் அப்பாற்பட்ட ஓர் ஆசான் ஸ்தானத்துக்குரிய ஓர் ஆழ்ந்த பக்தியே – கொண்டிருந்தான். ரங்கூன் நகரில் தனியாகச் சிறியதொரு வீட்டை வாடகைக்கு வைத்துக் கொண்டு தாமும் தமது பிள்ளையுமாக வருஷக்கணக்கில் குடித்தனம் நடத்திய அவர், நாளெல்லாம் ரப்பர்த் தோட்ட முதலாளியின் காரியாலயத்தில் செக்குமாடாக உழைக்க வேண்டியிருந்தாலும், சமையலுக்கென்றோ, மற்ற வீட்டு வேலைகளுக்கென்றோ ஒரு வேலைக்காரியை அமர்த்திக் கொள்ள விரும்பாமல் தாமே அத்தனை வேலைகளையும் கவனித்துக் கொண்டு கஷ்டப்பட்ட நாட்களை அவனால் மறக்க முடியுமா? மேலும், அவர் எந்தப் பெண் எதிரேயும் நின்று முகம் பார்த்துப் பேசியதை ஒரு நாளும் அவன் கண்டதேயில்லை. அதனால்தானோ என்னவோ, 'சாமிக்கண்ணு' என்னும் பெயர் கொண்ட அவரை அவரது சகாக்கள் 'சன்னாசி' என்று வேடிக்கையாகக் கூப்பிடுவார்கள். எனவே, 'இப்படிப்பட்ட ஓர் உத்தம மனிதர் மேல்– அவரை நன்கு அறிந்தவளான என் தாயே– தப்பபிப்பிராயம் கொள்ள எவ்வாறு மனம் துணிந்தாள்? இவ்வாறு எண்ணியபோது அவனுக்கு இறந்து போன தன் தாயின் மீது கோபம் கோபமாக வந்தது.

சில விநாடிகளுக்குப் பின் அந்தக் கோபத்தை ஆற்றிக் கொள்கிறவன் போல், 'இல்லை; இதற்காக நான் கோபப்படுவதில் அர்த்தமில்லை. பர்மாவுக்குப் போய் வந்த யாராவது எப்போதாவது விளையாட்டுக்காகவோ வினையாகவோ அப்படி ஒரு பொய்ச் சேதியை அவளிடம் திரித்துவிட்டிருக்கலாம். அதை அவள் உண்மை என்று நம்பி ஒன்றைப் பத்தாக்கிக்கொண்டு உள்ளம் புழுங்கிக் கிடந்திருக்கலாம். உள்ளூரிலுள்ள ஒருவர்மீது கூறப்படும் நம்பத்தக்க புகார்களைக்கூட எளிதில் நம்ப மறுப்பதும், வெளியூரிலே இருப்பவர் மேல் நம்ப முடியாத ஒரு சிறு பொய்ச் செய்தியைச் சொன்னாலும் அதை உடனே முழுக்க நம்பி விடுவதும் மனித மனத்தின் இயல்பு அல்லவா? மேலும், என் தாயார் திருமணமான இரண்டாம் வருஷமே கணவரைப் பிரிய நேரிட்டுக் காலமெல்லாம் தனிமையில் வாடிக் கிடந்தவள். அந்நிலையிலே அவளுக்கு அவரைப் பற்றிய சிந்தனையைத் தவிர வேறு இருந்திருக்க முடியாது. அத்தகைய சிந்தனை எப்போதும் நல்ல விதமாகவே – நேராகவே – சென்றிருக்கும் என்பது என்ன நிச்சயம்? சில சமயம், அவரது நடத்தையில் சந்தேகப்படும்படியான விஷயமொன்றை அவளாகக் கற்பனை செய்து கொண்டு பிறகு அதையே திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்ததால் அவள் உள்ளத்திலே அது உண்மைச் செய்தி போல் உறைந்து போக, பின்னர் அதை உறுதியாகப் பிடித்துக் கொண்டு மனம் மறுகிப் புலம்பிக் கொண்டிருந்திருக்கலாம் அன்றோ? இது தவிர இன்னொரு வேடிக்கையான மன இயல் கூற்றின் அடிப்படையிலும் அவள் அவ்வாறு சந்தேகப்பட்டிருக்கலாம். அதாவது, சில பெண்கள் தம் கணவன்மார் வேறு பெண்களுடன் தொடர்பு கொண்டிருப்பதுபோல் பொய்யாக நினைத்துக் கொள்வதிலும், அதை உண்மை போல் மற்றவர்களிடம் கூறிக் குறைப்பட்டுக் கொள்வதிலும் உள்ளூற ஒருவிதத் திருப்தியும் பெருமையும் அடைகிறார்களாம்! என் தாயாரும் இந்த ரகத்தைச் சேர்ந்தவளாக இருந்திருந்தால்?.....' என்றெல்லாம் எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்ட சபேசன் சட்டென்று முகத்தைச் சுளித்தான்.

'ஆமாம்; இவ்வளவும் என் தந்தைக்காக நானே வழங்கிக் கொள்ளும் தீர்ப்புத்தானே? இதில் எனக்கும் எட்டாத ரகசியம் ஏதேனும் இருந்தால்? என் அம்மா அப்படியொன்றும் அசடு அல்லள். சில விஷயங்களில் அவள் மிகவும் கூரிய மதி படைத்தவள் என்று அப்பாவே என்னிடம் அடிக்கடி கூறுவார். அப்படிப்பட்டவள் தன் கணவர் மீது எவ்வித ஆதாரமுமில்லாமல் வீணாகச் சந்தேகித்து விடுவாளா? அவள் அவநம்பிக்கைப் பட்ட அந்த விஷயத்தைச் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அது உண்மையாக இருக்குமோ என்றுகூடத் தோன்றுகிறதே! எவ்வாறெனில், தமக்கு முதல் கப்பலில் இடம் கிடைக்காததால் என்னை மட்டும் அதில்


அஜந்தா
டூத் பிரஷ்
அஜந்தா டூத் பிரஷ்கள் பற்களைத் அப்புரவாகச் சுத்தம் செய்வதற்கும், ஈறுகளில் இரத்த ஓட்டத்தைக் கொடுப்பதற்கும் ஏற்றபடி அமைக்கப்பட்டவை.
● மென்மையான நைலானில் செய்யப்பட்ட மழமழப்பான முனையுடைய குஞ்சங்கள்
● கிருமிகளிடமிருந்து பாது காப்பதற்கென, தனிப்படத் தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கன்டெய்னர்களில் தனித்தனியாக பேக் செய்யப்படுகின்றன
● அஜந்தா 41 ● அஜந்தா 51,
● அஜந்தா 26
● அஜந்தா ஜூனியர் மற்றும் அஜந்தா சைல்ட்.
நாடு முழுவதும் எல்லா நல்ல ஸ்டோர்களிலும் கிடைக்கின்றன.
புதிய
பெட்டி
தி பாம்பே
பிரஷ் கம்பெனி
பிரைவேட் லிமிடெட்,
பம்பாய்

கரப்பு, மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவற்றை... தப்பாமல் கொல்லுவது:


புதிய

ஃப்ளிட்

உடனடிப் பிரயோகப்


பவுடர்

அமுக்குத் தூவல் பெட்டியில் வருகிறது.
தூவ இலகுவானது.
பயன்மிக்கது.



கரப்பு, மூட்டைப்பூச்சி, பிறவகை ஊருமினப் பூச்சிகள் அனைத்தையும் ஒழிப்பதற்கென்றே தனிமுறைப்படி தயாரிக்கப்பட்டுள்ள ஃப்ளிட் பவுடர், தப்பாமல் கொல்கிறது. நேரடியாகத் தூவப்படும் பூச்சிகளை மட்டுமின்றி தூவிய இடத்தை நெடுநேரம் கழித்து அண்டும் பூச்சிகளையும் பலிவாங்கி விடுகிறது. வேண்டும்போது பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ளது ஃப்ளிட் பவுடர்... இலகுவாகத் தூவிப் பயன்காண வாகான அமுக்குத் தூவல் பெட்டியில் வரும் பூச்சிக்கொல்லி இதுவொன்றே.

கையாள மிக வசதியானது ஃப்ளிட் பவுடர்




வீடுகளிலே: கரப்பான் பூச்சிகளை ஒழிக்க, அலமாரி, இழுப்பறைகள் ஆகியவற்றின் மூலைமுடுக்குகளிலும், சாக்கடைப் பொந்துகளுக்கு அருகேயும் தூவுக. மூட்டைப் பூச்சிகளுக்கு முடிவு கட்ட, படுக்கைகள் எங்கும் 4 வாரத்திற்கு ஒரு முறை மருந்திடுக்கவும்.



நூல் நிலையங்களிலே, புத்தக அலமாரிகளிலே: வெள்ளிப் பூச்சிகளை விரட்ட, புத்தகங்கள், அலமாரித் தட்டுகள், புத்தகத் தட்டுகளுக்குப் பின்புறம் எங்கும் தூவிவைக்கவும்.





தோட்டங்களிலே: தாவர வர்க்கங்களைச் சற்றேனும் பாதிக்காமல், தோட்டப்பூச்சிகளை மட்டும் கொன்றுவிட வல்லது. இலைகள் மீதும் அடிப்பரப்பிலும் தூவி வைத்தால் தோட்டப் பயிர்களுக்கு அதுவே உறுதியான பாதுகாப்பு.

மறவாதீர்கள்: ஊருமினப் பூச்சிகள் யாவினையும் கொன்றொழிப்பது

ஃப்ளிட் பவுடர்.

மற்றுமொரு எஸ்ஸோ ESSO தயாரிப்பு

எஸ்ஸோ ஸ்டாண்டர்ட் ஈஸ்ட்டர்ன் இன்க்.
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமையோடு யு.எஸ்.ஏ. வில் இணைப்புப் பெற்றது).

CMEF-1A-TAM

ஏற்றி அனுப்பிய என் தந்தை இரண்டாவது கப்பலிலாவது இடம் பிடித்து வந்து சேர்ந்திருக்க வேண்டியவர்தானே? அந்தக் கப்பலிலும் இடம் கிடைக்காமலோ அல்லது வேறு சங்கடங்களோ ஏற்பட்டிருந்தால் அது பற்றி அவர் ஒரு கடிதமாவது எழுதியிருக்கலாமே? இன்று வரை அப்படி எந்தத் தகவலும் தெரிவிக்காமல் மௌனம் சாதிப்பது ஏன்? அம்மா சந்தேகித்துச் சொல்லிக் கொண்டிருந்தது போல், என்னை அனுப்பிவிட்டு அவர் அங்கேயே தங்கி விட்டாரோ? அவ்வாறு தங்குவதானால் 'அவருக்கு அந்த ஊரில் ஏதோ ஓர் 'அந்தரங்கப்பிடிப்பு' இருக்கிறது என்றுதானே அர்த்தம்? என்னைப் பொறுத்த வரையிலும் மற்றப் பொது விவகாரங்களிலும் அவர் மிக மேன்மையாகவே நடந்து கொண்டிருக்கலாம். அது போல் அவருக்கே உரிய அவரது சொந்த வாழ்க்கையிலும் நடந்திருப்பார் என்பது என்ன நிச்சயம்? என்னைவிட அறிவிலும் வயதிலும் அநுபவத்திலும் மூத்தவரான அவர், வெகுளியான என்னிடம் அவருடைய சுயக் கோணல் நடத்தையை வெளிப்படுத்தாமல் சாமர்த்தியமாக மூடி மறைத்து வைக்க முடிந்திராதா என்ன? ஆண்களை வேறு எந்த விஷயத்திலும் நம்பலாம் — பெண் விஷயத்தைத் தவிர என்கிறார்களே, அது உண்மையாயிருக்குமோ? மகா ஞானியான விசுவாமித்திரரே, மேனகையைக் கண்ட சில விநாடிகளில் சுருண்டு சுண்ணும்பாகிப் போன கதை இதற்கு நல்ல உதாரணம் அல்லவா?'

சபேசனின் கண்கள் கலங்கின. தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு வேதனையுடன் உடம்பை நெளித்து முறுக்கிய அவன் ஏதோ ஓர் ஆவேசம் வந்தவன் போல் விருட்டென்று எழுந்து நின்றான்.

'சே! இதற்கெல்லாமா இப்படி நெஞ்சம் கலங்கிக் குமைவது? இனி மலையே புரண்டாலும் மனம் தளரக் கூடாது! ஏனென்றால் நான் இப்போது தனி மனிதன்! இவ்வுலகில் தனித்து விடப்பட்டவன்! என் அன்னை மறைந்தாள்; என் தந்தையும் என்னைக் கைவிட்டு விட்டார்! அதனால் என்ன? என்னால் வாழ முடியாதா? இது பரந்த உலகம்; அதில் எனக்கும் ஓர் இடமுண்டு! நான் வாழ்வேன்! நன்றாக வாழ்ந்து காட்டுவேன்!'

மிடுக்கும் செருக்குமாக நெஞ்சை நிமிர்த்தித் தட்டிக் கொண்ட அவன் வெகு அலட்சியமாகப் படுக்கையில் விழுந்து படுத்த சில விநாடிகளுக்கெல்லாம் தன்னை யறியாமல் உறங்கியும் போனான். (தொடரும்)



கப்பல் சென்னைத் துறைமுகத்தை நெருங்கிக் கொண்டிருக்கும்போதே தொழிலாளர்கள் அனைவரும் தாங்கள் போய்ச் சேர வேண்டிய ஊர்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டனர்.

மலையாளத்தைச் சேர்ந்த மாதவன் நம்பி பரவசத்துடன் கூறினான்: என் முறைப் பெண் ஓமெனு ஆலப்புழையில் எனக்காகக் காத்திருப்பாள். பருவத்தின் பெருக்கு அவள் உருவத்துக்குத் தனி அழகைத் தந்திருக்கும். அவளைப் பிரிந்து மூன்று வருஷங்களுக்கு மேலாகிவிட்டன....!

திருச்சியைச் சேர்ந்த நிஜாமல் கூறினான்: அப்பப்பா! கடிதம் எழுதியே என் காதலை வளர்த்து வந்தேன். இனி நேரில் அவளைக் காணப் போகிறேன். எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?

ஜோஸப் ஒன்றும் பேசாமல் கண்களை மூடியபடி இருப்பதைக் கண்ட மற்றவர்கள் அவனையும் தங்கள் சம்பாஷணையில் இழுக்க விரும்பினர்.

என்னப்பா ஜோஸப், நீ என்ன ஒரேயடியாகக் கண்களை மூடிக் கொண்டுவிட்டாய்? நீயும் எங்களோடு கலந்துகொண்டு உன் மனதில் உள்ளதைச் சொல்லு! என்று அவர்களில் ஒருவன் அவனைச் சீண்டினான்.

ஏராளமான சொத்துக்கு ஒரே வாரிசுதாரரான என் பாட்டனார் கண்ணை மூடிவிட்டால் அத்தனை சொத்தும் அடுத்த நிமிஷமே என்னைச் சேர்ந்துவிடும். அவர் இரவில் தூங்குவதற்குக்கூடக் கண்ணை மூட மாட்டார். அவருக்கு இன்ஸோம்னியா வியாதி. அவர் சீக்கிரமாக ஒரு வழியாகக் கண்ணை மூடினால் தான் எனக்கு வாழ்வு கிட்டும். என்னை மணக்கப் போகும் சில்வியா ஓர் ஏழைப் பெண். என் தாத்தா உள்ளவரையில் அவள் என் கரம் பற்ற முடியாது. இந்த இக்கட்டான நிலையில் என் சிந்தனையே ஓடவில்லை. அதனால்தான் உங்களோடெல்லாம் என்னால் கலந்துகொள்ள முடியவில்லை...! என்று ஜோஸப் கூறியதைக் கேட்டு எல்லாரும் அவனிடம் அநுதாபம் காட்டினர்.

இப்படியே ஒவ்வொருவரும் அவரவர்கள் சுற்றத்தாரைக் காணும் ஆவலுடன் லீவு பெற்றுக் கொண்டு செல்லும் உற்சாகத்தில் தங்களை மறந்திருந்தனர்.

கப்பல் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்ததும் தொழிலாளர்கள் அனைவரும் ஒரே உற்சாக ஆரவாரத்துடன் தங்கள் தங்கள் உடைமைகளுடன் அவசரம் அவசரமாக இறங்கலாயினர். காப்டன் கப்பல் தொழிலாளர்களின் உற்சாகத்தைப் பார்த்துக் குதூகலம் அடைந்தவராய் அவர்களெல்லோரும் செல்லுவதையே பார்த்துக் கொண்டு நின்றார்.

அப்பொழுது காப்டனின் பார்வையில், ஜார்ஜ் தென்பட்டான். அவன் தன் நண்பர்களுடன் கலந்துகொள்ளாமல் தனியாகக் கப்பலின் மேல் தளத்துக்குப் போய் ஒரு மூலையில் நின்று நீலக் கடலையே பார்த்தவண்ணம் சோர்வோடு நின்று கொண்டிருந்தான்.


காப்டனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. எல்லோரும் ஒருவரையொருவர் முந்திக்கொண்டு லீவு கேட்டுக்கொண்டு கப்பலை விட்டு வெளியேறத் துடித்தபோது ஜார்ஜ் மட்டும் அவரை நெருங்கவே யில்லை. இப்பொழுதும் அவன் தனித்தே நின்று கொண்டிருக்கிறான்.

காப்டனுக்கு என்னவோ போல் இருந்தது. அநுதாபம் பெருக ஜார்ஜை நோக்கி மிஸ்டர் ஜார்ஜ், எல்லாரும் லீவு வாங்கிக்கொண்டு அவரவர்கள் உறவினரைத் தேடிச் சென்றுவிட்டனர். நீமட்டும் இங்கேயே சோர்ந்துபோய்த் தங்கிவிட்டாயே! என்ன காரணம்? என்று மிகுந்த ஆதுரத்தோடு கேட்டார்.

ஜார்ஜ் ஒரு பெருமூச்சு விட்டான்.

எங்கள் கூட்டத்திலேயே நான் ஒருவன்தான் விவாகமானவன். நான் எப்படி உற்சாகத்தோடு வீட்டுக்குப் போவேன்? என்று கேட்டுவிட்டு அவரைச் சோர்வோடு பார்த்தான்.

அதற்கு மேல் கப்பல் காப்டன் அவனை ஒன்றும் கேட்கவில்லை.



தேர்ந்தெடுப்பதற்கு பல்வேறு மாதிரிகளில்
கேஸல்ஸ் மின்விசிறிகள் இருக்கின்றன.
ஏர்மாஸ்டர் : 1400-56" & 1500-60"
ஸுப்பர் டீலக்ஸ்: 1200-48" & 1400-56"
900-36" மற்றும்
பீஸ் மாஸ்டர் டேபிள் விசிறி : 400-16"
கேஸல்ஸ்
...குடும்பத்தினரும் விரும்புவது
விற்பனைக்கு விடுவோர் :
எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்.,
3/33, மவுண்ட் ரோடு, மதராஸ் - 2

வாழையும் கன்றும்

எம். எஸ். கணபதி

பூவும் பிஞ்சும் காயும் கனியுமாய்க் குலுங் கிற்று அந்தோட்டம்! கொல்லையின் ஒரு மூலை யிலேதான் நின்றது அந்தச் செவ்வாழை மரம். கமுகும் தென்னையும் இருபுறமும் வீரர்களைப் போல் அணிவகுத்து நிற்க, முடிபுனைந்து வீற்றிருக்கும் மாமன்னனைப் போல் குலை தாங்கிப் பூரிப்புடன் நின்றது வாழை.

உள்ளே வந்தான் தோட்டக்காரன். அவ னையும் கவர்ந்தது அச் செவ்வாழை. மனம் லயித்து அதைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான் அவன். மற்ற மரங்களைப் போல் முருங்கை மரத்துக்கும் பொறாமை ஏற்படத்தான் செய்தது. தாயோடு உராய்ந்து நின்று மகிழ்வோடு விளையாடிக் கொண் டிருந்த வாழைக் கன்றை எட்டிப் பிடித்தது முருங்கை. அதன் செவியில் ரகசியமாக ஏதோ சொல்லவும் செய்தது. அவ்வளவு தான்; துள்ளி விளையாடித் திரிந்த அக் கன்றின் மனம் அக்கணமே குன்றிப் போயிற்று. கன்றைக் கட்டியணைத்துக் கொண்டு அதன் கவலைக்குக் காரணம் கேட்டது தாய் வாழை.

''அதைச் சொல்வதற்கே எனக்குப் பய மாக இருக்கிறது அம்மா...'' என்று ஆரம் பித்த கன்றின் கண்களில் தாரை தாரையாக வழிந்தோடியது கண்ணீர்.

''அழாமல் சொல். என்ன நடந்தது?''— வாழையின் தாயன்பில் சற்றுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டது கன்று.

''அம்மா, நான்தானும்மா தாயைக் கொன்று வளரும் பிள்ளை?... நான் வளரும் போதே நீ செத்துவிடுவாயாம்... அப்படியா அம்மா? முருங்கை மாமா சொல்கிறார்!'' கன்று தேம்பித் தேம்பி அழுதது.

வாழை சிரித்தது. ''நான் என்ன, இந்த உலகில் எல்லோருமே ஒரு நாள் சாகவேண்டி யதுதான். அப்படி இருக்கும்போது பிள்ளை யின் வளர்ச்சியைக் கண்டு அதன் பின் சாவதில் எனக்கு எத்தனை திருப்தி தெரியுமா? பிறர்க்கு உதவும் குடும்பம், நம் குடும்பம். பிறந்தோம், உதவினோம். உதவிய பின் இறந் தோம் என்ற பெரும் புகழ் நமக்குத்தான் சொந்தம். தியாகிகள் நாம்'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தது வாழை.

புரிந்ததோ புரியவில்லையோ, கன்று சற்று ஆறுதலடைந்தது. முருங்கைக்கு அறி வூட்டும் வகையில் உரத்த குரலில், ''நாம் இணைந்தே வாழ்கிறோம் பார்த்தாயா?'' என்று பண்ணும் பாடிற்று வாழை.

தனக்கு அப்படி ஒரு பிள்ளை இல்லையே என்று சுற்று முற்றும் பார்த்து ஏங்கிற்று முருங்கை. அப்போதுதானா தோட்டக்காரன் அங்கு வந்து நிற்க வேண்டும்? ''இப்படி ஒரே வடியாகத் தோட்டத்தையே அடைத்துக் கொண்டு வளர்ந்து விட்டதே! முருங்கையை ஒடிச்சு வளர்க்கணும்னு தெரியாமலா சொன் னாங்க'' என்று கூறியபடி அதன் கிளைகளை ஒடித்துக் கொண்டிருந்தான் அவன்.

அதைப் பார்த்த வாழைக் கன்று 'கலகல' வென்று நகைத்தது.



சென்னை.... வாசகசாலை உதவி லைப்ரேரியன் கேதாரி வேலைக்கு வந்து மூன்று மாதங்கள்தானாகியிருந்தன. அவன் 'லைப்ரேரி ஸையன்ஸ்' பரீட்சை கொடுத்தவன்; பயிற்சி பெறுவதற்காக அந்த வாசகசாலையில் தாற்காலிகமாக வேலைக்கு அமர்ந்திருந்தான்!

அவன் புத்தகங்களைக் 'கோலன் முறை'ப் படியோ, அல்லது வேறெந்த முறைப்படியோ ஷெல்புகளில் அடுக்கி வைப்பதில் மட்டும் சிரத்தை கொண்டிருப்பவன் அல்ல. வரும் வாசகர்கள் விஷயத்திலும் சிரத்தை எடுத்துக் கொள்வான். அவர்களை அவன் கேவலம், ''இந்த மாதம் வாசகசாலையில் வந்து படித்தவர்கள் 764 பேர்'' என்று வெளியிடும் ஜாபிதாவில் சேர்ந்தவர்களாகக் கருதுவதில்லை.

அவன் வாசகசாலைக்கு வருபவர்களைப் புன்னகையுடன் வரவேற்பான்; முன்பின் தெரியாதவர்களைக்கூடத்தான். புதிதாக வந்திருக்கும் நல்ல புத்தகங்களைப் பற்றிச் சொல்வான். சும்மா சுற்றிப் பார்க்க வந்தவர்கள்கூட அவனைத் திருப்திப்படுத்துவதற்காக இரண்டு புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்த்து விட்டுப் போவார்கள்.

அவன் தன் நாற்காலியிலேயே பழியாக உட்கார்ந்திருக்க மாட்டான். நடுவே, நடுவே எழுந்திருந்து சென்று யார் யார் என்ன, என்ன படிக்கிறார்கள் என்று கவனிப்பான். அவர்களுக்கு எந்தப் புத்தகமாவது தேவையாயிருக்கிறதா என்றும் விசாரிப்பான்.

ஒரு நாள் அவன் இப்படிச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தபோது தத்துவ சாஸ்திரப் பத்திரிகைகள் போடப்பட்டிருந்த ஒரு மேஜைப் பக்கம் வந்தான். அங்கே ஒரு பெரியவர் ஒரு பத்திரிகையைப் பார்த்த வண்ணம் கண்மூடி மௌனியாய்த் தூங்கிக்கொண்டிருந்தார்.

கல்வி, கல்வி போதனை சம்பந்தமான பத்திரிகைகளிருந்த மேஜைப் பக்கம் வந்தான்.



காண்டா மிருகமும் காதலும் தோன்றிய கதை

கஸ்தூரி

அங்கே ஒரு பழைய கோட்டு போட்டுக் கொண்டு தலையில் தலைப்பாகை தரித்திருந்த ஓர் உபாத்தியாயர் மிகவும் கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருக்கக் கண்டான். அவர் பையன்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் முறையில் தலையையும், கையையும் பலமாக ஆட்டிக் கொண்டிருந்தார்.

கேதாரி இப்படியே பார்த்துக் கொண்டு போனபோது கடைசியாக இருந்த மேஜைக்கருகில் ஒரு பெண் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். உடனே அவன் கால்கள் மேலே செல்லாமல் பின்னிக் கொண்டன. அவன் தினமும் கிட்டத்தட்ட ஐம்பது பெண்களைப் பார்த்து வந்திருக்கிறான். அவர்களுடன் பேசியுமிருக்கிறான். ஆனால் 'இந்தப் பெண்ணைக் கண்டு தான் ஏன் இத்தனை தயங்க வேண்டும்?' என்று அவன் தன்னைத்தான் கேட்டுக் கொண்டான்.

அந்தப் பெண் அழகி என்று சொல்வதற் கில்லை. அவள் முகம் செயற்கைச் சந்திரனைப் போல் இல்லை. உதடுகள் கனியைப் போன்று சிவந்திருக்கவில்லை. ஆனால் அவள் நல்ல தேக அமைப்புடன் இருந்தாள். பார்ப்பதற்குப் புருபுருவென்று இருந்தாள். இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு வசீகரத் தன்மை அவள் முகத்திலிருந்து ஒளிவிட்டுக் கொண்டிருந்தது.

கேதாரிதான் அவள் இருந்த மேசைப்பக்கம் செல்லாமல் போய்விடுவது தனது வழக்கமான கடமையைச் செய்வதினின்றும் பிறழ்வதாகும் என்று ஞாபகப்படுத்திக்கொண்டு பார்த்தும், வாசகசாலைக்கு வருபவர்களிடம் பழகும்போது தான் உணர்ச்சி வசப்பட்டு நடந்துகொள்ளக் கூடாதென்று தன்னைக் கண்டித்துக் கொண்டு பார்த்தும்கூட அவனுக்கு அவள் இருந்த பக்கம் போகத் தைரியமில்லை.

அவன் திரும்பிச் செல்வதற்காக இருந்தபோது, ''ஸார்!'' என்று சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அந்தப் பெண்ணே அவனைக் கூப்பிட்டு விட்டாள். அப்போதும் அவள் இருந்த பக்கம் அவன் கால்கள் செல்லவில்லை.



அவளே நாற்காலியிலிருந்து எழுந்திருந்து புன்னகை ததும்ப அவனை நோக்கி வந்தாள்.

''என்ன?'' என்று கேதாரி கேட்டு வைத்தான்.

''எனக்குக்காண்டா மிருகம் தோன்றிய விதம் என்ற புத்தகம் வேண்டும். அது அதோ அந்த ஷெல்பில் உயர இருக்கிறது. எனக்கு எடுக்க முடியவில்லை'' என்று கூறினாள். அதே சமயத்தில் அந்த ஷெல்பையும் காண்பித்தாள்.

மறுகணம் கேதாரி அங்கே இல்லை. அந்த ஷெல்ப் பக்கம் விரைந்து சென்றான். அங்கே பக்கத்திலிருந்த ஏணியை இழுத்துப் போட்டுக்கொண்டு அதன் மீதேறிப் போய் அவள் விரும்பிய புத்தகத்தை எடுத்துக்கொண்டு கீழே இறங்கலானான். அப்படி இறங்கிக்

கொண்டிருந்தபோது கீழே இருந்த அந்தப் பெண்ணின் கண்களும் அவன் கண்களும் சந்தித்துக் கொண்டன.

அதற்குப் பிறகு அவனுக்குப் படிகளில் இறங்கி வரக் கால்கள் தடுமாறின. கீழே விழாமல் சமாளித்துக் கொண்டு இறங்கி விட்டான் அவன்.

அந்தப் பெண் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு 'வந்தனம்!' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

கேதாரி பிறகு தன் இடத்துக்குச் சென்று நாற்காலியில் அமர்ந்தான். போகும்போது அவன் அந்தப் பெண் இருக்குமிடம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

ஃ ஃ ஃ

மாலை ஐந்து மணி சுமாருக்கு அந்தப் பெண் கையில் புத்தகத்துடன் அவன் இருந்த பக்கம் வந்தாள். "ஸார், ரொம்ப நல்ல புத்தகம். நீங்கள் அதை எடுத்துக் கொடுத்திருக்காவிட்டால் திண்டாடிப் போயிருப்பேன்" என்றாள்.

"உங்களுக்கு உதவி செய்வதற்காகத்தானே நாங்கள் இங்கே இருக்கிறோம்!" என்றான் கேதாரி.

புத்தகத்தையும், அதைக் 'கடனு'க எடுத்துச் செல்வதற்கான அங்கத்தினர் டிக்கட்டையும் அவள் மேஜை மேல் வைத்தாள்.

கேதாரி அவை இரண்டையும் எடுத்துக் கொண்டுபோய்க் குமாஸ்தாவினிடம் கொடுத்தான். பிறகு அவளைப் பார்த்து, "வாங்கிக் கொண்டு போங்கள்!" என்று சொன்னான். அவள் புத்தகத்தை வாங்கிக்கொண்டு போய் விட்டாள்.

கேதாரி அவள் செல்வதைக் கவனிக்காதது போல் கவனித்தான். அவன் வாய் 'வித்யாவதி', 'வித்யாவதி' என்று மெதுவாக அநுபவித்துச் சொல்லிக் கொண்டிருந்தது. அந்தப் பெண் கொடுத்த டிக்கெட்டில் அந்தப் பெயர் இருந்தது.

கேதாரி அவளை மறக்க முயல்வதற்காக மிகவும் சிரமப்பட்டு வந்து கொண்டிருந்தான். அவள் மறுநாள் வரவில்லை. அதற்கடுத்த நாளும் வரவில்லை. ஐந்தாறு தினங்களாகியும் வரவில்லை. அவள் வராதிருந்தது அவனது முயற்சி கைகூடுவதற்கு உதவி செய்வதாயிருந்தது.

ஆனால் இரண்டு வாரங்களுக்கெல்லாம் புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய தினத்தன்று அவள் வந்து விட்டாள்.

வித்யாவதி புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, கேதாரி அமர்ந்திருந்த மேஜைப் பக்கமாகச் சென்றாள். அவள் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தபோது அவன் தன்னையறியாமலே எழுந்து நின்றான்.

"காண்டா மிருகம் தோன்றிய விதம் என்ற அந்தப் புத்தகம் உபயோகமாக இருந்ததா?" என்று விசாரித்தான்.

"படித்து முடித்து விட்டேன். குறிப்புக்கள் கூட எழுதி வைத்துக்கொண்டேன்" என்றாள்.

"நான் இந்த விஷயத்தைப் பற்றி வேறு சிலபுத்தகங்களும் எடுத்துவைத்திருக்கிறேன்" என்று கேதாரி கூறினான். பிறகு மேஜை டிராயரைத் திறந்து நாலைந்து புத்தகங்களை எடுத்து அவள் முன் வைத்தான்.

அவள் அவற்றின் தலைப்புகளைப் பார்த்தாள். 'நீர்யானைகளின் மூதாதையர்கள்' 'மனிதக் குரங்கின் வரலாறு', யானைகள் காதலிப்பது எப்படி?' என்ற தலைப்புகளைப் பார்த்துச் சிரித்தாள்.

"நீங்கள் சிரமப்பட்டு எனக்காக இதையெல்லாம் தேடி எடுத்து வைத்திருக்கிறீர்கள். வந்தனம். ஆனால் எனக்கு இப்போது வேறு புத்தகங்கள் வேண்டியிருக்கிறது" என்றாள்.

"நிற்கிறீர்களே? உட்காருங்கள்" என்று கூறித் தானும் ஒருநாற்காலியில் அமர்ந்தான்.

"என்ன புத்தகம்?" என்று கேதாரி விசாரித்தான்.

"'ஊமத்தங்காய்க்கு ஏற்படும் வியாதிகள்; 'காமிரா அறைக்குள் சட்டியில் வைத்து வளர்க்கப்படக் கூடிய குரோட்டன்ஸ்கள்' என்ற இரண்டு புத்தகங்களும் தேவை" என்று வித்யாவதி கூறினாள்.

இதைக் கேட்டபோது கேதாரிக்குத் தலை சுற்றியது. அவள் எதற்காக இந்தப் புத்தகங்களையெல்லாம் படிக்க வேண்டும் என்று ஆச்சரியப்பட்டான்.

"அந்த இரண்டு புத்தகங்களும் இருக்கின்றன. எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறி எழுந்து சென்றான்.

அவன் விவசாயப் பகுதியில் அந்தப் புத்தகங்களைத் தேடி எடுத்துக்கொண்டிருந்தபோது வித்யாவதியும் அவன் பக்கத்தில் வந்து நிற்கக் கண்டான்.

அவன் மூன்று புத்தகங்களை எடுத்து அவளிடம் கொடுத்தான். "'பூ இல்லாமல் பலாக்காய் காய்ப்பதெப்படி?' என்ற புத்தகமும் இருக்கிறது" என்று கூறினான்.

அவள் வழக்கம்போல் வந்தனம் கூறிவிட்டுப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு போய் விட்டாள்.


பிராணிகளை விட்டுவிட்டு, செடிகொடிகளை எதற்காகப் பிடித்துக் கொண்டாள் என்று கேதாரிக்குப் புரியவில்லை. அவளைப் பற்றி மறந்து தொலையலாமென்றால் அவனால் முடியவில்லை. வாசகசாலையில் 'ஞாபகம் வைத்துக் கொள்வதெப்படி?' என்பதைப் பற்றிய புத்தகங்கள் இருந்தனவேயன்றி 'மறப்பதெப்படி' என்பதைப் போதிக்கும் புத்தகம் ஒன்றும் இல்லை. இருந்தால் அதைப் படித்துப் பார்த்திருப்பான்.

மறுமுறை வந்தபோது அவள் "மின்சாரத்தால் மோட்டார் வண்டிகள் ஓடச் செய்வதெப்படி?", "மின்சாரத்தின் விந்தைகள்" என்ற புத்தகங்கள் வேண்டுமென்று கேட்டாள்.

ஷெல்பில் உயரே யிருந்த அந்தப் புத்தகங்களை அவன் தானே ஏணியின் மீதேறி எடுத்தான். அவன் அவற்றை எடுத்துக்கொண்டு கீழே இறங்கும்போது அவனையே கவனித்துக் கொண்டிருந்த வித்யாவதி கையை நீட்டி அந்தப் புத்தகங்களை வாங்கிக்கொண்டாள். அப்போது தற்செயலாக அவள் விரல்கள் அவன் கைமீது படவே, அவனுக்கு உடலில் அதிர்ச்சி ஏற்பட்டது. இந்த மின்சாரத்தின் விந்தையைப் பற்றி ஆச்சரியப்பட்டவனாய், அவன் கீழே இறங்கினான்.

அவள் புத்தகங்களை எடுத்துக் கொண்டு போய்விட்டாள். அவள் சர்வ சாதாரணமாக எத்தகைய உணர்ச்சியையும் காட்டாமல்

சீரிய திட்டமே வெற்றிக்கு வழி



எல். ஐ. சி-
எல்லா வகையான
இன்சூரன்சுகளுக்கும்

பேசி நடந்து கொள்வது அவனுக்கு ஆச்சரிய மாயிருந்தது.

* * *

மறுமுறை அவன் வந்தபோது எந்தப் புத்தகம் வேண்டும் என்று கேதாரியைக் கேட்கவில்லை. பத்திரிகைகள் போடப்பட்டிருந்த மேஜைகள் பக்கம் சென்று தத்துவ சாஸ்திரப் பத்திரிகைகளை எடுத்துப் படிக்கலானுள்.


அவன் வழக்கம்போல் இன்ன புத்தகம் வேண்டுமென்று தன்னைக் கேட்காததால் கேதாரி ஏமாற்றம் அடைந்தான். தான் மின்சார சம்பந்தமான புத்தகங்களை எடுத்துக் கொடுத்தபோது தன் கை அவள் கைமீது பட்டுவிட்டதைப் பற்றி அவள் தவறான அபிப்பிராயம் கொண்டுவிட்டாளோ என்று சந்தேகம் அவனுக்கு. அவன் இதைப் பற்றித் தன் மண்டையை உடைத்துக் கொண்டிருந்தான்.

அரை மணி நேரத்துக்கெல்லாம் வித்யாவதி மூன்று புத்தகங்களை எடுத்துக்கொண்டு வந்து அவனெதிரில் உட்கார்ந்தாள். அவை, பிரபுலிங்க லீலை, பல தேச வேதாந்தங்கள், திருமூலர் திருமந்திரம் ஆகிய புத்தகங்கள். அவற்றைப் பார்த்த கேதாரிக்குத் தலை சுற்றியது. காண்டா மிருகத்தையும், ஊமத்தங்காயையும், மின்சாரத்தையும் பற்றிப் படித்து வந்த பெண் திடீரென்று வேதாந்தம் படிக்கத் தொடங்கியிருப்பதைப் பற்றி அவன் சந்தேகப்பட்டான். அந்தச் சந்தேகத்துடன் அவன் அவளை ஒரு விதமாகப் பார்த்தான்.

''என்ன பார்க்கிறீர்கள்?'' என்று வித்யாவதி சிரித்துக் கொண்டே கேட்டபோது அவன் நடுங்கிவிட்டான். அவள் தன் மனத்திலுள்ளதை ஊகித்துக் கொண்டுவிட்டாளோ என்று. ''இதுமாதிரி புத்தகங்கள் இன்னும் என்ன எடுத்துக் கொடுக்கலா மென்று யோசனை செய்து கொண்டிருக்கிறீர்களா? எனக்கு இவை போதும். சில பழைய கவடிகள் வேண்டும். அத்துடன் வாசகசாலைக்கு வருவதை நிறுத்திக் கொள்ளப் போகிறேன்'' என்று கூறினுள். பிறகு எழுந்திருந்து புத்தகங்களைக் குமாஸ்தாவிடம் கொடுத்துப் பதிவு செய்யச் செய்து பெற்றுக் கொண்டு அங்கிருந்து போய்விட்டாள்.

கேதாரிக்கு இப்போது விஷயம் நிச்சயமாயிற்று. படித்துப் படித்து அந்தப் பெண்ணுக்கு மூளை கலங்கிப் போயிருக்கிறதென்று. அவன் அவளுக்காகப் பரிதாபப் பட்டான். மறுநாள் அவளது பெற்றோர்களைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி, அவளுக்குச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யச் சொல்ல வேண்டுமென்று தீர்மானித்தான். அவள் வீட்டு விலாசம் லைப்ரரி டிக்கட்டுகளிலிருந்ததை அவன் குறித்து வைத்துக் கொண்டிருந்தான்.

வித்யாவதி சென்று ஒரு மணி நேரமாகியிருக்கும். ஒரு பெரியவர் வாசகசாலைக்குள் நுழைந்து அங்குமிங்கும் பார்த்தார். அவர் புத்தகங்களைக் கவனிக்கவில்லை. வந்திருக்கும் வாசகர்களைத்தான் கவனிக்கிருர் என்று கேதாரிக்குத் தோன்றியது. அவர் கடைசி வரிசையில் சில பெண்கள் இருப்பதைப்





பார்த்துவிட்டு நேரே அங்கே போனார். பிறகு விரைந்து திரும்பி வந்தார்.

கேதாரி அவரிடம் போய், "தங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும்?" என்று மெதுவாகக் கேட்டான்.

"ஒரு புத்தகமும் வேண்டியதில்லை" என்று அவர் வெறுப்புடன் கூறினார். பிறகு "என் பெண் இங்கே படிக்க வருவதாகச் சொன்னாள். பார்க்க வந்தேன்!" என்றார்.

"யார் வித்யாவதியா?" என்ற கேள்வி கேதாரியின் வாயிலிருந்து அவனை யறியாமலே கிளம்பிற்று. கேட்ட பிறகுதான் ஏன் அப்படி விசாரித்தோமென் றிருந்தது. அவன் அவளைப் பற்றியே, அவள் மனவியாதியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தவனுதலால் வந்திருந்தவர் அவளைத் தேடி வந்திருக்கலாமென்று அவனுக்குத் தோன்றிற்று.

அந்தப் பெரியவர் அவனை மேலும் கீழும் ஒரு தடவை பார்த்தார். "நான் வித்யாவதியின் தந்தை லோகநாதன். தாங்கள்...." என்று கேட்டார்.

"நான் உதவி லைப்ரேரியன். கேதாரி என்று பெயர்."

"ஓ! நீங்கள்தானு அது?" என்று லோகநாதன் கூறி மறுபடியும் அவனை நன்ருக உற்று நோக்கினார்.

"தங்களிடம் தனியாக ஒரு விஷயம் பேச வேண்டும்" என்ருர் அவர்.

இதைக் கேட்டபோது கேதாரிக்குப் பீதி ஏற்பட்டது. அவர் தான், தம் பெண்ணின் கையைத் தொட்டுப் புத்தகங்களைக் கொடுத்ததற்காகக் கலாட்டா செய்ய வந்திருக்கிருர் என்று நினைத்தான்.

அப்பொழுது வாசகசாலை மூடும் மணி ஆகிவிட்டதால், அவன் அவரையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்தான். இருவரும் அங்கிருந்த புல் தரையில் உட்கார்ந்து கொண்டு பேசலானுர்கள்.

"ஒன்றுமில்லை. என் மனைவி உங்களைப் பார்த்துவிட்டு வரச் சொன்னுள். அப்படியே உங்கள் வீட்டுக்குப் போய் உங்கள் ஜாதகத்தையும் வாங்கிக்கொண்டு வரச் சொன்னுள். வித்யாவதி உங்களைப் பற்றி..." என்று லோகநாதன் ஆரம்பித்ததும், கேதாரியின் மார்பின் படபடப்பு அடங்கிற்று. ஆனுல் இப்போது அது வேறுவிதமாக மகிழ்ச்சியுடன் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

* * *

கேதாரிக்கும் வித்யாவதிக்கும் திருமணம் நடக்த முகூர்த்த நாள் நிச்சயமாயிற்று. அதற்குச் சில தினங்கள் முன்னர் வித்யாவதி ஒரு நாள் வாசகசாலைக்கு வந்தாள். "இனி மேல் நீ இந்தப்பக்கம் தலைகாட்ட மாட்டாயென்று நினைத்தேன். இப்போது உனக்கு என்ன விதப் புத்தகங்கள் வேண்டும்?" என்று கேட்டான் கேதாரி.

"எனக்கா, இப்போதா? விண்வெளி சம்பந்தமான புத்தகங்கள் வேண்டும்" என்று வித்யாவதி கூறினுள்.

"வேண்டிய புத்தகங்கள் இருக்கின்றன. எடுத்துக் கொடுக்கிறேன். ஆமாம், உன்னை ஒன்று ரொம்ப நாட்களாகக் கேட்க வேண்டுமென்பது. ஒரு நாள் பிராணி நூல் புத்தகங்கள் படித்தாய், இன்னொரு நாள் விவசாயம், கடைசியில் வேதாந்தப் புத்தகங்கள் படித்தாய். ஏன் அப்படி விதம் விதமாக மாற்றிக் கொண்டே போனுய்?" என்று கேட்டான் கேதாரி.

வித்யாவதி பதில் சொல்லாமல் சிறிது தாமதித்தாள்.

"என்னுடன் பேசுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ளத்தானே?"

"இல்லை!" என்று வித்யாவதி சற்றுக் கோபமாகவே சொன்னுள்.

"பின்னே?"

"என்னை ஒரு பிராணி நூல் பேராசிரியர் பையன் பார்ப்பதற்கு வருவதாக இருந்தான். அதற்காக அந்த சாஸ்திரப் புத்தகங்களை வாங்கிப் படித்தேன்; பேசும்போது அதைப் பற்றி எனக்கும் தெரியும் அறிவு இருக்கிறது என்று காண்பிப்பதற்காக. அப்புறம் ஒரு விவசாய இலாகா உத்தியோகஸ்தர் வந்தார். பிறகு ஒரு மின்சார என்ஜினியர் வந்தார். அப்புறம் ஒரு வேதாந்த ஆராய்ச்சி மாணவர் வந்தார்" என்ருள் வித்யாவதி.

"ஆமாம், இப்போது விண்வெளிப் புத்தகம் எதற்கு?" என்று கேதாரி கேட்டான்.

"நான் இப்போது இந்த உலகத்திலில்லை. சந்தோஷத்தால் விண்வெளியில் பறந்து கொண்டிருக்கிறேன்!" என்ருள்.


எல்லா
வேலையும்
என்
தலையிலே!
எல்லா வேலையும் நானே செய்ய
வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்...
எனக்கோ ஒரே சோர்வு. குழந்தைகள்,
சமையல், வீட்டுவேலை
எல்லாவற்றையும் எப்படி
நானே சமாளிக்க முடியும்...
என் கணவர் ஒரு நாள்
ஹார்லிக்ஸ் வாங்கி
வந்தார். ஹார்லிக்ஸ்
பருகினால் இழந்த
சக்தியை மீண்டும்
பெறலாம் என்றார்!
இப்பொழுது
என்னைப்
பாருங்கள்!
திட
ஆரோக்கியத்
துடன் தெம்பும்
சுறுசுறுப்புமாய்
இருக்கிறேன்.
எல்லாம் ஹார்லிக்ஸ்
செய்த நன்மை!
Horlicks
போஷாக்குக் குறைவினால்
ஏற்படும் சோர்வும்
தளர்ச்சியும் நீங்க
ஹார்லிக்ஸ் பருகும்படி
டாக்டர்கள் சிபாரிசு
செய்கிறார்கள். ஆடைச்
சத்து நிறைந்த பால்,
கோதுமை மாவு,
மால்ட்டட் பார்லி இவற்றின்
போஷாக்குச் சத்துக்களை
ஒருங்கே கொண்ட
ஹார்லிக்ஸ் இழந்த
சக்தியை மீண்டும் பெற
உதவுகிறது என்பது
டாக்டர்களுக்குத்
தெரியும்.
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி
அளிக்கிறது!

வட்டமேஜை



வீண் விரயம்


இந்தியைப் பரப்புவதற்காகக் கல்லூரிகளில் இந்தி படிக்கும் மாணவர்களுக்கு அரசாங்கம் உதவிப் பணம் கொடுக்க முன்வந்துள்ளது குறித்துத் தமிழக அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையை மதுரை நகர் மாணவர் குழு வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

''இந்தியால் தமிழுக்கு ஆபத்து இல்லை. ஆபத்து வரவிட மாட்டோம்'' என்று கல்வி நிலையங்களில் உள்ள உண்மை நிலை தெரியாத பாமர மக்களிடம் அரசியல் தலைவர்கள் ஓயாமல் கூறுகின்றனர்கள். கல்லூரிகளில் இன்றைய நிலையில் ஆங்கிலம் கட்டாய முதல் பாகம். இரண்டாம் பாகத்தில் தமிழ், இந்தி, சமஸ்கிருதம், பிரெஞ்சு போன்ற மொழிகளுள்ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்த நிலையில் ஓர் ஏழை நாட்டில் எப்படியாவது படித்து முன்னேற வேண்டும் என்னும் ஆவல் மிகுந்திருக்கும் நிலையில் இந்தி படிப்பதற்கென்று மட்டும் தனிப் பணச் சலுகைகள் அளிப்பது மறைமுகமாகத் தாய் மொழியைப் புறக்கணிப்பதாகும்.



இன்னும் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, ஆரம்பக் கல்வி இவற்றிலேயே நிறைவு இல்லாத நாட்டில் ஒரு மூன்றாவது மொழியைப் பரப்ப இவ்வளவு பணச் செலவுகள் செய்வது ஆடம்பரம்; மக்களின் வரிப் பணத்தின் வீண் விரயம்.

மதுரை
24–7–65 எஸ். தனசேகரன்



ஹோசூரில் தொழிற்பேட்டை

சேலம் ஜில்லா தமிழ் நாட்டின் மிகப் பெரிய ஜில்லாவாக விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் இதுவரை விளங்கி வந்தது. சமீபத்தில் அரசாங்கம் சேலம் ஜில்லாவின் வடபகுதியைத் தர்மபுரி என்கிற பெயருடன் புதிய ஜில்லாவாக அமைக்கத் தீர்மானித்திருக்கிறது. இதற்குத் தலைநகர் தர்மபுரியென்றும் முடிவாகியிருக்கிறது. ஜில்லா கோர்ட் எங்கு வைப்பதென்று இன்னும் முடிவாகவில்லை. ஜில்லாவின் வட கோடியிலுள்ள ஹோசூரில் ஒரு தொழிற்பேட்டை அமைய பல சாத்தியக்கூறுகள் உள்ளன. பஞ்சாபிலிருந்து திருவனந்தபுரம் வரையிலும் ரயில் பாதை இணைப்பு ஹோசூர் வழியாகச் செல்கிறது. மேலும் மைசூர் ராஜ்யத்தின் தலைநகராகிய பெங்களூர் ஹோசூருக்கு அருகிலேயே இருக்கிறது. பெங்களூரிலுள்ள விமான உற்பத்தி ஸ்தலம், மெஷின் யந்திரங்கள் உற்பத்தி சாலை, பாரத் எலக்ட்ரானிக்ஸ் போன்ற மாபெரும் தொழில் நிலையங்களுக்கு அனுசரணையாக உபகரணங்களைச் செய்யும் தொழிற்பேட்டையை ஹோசூரில் அமைப்பது ஒரு சிறந்த யோசனையாகும். பின்தங்கிய பிரதேசமும் வளர்ச்சி பெற வழி ஏற்படும். இதை ராஜ்ய அரசாங்கம் நிறைவேற்றும் என்று நம்பவும் எதிர்பார்க்கவும் செய்கிறேன்.

24–7–65 வி. ஆர். நரசிம்மன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

சிமெண்ட் தொல்லை

காங்கிரஸ் கட்சியின் பதினேழாண்டு ஆட்சியில் மக்களுக்குக் கிடைக்காத பொருள்களின் பட்டியல் நீளுகிறது.

மழை நீர் கசியாமல் இருக்க மின்சாரக் கம்பி வீட்டுக்குள் நுழையும் இடத்தில் ஓர் இரும்புக் குழாய் பொருத்துகிறோமே, அதன் அடிப்புறத்தில்லோர் அடைப்புக் கட்டுவது வழக்கம். அந்த அடைப்புக்கு சிமெண்டைத்தான் உபயோகித்தேன். அதற்காகத் தேவைப்பட்ட கேவலம் இரண்டு அல்லது மூன்று கிலோ சிமெண்டு பெறுவதற்காகக் கள்ள மார்க்கெட்டைத்தான் நாட வேண்டி நேரிட்டது. சில நாட்கள் சென்றதும் ஒரு சிறு மழை பெய்தது. இந்த மழையில் சிமெண்ட் முழுதும் கரைந்து விட்டது! அந்த அளவுக்குக் கள்ள மார்க்கெட் சிமெண்டில் சாம்பல் கலப்படம் செய்யப் பட்டிருக்கிறது.

இதுதான் போகட்டும் என்றால் வீட்டுச் சுவர்களில் ஆங்காங்கே பூச்சு உதிர்ந்து செங்கற்கள் விழுகின்றன. கொஞ்சம் சிமெண்ட் கிடைத்தால் போதும், பழுது பார்த்து மேல்சுவர் சேதமடையாமல் காப்பாற்றலாம். ஆனால் ஆட்சியாளரின் இப்போதைய சிமெண்ட் கொள்கைப்படி சுவர்கள் முழுக்க முழுக்கத் தம் பூச்சை உதிர்த்துச் செங்கற்கள் பெயர்ந்து விழுந்து வீடு பல்லிளிக்க வேண்டும். ஐந்து மூட்டை சிமெண்ட் வேண்டுமென்று கேட்டு ஊர் முன்சீப் சிபாரிசு செய்து கையெழுத்திட்ட அப்ளிகேஷன் அனுப்பி, தாசில்தாரையோ சம்பந்தப்பட்ட ஸொர்க்கையோ பத்து முறை போய்ப் பேட்டி காண வேண்டும். இத்தியாதி பல சடங்குகள் மூலம் நாம் சிமெண்ட் பெறுவதற்குள் வீடே இடிந்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தேசூர்
10–8–65 க. சுப்பிரமணியம்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10



பனாமா ஒரு நல்ல சிகரெட்டு...

இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை



தேர்ந்தெடுத்த வர்ஜீனியாப்
புகையிலைகளின் கலவைப்
பலனாக தண்மையான
புகையம் — அதுவே
உங்கள் பனாமா!

செழுமையான
வர்ஜீனியாப் புகையிலை
சீர்திரவிய கலவை
புதுமை மயமானது

பிரத்தியேகத் தயாரிப்பாளர்கள்:
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட்
பம்பாய்-56

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது

ST. 636-C Greens' Advtg.